www.padippakam.com

# கவிஞர் சுபத்திரன் கவிதைகள்



தொகுப்பு

சி. மௌனகுரு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கவிஞர் சுபத்திரன் கவிதைகள்

தொகுப்பு : சி. மௌனகுரு

தேசிய கலை இலக்கியப் பேரவை



படிப்பகம்

www.padippakam.com

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு 49

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | கவிஞர் சுபத்திரன் கவிதைகள் |
| பதிப்பு | : | யூலை, 2002 |
| வெளியீடு | : | தேசிய கலை இலக்கியப் பேரவை |
| அச்சிட்டோர் | : | கௌரி அச்சகம் |
| முகப்பு ஓவியம் | : | இரா. சடகோபன் |
| விநியோகம் | : | சவுத் ஏசியன் புக்ஸ், வசந்தம் (பிறைவேற்) லிமிட்ட், 44, மூன்றாம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி, கொழும்பு -11. தொலைபேசி : 335844. |

விலை ரூபா. 200/=


| | | |
|---|---|---|
| Title | : | Kavignar Subathiran Kavithaikal |
| Edition | : | June, 2002 |
| Publishers | : | Theshiya Kalai Ilakkiyap Peravai |
| Printers | : | Gowry Printers |
| Cover Design | : | R. Shadagopan |
| Diustributors | : | South Asian Books, Vasantham (Pvt) Ltd, No. 44, 3rd Floor, C.C.S.M. Complex, Colombo -11. Tel : 335844 |
| ISBN No | : | 955-8637-12-2 |

Price: Rs. 200/=



படிப்பகம்

www.padippakam.com



# சுபத்திரன்

(க. தங்கவடிவேல்)

பிறப்பு : 16.04.1935 இறப்பு: 30.10.1979



படிப்பகம்

www.padippakam.com

உள்ளே...


1. பதிப்புரை

2. தொகுப்புரை

3. கவிஞரின் கையெழுத்திற் கவிதைகள்

4. கட்சி சார் கவிதைகள் 1 - 20

5. மானுட கானம் 21 - 69

6. சாதிபேத எதிர்ப்புக் கவிதைகள் 71 - 91

7. குறுங் கவிதைகள் 93 - 98

8. அனுபவத் தெளிப்பு 99 - 116

9. நெடுங்கவிதைகள் 117 - 150

10. இசைப் பாடல்கள் 151 - 154




படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

அறுபதுகளின் ஆரம்பம் வர்க்கப் போராட்டக் கருத்துக்கள் உச்சமடைந்து புரட்சிகரப் பாதை பாராளுமன்றப் பாதை என விவாதம் கண்டு அணி பிரிந்த காலமாகும். அவ்வேளையில் சுபத்திரன் புரட்சிகர பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டில் நின்று எணர்வு மிக்க கவிதைகள் படைத்தவர்.

தமிழ் மக்கள் மத்தியில் யாழ்ப்பாணத்தில் 1960களில் நடைபெற்ற தீண்டாமைக்கெதிரான வெகுஜனப் போராட்டத்தில் கவிஞர் சுபத்திரன் படைத்த கவிதைகள் ஒடுக்கப்பட்ட தமிழ்ப் போராளிகளுக்கு எழுச்சியூட்டின.

யாழ் முற்றவெளி மைதானத்தில் நடந்த எழுச்சிக் கூட்டங்கள் முதல் குக்கிராமங்கள் ஈறாக நடைபெற்ற பேரெழுச்சிகளில் கவிஞர் சுபத்திரன் பங்குபற்றிக் கவிதை முழக்கம் செய்தார். அவரது பாடல்கள் பிற போராளிக் கலைஞர்களால் இசை கூட்டிப்பாடப்பட்டன.

தமிழ் மக்கள் மத்தியில் ஈழத்தில் நடைபெற்ற முதலாவது ஜனநாயகப் போராட்டமென கணிக்கப்பெறும் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போரில் சாதியின் பேரால் இரண்டுபட்ட தமிழர்களை ஒன்றுபடுத்திய பேரணியில் முன்னின்றுழைத்த தோழர்களுடன் கவிஞர் சுபத்திரன் களத்தில் நின்ற தோழராக விளங்கினார்.

1977 'மே'யில் கவிஞர் சாருமதி, பூவரசுகள் அமைப்பின் சார்பில் இவரது கவிதைகளை தொகுத்து ''சுபத்திரன் கவிதைகள்'' என்ற நூலாக வெளியிட்டார்.

எம்மால் வெளியிடப்படும் இந்நூல் சுவடி பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களால் ஏற்கனவே தொகுக்கப்பட்டு முன்பே எமக்குத் தரப்பட்டது. எனினும் கவிஞர் சாருமதியின் வேண்டுதலின்படி பூவரசுகள் அமைப்பின் ''சுபத்திரன் கவிதைகள்'' நூலின் வருகைக்கு ஆதரவு வழங்கும் வகையில் இந்நூலின் வெளியீடு தாமதிக்கப்பட்டது.

காலந்தாழ்ந்தாலும் கவிஞர் சுபத்திரனின் கவிதைகள் காலத்தின் தேவையாய் பயன் தரவல்லன என்பதால் இவ்வெளியீட்டினை மகிழ்வுடன் நிறைவு செய்கிறோம்.

வெளிவராததும், இத்தொகுப்பில் சேர்க்கப்படாததுமான கவிஞர் சுபத்திரனின் பல கவிதைகள் பல நண்பர்களிடமும், இலக்கிய உறவுகளிடமும் இருக்கலாம். அவைபற்றிய தகவல் கிடைக்கும்பொழுது இந்நூல் சுவடியை மேலும் அடுத்த பதிப்புகளில் இன்னும் பூரணமாக வெளிக்கொணரலாம் என்பது எமது ஆதங்கமாகும். கவிஞர் சுபத்திரன் பற்றிய முழுமையான அறிக்கைக்கு இது பேருதவியாக அமையும்.

இந்நூலைத் தொகுத்தளித்த பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களுக்கும் கவிஞர் சுபத்திரனின் பாரியார் திருமதி சுபத்திரா தங்கவடிவேல் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

அட்டைப்படம் வரைந்த கவிஞரும் ஓவியரும் பத்திரிகையாளரும் சட்டத்தரணியுமான இரா. சடகோபன் அவர்களுக்கும் கணனி வடிவமைத்த சோபனா, சிந்தியா ஆகியோருக்கும், இந்நூலை அச்சிட்டு வழங்கிய கௌரி அச்சகத்தினருக்கும், திரு. இராஜரட்ணம் அவர்களுக்கும் எமது நன்றிகள்

கவிதை விமர்சனங்களை வரவேற்கிறோம்.

**தேசியகலை இலக்கியப் பேரவை**

இல. 44, 3-ம் மாடி
கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி
கொழும்பு - 11
தொலைபேசி : 335844.



படிப்பகம்

www.padippakam.com

# தொகுப்புரை

கவிஞர் சுபத்திரனின் கவிதைகளைத் தொகுத்து, வகுத்து எடுக்கையிலும் அதற்கான சில குறிப்புக்களை எழுதுகையிலும் சுபத்திரனோடு நெருக்கமாகப் பழகிய அந்தப் பழைய காலங்களும், நினைவுகளும் ஞாபகத்திற்கு மீண்டும் வருகின்றன.

இக் கவிதைகளுள் மிகப் பெரும்பாலானவற்றைச் சுபத்திரன் வாசித்துக் காட்ட நான் கேட்டிருக்கிறேன். இக்கவிதைகள் பற்றி நாங்கள் இருவரும் உரையாடியிருக்கிறோம்; விவாதித்துமிருக்கிறோம். அக் கவிதைகள் உருவாக்கியமைக்கான பின்னணிகளையும் நான் அறிவேன். அவை தனியாக எழுதப்பட வேண்டியவை.

சுபத்திரனோடு எனக்கு 1958இல் ஏற்பட்ட தொடர்பு அவன் இறக்கும் வரை தொடர்ந்தது. மிகத் தீவிரமான குணாதிசயம் சுபத்திரனுடையது. எதிலும் தீவரமாக ஈடுபடுவான்; திரிகரண சுத்தியுடன் ஈடுபடுவான்; அவன் முழுக்க முழுக்க ஓர் அரசியல் பிராணியாகவே வாழ்ந்தான்.

தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளனாக, பிரசாரகனாக ஐம்பதுகளில் இருந்த சுபத்திரன் அதன் கொள்கைகளோடு முரண்பட்டு அறுபதுகளின் ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கொள்கிறான். 1965இல் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் எழுந்த தத்துவார்த்தப் போராட்டத்தில் சீனாவின் போக்கை ஆதரித்த கம்யூனிஸ்ட் பிரிவில் இணைந்து அதனது மிகத் தீவிரமான ஆதரவாளனானான். அதிலும் சிற்சில முரண்பாடுகள் கண்டு 1971களில் உருவான சோசலிஸப் புரட்சி பேசிய சிறு சிறு இயக்கங்களின் தூரத்து அனுதாபியாக வாழ்ந்தான். இறுதியில் விரக்தியுற்று தற்கொலை செய்து கொண்டான்.

சுபத்திரனின் வாழ்வு மிகுந்த தீவிர போக்குடைய ஒருவனின் வாழ்வாகவே எனக்குப்படுகிறது. இலங்கையிற் சோசலிஸப் புரட்சி வரும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து அதற்காக உள்ளும் புறமும் தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து உழைத்த ஒருவன் அவன். அந்த உண்மையான வேகம்தான் அவனை அவன் சார்ந்த அமைப்புகளோடு முரண்பட வைத்தனபோலும்.

புரட்சிக்காரனான சுபத்திரன் மிகுந்த மனித நேயமும், இரக்க சுபாவமும் இளகிய மனமும் கொண்டவன். தன்னலம் என்பது கடுகளவு தானும் சுபத்திரனிடம் இருக்கவில்லை.



படிப்பகம்

சுபத்திரனின் கருத்துக்களின் வாகனம் பேச்சும்/கவிதையும் ஆகும். கவிதையை அவன் ஓர் அரசியல் ஆயுதமாகவே பிரயோகித்தான்.

கட்சியினதும், கட்சிக் கொள்கைகளினதும் கட்டுப்பாட்டிற்கு விசுவாசமான ஒரு கவிஞனாகவே அவன் இருந்தான்.

அடக்கப்பட்டவர்களினது குரலாக அவன் கவிதைகள் ஒலித்தன. சாதியின் பெயரால், இனத்தின் பெயரால், நிறத்தின் பெயரால், வர்க்கத்தின் பெயரால், எந்த உருவிலும் அடக்கப்படும் மக்கள் பக்கம் அவன் குரல் ஓங்கி ஒலித்தது.

மக்களே அவனுக்கு முக்கியம். மற்றதெல்லாம் பின்னால் என்பது அவனது திடமான நம்பிக்கை.
மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்த அவன் ஓரிடத்தில்

'எல்லாம் வல்ல மனிதனேயுன்னை
வெல்லுதற் கிந்தப் பிரபஞ்சத்துள்
எதுவுமேயில்லை'

என்று கூறுகிறான்.

இவ்வண்ணம் தன் எழுத்துக்களைக் கட்சிசார் கொள்கைகளுக்குள் கட்டுப்படுத்தியமையினால் கட்சிப்பிரசாரக் கவிஞன் என்ற பெயர் அவனுக்குக் கிடைத்தது. ஆனால் அவனுள் ஒரு கவிஞன் இருந்தமை அவனோடு உறவாடியோருக்குப் புரியும். இக் கவிதைகள் அனைத்தையும் மொத்தமாகப் படிக்கையில் அவனது கவித்துவத்தையும் சுவைஞர் புரிந்து கொள்வர்.

எளிமையான சொற்களையும் பல்வேறு பா வடிவங்களையும், கையாண்டுள்ள சுபத்திரனின் நேர்க் கவிதைகளில் மனோரதிய கற்பனைகளையும், பிரமாண்டமான உவமைகளையும், உருவகங்களையும் காணமுடிகிறது.

நிறைந்த சிந்தனையாளன் அவன்; நிறையவே செய்ய எண்ணியவன் அவன்.

"எழுதும் கவிதை ஆயிரம் என்றால் எழுத மறந்தது கோடி எனலாம்" என்று ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளான்.

சுபத்திரனின் கவிதைகளைத் தனது M.A பட்டத்திற்கு ஆய்வுப் பொருளாக எடுத்து திரு. யோகநாதன் (சாருமதி) ஆராய்ந்துள்ளார். சுபத்திரனின் பல பாடல்களை இதற்காக அவர் தேடிச் சேகரித்தார். சிறப்பான அந்த ஆய்வுக் கட்டுரை நூல் வடிவில் வருமாயின் சுபத்திரன் பற்றியும், அவனது கவிதைகள் பற்றியும் வாசகர்கள் நிறையவே அறியும் சந்தர்ப்பம் ஏற்படும்.

சுபத்திரனை இன்றைய தலைமுறையினர் அறியார். அவனோடு பழகியவர்களின் நினைவிலே தான் சுபத்திரன் வாழ்கிறான். ஆனால் இக்கவிதைத் தொகுப்பினால் சுபத்திரனைப் பலர அறியும் வாய்ப்பு ஏற்படும். அவன் தொடர்ந்தும் வாழ்வான்.

சுபத்திரன் பற்றி, சுபத்திரனின் கவிதைகள் பற்றி இன்னும் சரியான மதிப்பீடு இடம் பெறவில்லை குறிப்பாக ஈழத்துக் கவிதை உலகிலும் சிறப்பாக முற்போக்கு இலக்கிய உலகிலும் அவன் ஸ்தானம் நிர்ணயம் செய்யப்படவில்லை.

அரங்கு இன்றி வட்டாட முடியுமா? சுபத்திரனின் கவிதைகளை ஒன்றாகக் காணாமல் விமர்சனம் செய்ய முடியுமா? அரங்கு இப்போ கண்முன் தோன்றுகிறது. சுபத்திரனின் கவிதைகள் தொகுதியாக வெளிவருகின்றன. சுபத்திரனை மக்களும், விமர்சகர்களும் அறிந்து கொள்ளப் பெரிய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

மக்களே மகாசக்தி என மதித்த சுபத்திரனின் கவிதைகள் பற்றிய மதிப்பீட்டையும் மக்களே வழங்குவார்கள்.

வசதி கருதி சுபத்திரனின் பாடல்கள் கட்சி சார் கவிதைகள் / மானுட கானம் / சாதி பேத எதிர்ப்புக் கவிதைகள் / குறுங் கவிதைகள் / அனுபவத் தெளிப்பு / நெடுங் கவிதைகள் / இசைப் பாடல்கள் என 7 பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. இதற்கான பிரத்தியேகக் காரணங்கள் எதுவும் இல்லை. சுபத்திரனின் கவிதைகளை விளங்க சுவைஞரை ஆற்றுப்படுத்த எடுத்த முயற்சிகளே இப் பிரிப்பு.

இவற்றுட் சாதி பேத எதிர்ப்புக் கவிதைகள் யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் போது நண்பர்களால் 'இரத்தக்கடன்' என்ற சிறு நூலாக வெளியிடப்பட்டவை. (அதில் சங்கானை பற்றிய பாடல் இடம்பெற்றிருக்கவில்லை).

சில கவிதைகள் தொழிலாளி, வசந்தம், குமரன் முதலான பத்திரிகைகளில் வெளிவந்தவை.

சில கவிதைகள் கவியரங்குகளிற் கவிஞரால் வாசிக்கப்பட்டவை.

சில கவிதைகள் பிரசுரமாகாது எழுத்துருவில் கவிஞர் வீட்டிலும் நண்பர்களிடமுமிருந்தவை.

www.padippakam.com

கவிஞர் எழுதிய கவிதைகளும் ஆக்கங்களும் இன்னுமுள்ளன. இவை அனைத்தும் மேலும் தேடப்பட்டு 2ம் பதிப்பிற் சேர்க்கப்பட வேண்டும். கவிஞரின் ஆக்கங்களைச் சேர்த்து வைத்திருப்போர் இதற்கு உதவ வேண்டும்.

சுபத்திரனின் கவிதைகள நூலுருவிற் கொண்டு வரவேண்டும் என்று அவனது நண்பர்களும், தோழர்களும் பல தடவைகள் முயன்றனர். அம் முயற்சி இன்று ஈடேறுவது கண்டு அனைவரும் மகிழ்வர் என்றே நம்புகிறேன்.

சுபத்திரனின் சில கையெழுத்துப் பிரதிகளைத் தந்துதவிய நண்பர்கட்கும், குறிப்பாக கவிஞரின் மனைவி சுபத்திராவுக்கும் எமது நன்றிகள்.

இம் முயற்சிக்கு உறுதுணையாக இருந்து எம்மை ஊக்கி இந்நூலை வெளியிட முயற்சி எடுத்த திரு. க. சிவராஜா, திரு. சி. கா. செந்திவேல், திரு. சோ. தேவராஜா ஆகியோர் இங்கு அவசியம் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

**சி. மௌனகுரு**


கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை
செங்கலடி.



படிப்பகம்

www.padippakam.com

## கவிஞன் பற்றிக் கவிஞரின் கருத்துக்கள் அவரின் கையெழுத்தில்...






படிப்பகம்

www.padippakam.com

**மனிதன் பற்றிக் கவிஞர் நோக்கு**
**அவரின் கையெழுத்தில்...**


எல்லாம் வல்ல
மனிதனையன்றி
வெல்வதற் கொன்றும்
பிரபஞ்சத்தினிடம்
எதுவுமேயில்லை
ஏறு! ஏறு! இன்றே
மாநிலத் தலைமையில்
அணிவகுக்கின்ற
அணியிலே நில்லு
— சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## கவிஞர் சுபத்திரனின் கவிதைகள், அவரின் கையெழுத்தில்...

[illegible]

— சுபத்திரன்.



படிப்பகம்

www.padippakam.com

# கட்சி சார் கவிதைகள்

உலகத்தில் எங்கேனும் ஒரு புறத்தில்
உழைக்கின்ற ஒரு மனிதன் அல்லலுற்றால்
நிலத்தினில் வாழ்கின்ற தொழிலாளர்கள்
நெஞ்சத்தில் மறம் கொண்டு பொங்க வேண்டும்.

சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

## மறம் மேலாணை

விறுவிறுக்கும் என்கையால் பேனா தூக்கி
விறலொலிக்கும் கவிமட்டும் எழுதிவிட்டுக்
குறுமதியார் செய்கின்ற கூத்தைச் சும்மா
குரங்காட்டம் பார்ப்பதைப்போல் பார்க்கமாட்டேன்

அறுஅறுஎன் றெழுகின்ற அனல்படைக்குள்
அணுவெடித்து எழுகின்ற சக்தியாக
மறுதீர்க்கும் பலமாக துவக்கைத்தூக்கி
மதமாக நான் செல்வேன் மறம் மேலாணை
உலகத்தில் எங்கேனும் ஒரு புறத்தில்
உழைக்கின்ற ஒரு மனிதன் அல்லலுற்றால்
நிலத்தினிலே வாழ்கின்ற தொழிலாளர்கள்
நெஞ்சத்தில் மறங்கொண்டு பொங்கவேண்டும்
பலத்தாலே நாம் வளர்ந்து பெருத்துநின்றும்
பணப்பேய்க்கு பணிவதென்றால் அர்த்தமுண்டோ
பலத்தாலே பாரெல்லாம் வென்று இங்கு
பொதுவுடைமைப் பணிசெய்ய உறுதிகொள்வோம்.

சுபத்திரா (06.06.1964) தொழிலாளி

## புரட்சிக் கட்சி

இருபத்தி யொருவயது ஆனால் நம்மை
இளைஞனெனச் சொல்லிடுவார் பின்பு இந்த
இருபத்து .. முபத்து .. நாபத்தாகி
இப்படியே ஒருபத்து கூடிப்போக
ஒருமித்துக் கூடியவர் கிழவன் என்பார்
ஒன்றுக்கும் இனியாகா தென்றும் சொல்வார்
ஒரு சக்தி உலகத்தில் எங்குமுண்டு
இக்கதையோ அதன் வாழ்வுக் கொத்துப்போகா !

வயதாக வயதாக வைரம் பாய்ந்து
வளர்கின்ற சக்தியடா அந்தச் சக்தி
வயலெல்லாம் தொழிலாற்றும் ஆலையெல்லாம்
வளருதடா ..! வளருதடா ..! .. விம்மிப் பொங்கி
அயராது முவேழு ஆண்டாயிங்கு
அழுவோர்க்குத் துணையாகி அவர்கள் வாழ்வை
உயர்வாக்க, உழைக்கின்ற சக்தி ஈழப்
பொதுவுடைக் கட்சியடா என்றும் வாழும்
ஈழத்து முதலாளி தொழிலாளர்க்கு
குழைக்கின்ற துயரெல்லாம் உழைத்துத்தள்ள
களம்நோக்கித் தொழிலாளர் படையை வீரக்
கனலோடு செலுத்துங்கால் திரிபுவாதம்
விழல்வாதம் செய்தற்கு எழுந்தபோது
விறல்பெற்று அவ்வாத நோயர்தன்னை
அனல்மூட்டி அதற்குள்ளே அள்ளிப்போட்டு
அழித்தொழித்த சக்தியடா நமது கட்சி!

புரட்சியெனும் தீவளர்த்துப் புரட்சிச் சொல்லால்
புரட்சியுளத் தோழரெல்லாம் புரட்சிபொங்க
புரட்சிப்பா பாடியதால் புரட்சியோங்க
புரட்சிநடை இட்டிங்கு புரட்சியாலே
புரட்சிமணம் வீசுதடா புரட்சிஈழம்
புரட்சியெனப் புறப்பட்டுப் புரட்சிகாணப்
புரட்சியிலே விளைவான புரட்சிக்கொள்கை
புரட்சிதரப் பொங்குதடா புரட்சிக்கட்சி.

சுபத்திரா (24.07.1964)

சுபத்திரன்

www.padippakam.com

## உழவன்

இவனோர் புதிய உழவன்
இவனது வேலை விதைத்தல் வளர்த்தல்
இவனோர் புதிய உழவன்
இவனது வேலை வளர்ச்சியை ஊக்கல்
இவனோர் புதிய உழவன்
அறுத்திடும் போது ஊதியங் கேளான்
இவனோர் புதிய உழவன்
இவனைக் காண விரும்புவீராகில்
இவனே உம்மிடம் வருவான்
இவன் தன் நெஞ்சிடை சுமந்த, விதைகள்
உழைக்கும் மனிதனின் பார்வை
இவனே எமது உழவன்
இவனே எமது முழு நேர ஊழியன்.

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## மாக்சிஸமே மறுமலரே

மாக்ஸ் கண்ட தத்துவத்தை
மேடையேற்றி
ஆக்கமெனும் அணிகலனால்
அழகுசெய்து
வாக்கொளியால் திரிபுக்கு
வெடிகள் வைத்து
போக்கற்ற ஏழைகளைப்
பேணிக்காத்து
தூக்கத்தில் இருந்தவற்குத்
துணிவு ஊட்டி
தாக்க வந்த எதிரிகளைத்
தரையில் வீழ்த்தி
பூக்கட்டும் புதுப்புரட்சி
புதுமை நோக்கி
ஆக்கட்டும் புது உலகம்
என்று சொன்ன
தீக்கதிரே செங்கொடியே
லெனினே தூய
மாக்ஸிசமே மறுமலரே
அறிவே உம்மைப்
பாக்கொண்டு போற்றுதற்குப்
பாரில் இன்று
மா வோ வின் கவிக்குத்தான்
சக்தியுண்டு.

சுபத்திரா (01.05.1964) தொழிலாளி

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## கம்யூனிஸ்ட் கட்சி

வழி நடத்திச் செல்கின்ற சக்தி - எங்கள்
வளமான சிந்தனைக்கு வாழ்வூட்டும் சக்தி
பழி தீர்க்கும் போர்முறைகள் காட்டி - ஈழம்
பாட்டாளி வர்க்கத்தை ஒரு கொடியிற்கட்டி
விழித்தெழுந்த மக்களெல்லாம் சேர்த்து - நாளை
விழப்போகும் ஏகாதி பத்தியத்தைப் பார்த்து
ஒழிக என ஒலிக்கின்ற நாதம் - எங்கள்
உயிரான மா ஓவின் சிந்தனையின் போதம்.

தொழிலாளி (24.07.1968)

www.padippakam.com

## புரட்சித் தீ

கடமை பளிச்சிடுங் கண்ணால் - பொது
வுடைமை மணத்திடும் நெஞ்சால்
கடமை ஒழித்திடும் சொல்லால் - பெரும்
படையை நடத்தினான் ஸ்டாலின் !

இளய சோவியத் நாட்டை - அன்று
பழைய பாசிச நாய்கள்
வளைய உன்னியபோது - அதைக்
களைந்து வெற்றியைக் கண்டான்.

மார்க்ஸின் கொள்கையால் நாட்டில் - பெரு
மார்க்க வேலைகள் செய்தான்
காக்கை வன்னியர்தம்மை - உடன்
தூக்கில் ஏற்றவும் செய்தான்

ஏட்டுப் புரட்சியை விட்டு - மற்ற
நாட்டில் புரட்சிகள் தோன்ற
தீட்டித் தந்தனன் பாதை - அதைப்
பாட்டிற் சொல்லிட லாமோ

உள்ளம் இருப்பினை ஒக்கும் - சிவந்த
வெள்ளம் நினைவினில் பொங்கும்
துள்ளும் திரிபுவா தத்தை - முளையிற்
கிள்ளிட எறிந்தநல் வீரன்

புரட்சித் தீயிலே தோன்றி - லெனின்
புரட்சித் தீயிலே வாழ்ந்து
புரட்சித் தீயை வளர்த்து - உலகப்
புரட்சித் தீயாக நின்றான்.

(15.02.1964) தொழிலாளி

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

# மா ஓ என்ற சூரியன்

சீனமென்னும் பூமியிலோர் சங்கொலி - அது
சேதி என்ன சொல்லு தென்ன சங்கதி
ஈனரென்று வையமெல்லாம் வாழ்வர் - வெறும்
ஏழையென்று உலகிலே உழைப்பவர்
மானமின்றி நீண்டடிமை யாவதோ? - இந்த
மாநிலத்தை ஆண்டெழுந்து வாழ்வதோ?
ஞானமூட்டும் கேள்வியோடு நிற்குது - பதில்
மா ஓ என்ற சூரியனே சொல்லுது.

ஆள வந்த கைகளே நீபொங்குவாய் - இந்த
அவனியுனக்கேயுரிமை பொங்குவாய்
காலனென வந்து உனை வாட்டுவேன் - வெறும்
காகிதத்தால் ஆன புலிபோன்றவர்
நாளையவர் வீழுவது நிச்சயம் - நீ
நாநிலத்தை ஆழுவது சத்தியம்
தோழமையால் மாநிலத்தில் உள்ளவர் - ஒரு
தூயபணி கொண்டெழுந்து நின்றனர்

போரெழுந்து ஆடுகின்ற செவ்வகம் - கெட்ட
புல்லர்களைச் சாடும் வியட் நாமகம்
மார்பு காட்டிப் போர் புரியும் நீக்கிரோ - யாழ்
மண்ணைச் சாதிச் சேறிலிருந்து நீக்குவோர்
போரெனவே புதுமையுடன் பொங்கிறார் - இந்தப்
பார் முழுதும் புரட்சி என்று பாடுகிறார்
சீருயரச் செய்திடுமோர் ஆட்சியை - உடன்
செய்திடுவோம் என்றெழுந்து நிற்கிறார்.

தொழிலாளி (01.08.1968)



படிப்பகம்

www.padippakam.com

## மா ஓ சின்னம்

சூரியனின் துண்டெடுத்து விளிம்பு கட்டிச்
சுதந்திரத்துக்காய் உலகம் இறைத்த ரெத்த
வாரியிலே துளித்துளியாய் ரெத்தமள்ளி
வடிவாக விளிம்புள்ளே அடக்கி வைத்துப்
போரியம்பும் தத்துவத்தை உழைக்கும் மக்கள்
பாராளம் படைத்தவனின் உருவமிட்டுப்
பாரினிலே போராடும் மக்கள் நெஞ்சில்
பதித்திடவே வந்ததுதான் மா ஓ சின்னம்.




படிப்பகம்

www.padippakam.com

## உயிர்

லெனின் என்ற மாபெரிய இயக்கமின்று
உலகத்தின் உயிரான மா ஓ ஆக
இனிக்கின்ற செயலாகி எதிரிகட்குச்
கனவினிலும் கோடிக்கால் பூதமாகி
அணிகூட்டும் பாட்டாளி வர்க்கம் வெற்றி
அடைந்து வரச் சிந்தனைகள் ஈவோனாகிப்
பணியாத, மங்காத பகலோனாகிப்
பலமாகி நிற்கின்ற தலைவன் வாழ்க.

தொழிலாளி (06.09.1968)



படிப்பகம்

www.padippakam.com

**** ஈழத்தாய் ....**
**தேற்றுகிறாள் ....! விம்முகிறாள் ....!**

உலகின் விடுதலைக்கு உயர்ந்து சிவந்தகொடி
உன்மரணங் கேட்டுத் தலைதாழ்த்தி வணங்குதையா
நிலவு கசங்கியதோ ஆதவன் வதங்கியதோ
நெஞ்சு கலங்குதையா கண்கள் கசியுதையா
நிலத்தின் மொழிகளெல்லாம் நெஞ்சம் முருகியுன்னை
நினைத்துக் கவியெழுதும் வேளையிலே நானுமொரு
புலத்திற் பிறந்ததமிழ்ப் பேனையினைத் தூக்குகிறேன்
பூமித்தாய் பெற்றெடுத்த மாமகனை வாழ்த்துகிறேன்.

உன்னை அழைத்துவருங் காற்று எனதுடலை
அளையுதென நான் நினைத்து மகிழ்ந்த நினைவு உண்டு
உன்கண்கள் கண்டநிலா என்கண்கள் கண்டதென
ஊருகின்ற கற்பனையில் உலாவித் திரிந்ததுண்டு
என்கண்கள் எரிந்திருக்க உன்கண்கள் அணைந்ததென்ன?
உலக விடுதலையின் நாயகனே ஓய்ந்ததெல்லாம்
உந்தன் சடலமையா விடுதலையின் தத்துவத்தை
தந்து சென்ற மாஓவின் சிந்தனைக்கு மரணமில்லை.

சுபத்திரன்



படிப்பகம்

ஈன்றெடுத்து என்னை ஏந்தி வளர்த்தவரை
இறுதியிலே நெருப்பேற்றி இல்லம் திரும்புகையில்
மூண்டு வந்த வெந்துயரம் மூட்டி உடைந்தநிலை
மீண்டும் எனைப்பிடித்து உலுப்பியடிக்கவிட்டு
ஆண்டுவந்த நெஞ்சத்தை அலறிக் கதறவிட்டு
அப்பாநீ மாழ பயின்ற நெடும்பயணம்
மீண்டும் தொடங்கினையோ? துயருண்ட போதையிலே
மீறுமுணர்ச்சிகளை மீறமுடியலியே!

மரணத்தின் மேலே மரணம் அடி அடிக்க
மனந்தளரா நின்ற மாபெரிய சீனத்தின்
புரட்சித் திருநகரை நடுநடுங்க வைத்திட்ட
பூகம்பங்கூடப் புறமுதுகுகொண்டோடத்
துரத்திப் புகழ்பூண்ட சீனம் அழுகிறது
துயரில் கரையும் கவிதையிலே என்நெஞ்சைத்
திரட்டியுரைப்பதற்கு என்னால் முடியவில்லை
திரைகடல் சூழ் ஈழத்தாய் தேற்றுகிறாள் ...! விம்முகிறாள் ...!

துயரத்தை ரணைகட்டித் தாலாட்டித் திரியவில்லை
துயரைத் துணிவாக மாற்றி எடுப்பதற்குள்
துயரம் அடித்து நொறுக்கிறதே நெஞ்சத்தை
துயரிற் குளிக்கும் சீனத்தின் தோழர்களே
துயரில் வடிக்கும் கண்ணீரை நிறுத்திவிடும்
துன்பத்தின் வெள்ளத்தைத் துணிவால் அணைகட்டும்
துயரில் வடிக்கும் கண்ணீர் தொடருமெனில்
சனம் முழுவதுமே உவர் பூமியாகிவிடும்.

** சீனத்தலைவர்மாசேதுங்கின்மரணச்செய்திகேட்டுப் பாடப்பட்ட கவிதை.

# வேரறுந்த ஆலமரம்; திரிபுவாதம்

கை நடுங்கிக் கால்நடுங்கிக் கதிகலங்கி
மெய்நடுங்கிப் போனவரே மெண்டிஸ் ஐயா
மெய் ஒடுங்கி வாழ்வதில்லை ஒரு நாளிங்கு
பொய் நடுங்கி ஓடுவதை பார்ப்பீர் பார்ப்பீர்

சொல் நடுங்கத் தத்துவத்தை திரித்துச் சொன்னீர்
கல்லெடுத்து எறிந்திட்ட உமது கூலிப்
புல்லர்களைப் பொடிப்பொடியாய் ஆக்கும் சக்தி
உள்ளவர்கள் நாம் ஆனால் மன்னித்திட்டோம்.

ஒன்றுபட்ட தொழிலாளர் பலத்தை வீணாய்
நின்று இங்கு குலைக்காதே ஓடு ஓடு
வென்றுவரும் பாட்டாளி வர்க்கம் என்ன
தின்றுவிட்டுத் தூங்குகின்ற 'எம்பி' மாரா?

சீர்திருத்த வாதத்தைச் சிறப்பாய் கற்று
ஊர் திருத்த வந்தவரே ஸ்டாலின் என்றால்
சோர்வடைந்து நடுங்குவதேன்? உழைப்போர்
யார் வரினும் அன்னாமம் ஒலிக்கும் வாழும்
பார் முழுதும் பாட்டாளி வர்க்கம் பொங்கிப்
போர்முரசு கொட்டுதடா கேட்கவில்லை
மாரடிக்கும் கூட்டத்தின் தோழா! ஆணி
வேரறுந்த ஆலமடா திரிபுவாதம்

பொதுவுடைமை எனச் சொன்னால் போதும் என்று
புதுமடையன் குருஸ்சேவா சொல்லித் தந்தான்
புதுமையிலும் புதுமையடா முதலாளிக்குப்
பொதுவுடைமை வாதியென்போர் வைக்கும் பூஜை!
செஞ்சட்டை போட்டுவிட்டால் 'கம்யூனிஸ்ட்' அல்ல
விஞ்ஞான மார்க்சிஸத்தை லெனினார் சொன்ன
மெஞ்ஞானத் தோடறிந்து ஸ்டாலின் போக்கில்
அஞ்சாமற் செல்பவனே கம்யூனிஸ்ட் தோழன்!

தொழிலாளி (21.12.1963)



சுபத்திரன்

www.padippakam.com

## திரிபுவாதிகளின் நவீன திரி(பு)க்குறள்

பகர முதல நினைப்பெல்லாம் பாராளு
மன்றம் முதற்றே உலகு

வெல்லுக வெல்லிற் தேர்தலிலே வெல்லற்க
புரட்சியில் தோழனே கேள்

திரிபுரைத்து மார்க்சுக் கெதிருரைத்து தேர்தலிலே
தெரிவுற்றால் போதும் அறி

கத்து கழுத்தறு காட்டி நீ கொடுத்தபின்
நிற்கத் தேர்தலே தகும்

'எம்பி' மக்களுக்காற்றும் உதவி அம்மக்கள்
ஏன் தேர்ந்தோம் கொல் என்னும் சொல்

புரட்சி எனப்படுவது யாதெனில் கூட்டத்தில்
கெனடிக்குக் கண்ணீர் வடிப்பதே

மார்க்ஸ் உரைத்த தத்துவத்தை திரித்துரைக்கும் கும்பலுக்கு
குருஸ்சேவே உற்ற குரு

காட்டிக் கொடுப்பதில் கை தேர்ந்த குருஸ்சேவை
கொட்டாறோட் கோயிலில் வை

புரட்சியில் வெற்றிதான் பெறினும் பாராளு
மன்றத்தில் தோற்றல் பெரிது

சொல்லுக சொல்லிற் பயனற்ற சொல்லற்க
மார்க்ஸ் - லெனின் சொல்லிய சொல்.

தொழிலாளி (11.01.1964)

www.padippakam.com



சகர முதற் சொல்லில் இருக்கின்ற சக்தி தனைப்
பகர மறுத்ததேன் பேடு

சிந்தனை செங்கொடி செம்படை சத்தியம்
மந்தமாய் போனதோ சொல்.

ஈயடிக்கக்கூட இடுப்பில்லாத் தலைவர்களின்
வாயடியோ வெல்லும் படை

திட்டித் தொலைத்தால் தேய்ந்திடுமோ பொதுவுடைமை
பெட்டைப் படையே நீ சொல்

அமெரிக்க நாட்டில் அடகுக்கடை வைக்க
அய்யா குருஸ் சோவே போ.

மாப்பிச்சை கேட்ட குருஸ்சோவே ஆப்பிழுத்த
குரங்கா வான் நாளை பொறு.

மட்டி மடையன் பேதை மிலேச்சனுக்குக்
குருஸ்சோவே உற்ற குரு.

மாஸ்கோவை விட்டுக் குருஸ்சோவை ஓட்டுதற்குச்
சோவியத்தே பொங்கி எழு!

கொள்கை மறந்த குருஸ்சோவின் வெறும் தலைக்கு
முள்ளு முடியே பொருந்தும்.

கொப்பியடிப்பூனை எலிபிடிக்கா தென்பதற்குத்
திரிபப்பரே தக்க சான்று.

தொழிலாளி(08.02.1964)மா.சே.தங்கன்



சுபத்திரன்

www.padippakam.com

## வோட்டுக்கு இனியிங்கே வேலையில்லை

பாராளுமன்றத்தால் பொதுமைப் பூங்கா
படைத்தின்றே காட்டுகிறோம் பார்ப்பீர் எல்யு
ஊராரை ஏய்க்காதீர் உலகம் என்றும்
உம் வாதம் ஏற்காது ஐயா சற்று
நேராகச் சிந்திப்பீர் நிறைவாய் இங்கு
நாம் பெற்ற அனுபவங்கள் ஒன்றா? இரண்டா?
போராடிப் பெறுவதுதான் பொதுமைப் பூங்கா
பாரெல்லாம் பொதுமைக்கு இதுவே பாதை.

பிற்போக்கு எண்ணத்தால் பிதற்றும் நாங்கள்
பிக்குகள் பெயராலே கூட்டம் கூட்டி
அற்பர்க்குப் பணத்தாலே அழகாய்ப் பூசை
இட்டார்கள்; பாராளுமன்றம் சென்று
சொற்போட்டுச் சொல்லுக்குச் சொல்போர் போட்டு
சூழ்ச்சிகளுள் ஈழத்தைத் தூக்கிப்போட்டு
விற்றாரே பிற்போக்கர்கள் நியாயம் தன்னை
விளைவென்ன நாம் கண்டோம், வீழ்ந்தோம்
(தாழ்ந்தோம்)

ஏகாதிபத்தியத்தின் எலும்புக் கூட்டுக்
குயிர் கொடுத்து நடமாட விட்டுக்காக்கும்
ஏகாதிபத்தியத்தின் தாசர் கூட்டம்
ஏமாற்றி வாழ்வதற்கு ஏற்றாற் போல
ஏகாதிபத்தியர்கள் தீட்டிப் போன
எலும்பில்லாச் சட்டத்தை ஏனோ இன்னும்
ஏகாதிபத்தியத்தின் எதிரி என்று
எடுத்தியம்பும் இவர் இன்னும் காக்கின்றாரோ?

பாட்டாளி வர்க்கத்தின் பலத்தைக் காட்ட
படையொன்று நின்று கெடுக்கும் நீசர்
குரல்வளையில் கத்தியினைப் பதிக்க வேண்டும்
நாட்டுக்குள் நரம்பில்லா நாவை விட்டு
நஞ்சூட்டும் ஒற்றர்களை நசுக்க வேண்டும்
வோட்டுக்கு இனி இங்கு வேலை இல்லை
வேட்டுத்தான் இனி இங்கு விடிவு காட்டும்.

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

பாட்டாளி வர்க்கத்தைப் பகடைக்காயாய்
பாவித்து விளையாடும் ஆட்டம் போதும்
தோட்டாக்கள் கவிபாடும் அரங்கம்போட்டு
தோளெல்லாம் துணிவென்ற யாழைத் தூக்கி
பாட்டுக்கு ஏற்றாற்போல் இசைக்கச் செய்து
பண்ணீட்ட ஒரு பாதை செய்வோம் தோழா
நாட்டுக்குள் நடமாடும் நாய்கள் பேய்கள்
நசிபட்டு, நலிவுற்று தொலைந்தே போகும்.

ஒன்றென்றால் நூறென்னும் காட்டு ஏட்டை
அரணாக வைத்திங்கு வாழும் கெட்ட
கன்னக்கோல் சீமான்கள் தேர்தல் என்றால்
கட்டவிழ்த்து விடுவார்கள் பொய்ம்மைப் பூதம்
தன் பொய்கள் அனைத்துக்கும் அழகாய்ப்பட்டை
தான் தீட்டிப் பொதுமக்கள் கருத்தே என்று
தன்போக்கில் விடுவார்கள் நாளை நாட்டில்
தோழர்களே சிந்திப்பீர் இதுவா வேண்டும்?

துப்பாக்கி ரவை பாய்ந்த பின்பு அந்த
துப்பாக்கிமுனை கக்கும் புகையைப்போல
இப்போரில் புகைகின்ற தொழிலாளி உள்ளம்
எமக்கென்றும் துணையாக நிற்கும் தோழா
நப்பாசை உனக்கூட்டி வாக்கைப் பெற்று
நலமெல்லாம் கொய்கின்ற முதலாளிக்கூட்டம்
தப்பாமல் உன்கையால் அழிவைக் காண
போர் மகனே வர்க்கத்தின் குணத்தைக்காட்டு.

சுரண்டுவதிற் சுகம் கண்டோர் உள்ளம் முள்ளுக்
கள்ளி நிறை காடாகும். இதனைச் செம்மை
திரண்டுவரும் தீயாலே தீய்க்காதிங்கு
தேர்தலிலே குதிப்பதனால் தேசம் முற்றாய்
வரண்டுவிடும் ஆகையினால் தோழா உந்தன்
வலுமைதனை முறிந்திங்கு வாழவேண்டில்
சுரண்டுகின்ற வர்க்கத்தின் ஆணிவேரை
சுடர்விட்டு எரிக்கின்ற நெருப்பாய்
(நிற்பாய்).

தொழிலாளி (28.05.1970)



படிப்பகம்

www.padippakam.com

## மே நாளே

கட கட என ஒரு
விடமறு படையது
நட எனப் பணித்திடும்
மே நாளே
இடரறு செம்படை
திடமுடன் நடக்குது
கடலொலி கேட்குது
போர் நாளே
சட சட என எதிர்
குடலற ஓடுது
சுடரொழிநீ பெருக்கிடும்
செந்நாளே.

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## செங்கதிரோன் எழுந்துவிட்டான்!

சுதந்திரத்தின் கொடி வானில் மானத்தோடு
சுடர்விட்டு நிமிர்ந்தெழுந்து பறக்க வேண்டில்
பதத்துக்குப் பதம் பார்த்துச் சொல்லடுக்கி
பேசுவதால் பயனிங்கே எழுந்திடாது
மதத்துக்கும் மதத்துக்கும் சண்டைமூட்டி
மொழியோடு மொழி மோத விட்டுவிட்டு
இதமாக இருப்பவர்கள் சுதந்திரத்தின்
இன்னுயிரை நெரிக்கின்ற கொடிய பேய்கள்

வனம் வெட்டிவனமெல்லாம் வயலாய்மாற்றி
வான்நின்று பொழிகின்ற முகிலின் வேரை
கனம்பண்ணி ஈழத்தில் பசியைவெல்ல
கை கொடுத்துத் தூக்குகின்ற உழவனிங்கே
மனம் முறிந்து வரம்புகளில் படுத்திருந்தால்
மதித்திடுமோ இவ்வுலகம் நம்மை - இல்லை
வனம் திறந்து வான்திறந்து வழம்திறந்த
வள்ளல்களை நாம் வாழ வைக்க வேண்டும்.

ஆறாம் ஜோர்ச் மன்னனது சப்பாத்துக்கு
ஆராத்தி எடுத்திங்கு பாப்புனைந்து
ஆறெல்லாம் மண்முட்டி வயிறுவீங்க
அழகுமலைச் சாரல்களை வெட்டிக் கீறிச்
சேறாகவாக்கி விட்ட அந்த சேர்மாராலே
செகமெல்லாம் கைநீட்டி பிச்சை வாங்கும்
பேறதைத்தான் பெற்றிட்டோம் பெருமையெல்லாம்
பேய் தின்ன விட்டுட்டோம் அன்புத் தோழா!

எழு இங்கு புத்தீழம் படைத்துப் பார்ப்போம்
எங்களது மலைமீது உயிர்த்த தேயின்
கொழுந்தோடு வாழ்ந்திங்கே களைத்து விட்டோம்
ஓ வென்று எழுகின்ற பஞ்சப் பேயை
கழுவேற்ற வேண்டுமெனில் உழைப்பையெல்லாம்
கைநீட்டிச் சுரண்டியதால் இரத்தம்தோய்ந்து
பழுதுற்றுப் பண்பற்றுக் கிடக்குமந்த
பணக்காரர் முதுகெலும்பை முறிக்கவேண்டும்

சுபத்திரன்



படிப்பகம்

உழைக்காமல் நாம் இங்கு இருக்கவில்லை
உதிரத்தை வார்க்காமல் கிடக்கவில்லை
களைத்துழைத்து வேர்வையினை நிலத்தின் மீது
கொட்டாமல் நாம் இங்கு படுக்கவில்லை
விளையாமல் நம் புழுதி புழுக்கவில்லை
விளைந்தவைகள் எங்கோடி எந்தப்புற்றில்
நுழைந்தெனத் தெரியாது கிடந்தோமின்று
நுழைந்த இடம் தெரிந்திட்டோம் நொறுக்க வந்தோம்

ஈழத்தின் சுபீட்சமே எங்கள் மூச்சாய்
எழுகிறது இனி இங்கே சுரண்டல் இல்லை
ஆளவொரு பணக்காரக் கும்பலிங்கே
அடிமையெனக் கிடப்பதற்கு உழைக்கும் மக்கள்
கூழமெனக் கிடக்கின்ற கேவலத்தை
கொடுவாளால் வதைப்பதற்கு எழுந்துவிட்டோம்
ஈழமினி அடிமையிலை எவர்க்கும் எங்கும்
அஞ்சாத செங் கதிரோன் எழுந்து விட்டான்.

www.padippakam.com

# மானுட காணம்

எல்லாம் வல்ல மனிதனே யுன்னை
வெல்லுதற் கிந்தப் பிரபஞ்சத்துள்
எதுவுமேயில்லை. எழு! எழு இன்றே.

சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

## மானிட சக்தி

வானில் வில்லை வளைத்து வைத்தவன்
அம்பை இன்னும் ஏன் பொருத்தவில்லையோ
வா நீ தோழனே வானிருந்து
வளியும் நீர்க் கொடி பிடித்து ஏறியே
வானவில்லிலோர் சரத்தினைப் பூட்டி நாம்
வளைந்து வரும் அப் பரிதியைக் கொய்வோம்
மானிடத்தின் சக்தியால் அண்டமே
மானிடத்தின் காலடி வீழ்த்துவோம்.



படிப்பகம்

www.padippakam.com

# வெற்றிக்கு ஓர் ஆலயம்

வெற்றிச் சங்கே
நாளை நீ
அடையும் வெற்றி
வியட் நாமின்
வெற்றியல்ல
ஆசியக்கண்ட மெங்கும்
அதனொளி பட்டுத்தீய
அரக்கரை வீழ்த்தும் வஜ்ர
ஆயுதமாகப் போகும்
அரும் பெரும்
வெற்றி! வெற்றி.

வெற்றியே
உன்னைக் காட்டி
வியட் நாமில்
வீரர் போடும்
நாள் வெகுதூரமில்லை
விடிந்திடும்
காலமிங்கு அண்மையில்
ஆம் ஆம்
மிக்க அண்மையில்
என்றாலும்
அதற்குள்ளே
அமெரிக்காவின்
ஏகாதிபத்தியத்
தலைவலி
கூடுதின்று
அன்னையின் கருவில்
தீய்ந்த
சிசுக்களுக்கு அளவு உண்டோ?

பள்ளியில் புத்தகத்தைப்
புரட்டுங்கால்
விழுந்த குண்டு



சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

எத்தனை இளமை பூத்த
உயிர்களை எரித்ததம்மா
காதலால்
உறவு கொண்டு
காலத்தைக் காத்து நின்ற
காதலர்
நெருப்பால் மாண்ட
கணக்கினை
யாரோ சொல்வார்

எடுத்தடி
வைக்க ஒண்ணாக்
கிழங்களின்
எலும்பைத் தின்ற
குண்டினைக்
கணக்குப் பார்த்தா
நீசர்கள் வீசினார்கள்

அங்கங்கள்
இழந்து நிற்கும்
மனிதனின்
துயரை இங்கு
வடித்திட
முடியுமென்றால்
வியட் நாமில்
கொடுமையில்லை

வெற்றிக்கோர்
ஆலயத்தை
வையத்தே
எழுப்புதற்கு
முற்றுமே
சிறந்த பூமி
வியத் நாமே
வியத் நாமே

(தொடரும்)

(28.03.1968)தொழிலாளி



படிப்பகம்

www.padippakam.com

## விளையாடித் திரியாதே

வெற்றியே நீ சும்மா
விளையாடித் திரியாதே
சுற்றித் திரி கின்ற
துடுக்கான பையனெனக்
குற்ற மிழைக்காதே
குறும்பதனை விட்டுவிடு
வெற்றி சில நாளில்
வியட்நாமுக் கென்ற தொரு
முற்றை அதற்கு
முடி மறைக்கின்றாய்?

சுபத்திரன்



படிப்பகம்

விடி வொளியை நாடி
வியட்நாமில் காட்டுகிற
நெடிய மறத்தில்
நீ கலந்து நிற்கின்றாய்
கொடிய எதிரி
கோலோடு சாய்கையிலே
கொடி யோடு வந்து
குதிப்பதென எண்ணியதைக்
கடிதில் நடத்து
காலத்தைத் தாழ்த்தாதே!

மண் ணள்ள எண்ணும்
மடையர் சவக்குளிக்கு
மண் ணள்ளிப் போட்டு
மகிழும் தினம் நாடி
கண்ணால் நடக்கும்
காவலர்க்குப் பொறுமையென
எண்ண இனிக் காலம்
இல்லையடா ஆகையினால்
உன்னைப் பிடிக்க
எழுந்தாலும் எழுந்திடலாம்.

வெற்றியெ நீ சும்மா
விளையாடித் திரியாதே
கற்றறிந்த வித்தை
காட்டி விட்டாய் அது போதும்
முற்றும் தெரிந்தவற்றை
மூடுவதிற் சுவையுண்டோ?
சற்றும் பிழையாதே
சங்கைதனைக் காப்பதெனில்
வெற்றியே நீ சும்மா
விளையாடித் திரியாதே.

(29.08.1966)தொழிலாளி

www.padippakam.com

## நாங்கள் மூடக்கிழவனின் பேரப்பிள்ளைகள்

எழுபத்தியொன்று
ஏப்ரலின் பின்
பரிநிர்வாணமுற்ற
முன்னைநாட் புரட்சிவாதிகளின்
பிச்சா பாத்திரத்தில்
துரோகச் சில்லறைகள்
நிறைந்து கிடக்கின்றன!
அரசு நிழலில் இவர்கள் பெற்ற
"ஞானோதய" த்தைச்
சுமந்து கொண்டு
வேகமாக
மகிந்தர்களும்
சங்கமித்திரைகளும் - தங்கள்
தேவ நம்பிய நீசனுகளைத் தேடி
அரசுக் கிளைகளை நடப்
புறப்பட்டுள்ளனர்
ஆனால் .... நாங்கள்
எங்கள் சிதைவுகளிலும் இடிபாடுகளிலும்
உங்கள் அரசுக் கிளைகளின் வேர்களை
ஓடவிட மாட்டோம்.

நாங்கள்!
புதிய கற்களால்
புதிய சாந்தால்
புதிய உருக்கால்
புதிய கோட்டையை
நிர்மாணித்துக் கொண்டிருக்கிறோம்.
நாங்கள் -
மலைகளை அகற்றிய
மூடக் கிழவனின்
பேரப்பிள்ளைகள்.

குமரன்(15.05.1975)

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## ஆண்டவன் நீதான்

ஆளப்பிறந்த விவசாயி - இங்கு
அடங்கிக் கிடந்தானோரு நாளில்
கூழைப் பிசைந்தான் குடிசையிலே - அவன்
குறுகிக் கிடந்தான் கொள்கையிலே

நிலத்தையுழுவான் நிலத்தினிலே - தன்
நினைவு இழந்து சாகுமட்டும்
கலைப்பையிழுக்கும் மாட்டுடனே - அவன்
காலங்கழித்தான் கண்கலங்கி
உண்பது முடுப்பதும் வயல்தனிலே - அவன்
உறங்கிக் கிடப்பதும் வயல்தனிலே
விண்தான் தனது கூரையென - ஐயோ
வியர்வை தன்னில் குளித்திடுவான்
உழுபவருக்கு நிலமெல்லாம் - இங்கு
உருத்தா யாக்கிடச் சட்டங்கள்
நலிவு இன்றிச் செய்திடுவோம் - இந்
நல்லவர் தம்மை உயர்த்திடுவோம்.

பண்ணை முறையில் பலநூறு - வயல்
பரப்பை உழுது உழைக்கட்டும்
திண்ணை தூக்கித் திரிபவர்கள் - அதைத்
தின்ன நினைத்தால் செருப்படிதான்

காட்டை வெட்டி களமாக்கி - அதைக்
கதிர்கள் கொட்டும் தலமாக்கும்
நாட்டின் இறைவன் விவசாயி - ஏன்
நன்றி மறந்தாய் முதலாளி

அன்னை நாட்டை காப்பவனே - அதைப்
பசியில் நின்று மீட்பவனே - எம்
அனைத்தும் நீதான் அமுதூட்டும் - எம்
ஆண்டவன் நீதான் நீ வாழ்க.

தொழிலாளி (08.09.1963)



படிப்பகம்

www.padippakam.com

## ஒளி

மக்களிலும் பெரிதாக ஆயுதத்தை
மகத்தான தென எண்ணித் திரியும் கூட்டம்
எக் கொடியை சுமந்தாலும் மக்களுக்கு
ஏற்றபணி செய்கின்ற தகுதியற்று
விக்கினமே செய்யுமென ஈழ மண்ணில்
விரிவாகப் பல பாடம் கற்று விட்டோம்
திக்கறியா திசையறியா திரிவோ மல்லோம்
திசைகாட்டு மாதவனின் ஒளியைக் கண்டோம்.

ஆயுதத்தை மலையளவு குவித்தா லென்ன
அதைச் சுமக்கும் ஆள்தேடி காடும்மேடும்
மேய்ந்தலைந்து நடுநிசியிற் திரிந்தா லென்ன
மக்களவர் தங்களது அடிமை வாழ்வின்
நோய்க் கேற்ற மருந்தான தத்துவத்தை
நெஞ்சத்தாற் செயலாக்கி உண்ணாவிட்டால்
ஆயுதத்தால் என்ன பயன்? அதனைத் தூக்கும்
ஆட்பலத்தால் என்ன பயன் அடைதல் கூடும்.

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## முப்படை

எலும்புப்படைதான் செம்படை - அது
ஏழைக் குலத்தின் மறப்படை
எழுந்து நடந்தால் பொடிப்பொடி - இந்த
எத்தர் குலத்தின் வாயடி.

வாலைப் பிடிக்கும் எலிப்படை - திரிபு
வாதம் நடத்தும் சிறுபடை
கோழைக் குலத்தின் பணப்படி - இதற்குக்
கொடுத்திட வேண்டும் செருப்படி.

முதலாளி வர்க்கப் பணப்படை - இது
முறிந்து கிழிந்த காட்போட்படை
இதற்குக் கொடுத்திடும் மின்னடி - உலக
ஏகாதிபத்தியத் தார்க்கடி.

(ஜனவரி 26, 1964)



படிப்பகம்

## இனியெமக்கு ஓய்வே இல்லை!

இந்துமா சமுத்திரத்தின் முத்தாம் ஈழம்
ஈன்றெடுத்த ஆற்றலுள இளைஞர் நாங்கள்
இந்தமா உலகத்தின் எல்லாத்திக்கும்
ஒலிக்கத்தான் போகிறது எங்கள் மாண்பு!

இளைஞர் சமுதாய இரும்புத் தூண்கள்
அசையாத திடவுறுதி பாய்ந்த வேர்கள்
சுளையாக ஈழவளம் சுரண்டிச் சென்ற
சரித்திரங்கள் தெளிவாகத் தெரிந்தவர்நாம்!

கைகாட்டி வாய்பொத்திப் பார்த்திருந்த
காலந்தான் எப்போதோ உருண்டு போச்சு!
மெய்சொட்ட வேர்வையினால் அந்நியர்க்கு
மாடாக உழைத்தோரின் பேரர்நாங்கள்.

ஈழமரம் ஈன்ற கனி கவர்ந்து போனோர்
இனிய சுவைப் போஷாக்கால் இன்பம்பெற்றார்
ஈழமகள் பெற்றெடுத்த பாலர், இன்று
இல்லாமை ... வறுமையினால் வாடிப்போனார்!

பசி வயிற்றைத் தாலாட்டப் பண்டமற்றோர் ..
பொழிகின்ற மழைக்கொதுங்கக் குடிசையில்லார்
இசைவான தொழிலின்றி பட்டம்பெற்றும்
அலைவோரின் எண்ணிக்கை நாளும் உயரும்.

உழைப்பதற்காய் ஆர்வமொரு உடற்பலமும்
ஒருங்கிணைந்தும் சொந்தமெனத் துளிநிலமும்
நிலையாக இல்லாத ஏமாற்றத்தால்
நொந்தொதுங்கும் நெஞ்சங்கள் எத்தனையோ

சொத்துசுகம் மாடிமனை இன்பம்கண்டு
சுகித்திருக்கும் சிறுகூட்டம் இருப்பதுண்மை
சத்தூட்டம் இல்லாத உடலில் வீக்கம்
தோன்றுவது வளர்ச்சியெனச் சொல்லலாமோ?

சுபத்திரன்

www.padippakam.com

## சமாதானம்

ஓ! அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின்
போர்ச் சுறாக்களே!
இந்து சமுத்திரத்தின் அலைகளில் உலாவும்
நெத்தலி மீன்கள்
உனது போரொத்திகை கண்டு
திகிலடைந்து ஒழித்து விடவில்லை
அவை உனது கொடுமையை எதிர்த்து
திமிங்கிலங்களாக வளருகின்றன.

இந்து சமுத்திரத்தின் சமாதானத் தோணிகள்
உனது போர்க் கப்பலை மூழ்கடிக்கும்
ஐ.நாவின் பேச்சு மேடையில்
சமாதானம் நம்பிக்கை வைக்கவில்லை
உனது அழிவு காலப் போர் முனையில்
சமாதானம் நம்பிக்கை வைத்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## வாழ்வென்ற சொல்லதனைப்
## பொதுமை செய்வோம்

புறப்படென ஒரு சொல்லுக் கேட்டால் போதும்
பொங்கி யெழும் வேங்கையெனப் பாய்ந்து செல்லும்
மறப்படையின் அங்கம் நான் அகிலம் எங்கும்
மார்தட்டி மறங்கட்டி விரைவோ மென்று
விறல் கூறும் பரம்பரையின் அணியில் நிற்கும்
வீரர் நாம் எரிமலையின் கோபுரம் நாம்
புறப்பட்டோம் புறப்பட்டோம் போருக்கென்று
புரட்சியுறு தருங்கவிதை இசைக்க வாரீர்.

பொன்தட்டில் நஞ்சூற்றிப் பழச்சாறென்று
பொய்யுரைக்கும் வஞ்சகரின் பல்லைத் தட்ட
வன்மையுடன் புறப்படுக எஃகுத் தோழா
வச்சிரம் நீ வானளக்கும் மலையை எல்லாம்
உன் கையால் பொடிப் பொடியாய் ஆக்கும் சக்தி
அடைந்தவன் நீ ஆழ்கடலின் ஆழம் பார்க்கும்
வன்மகன் நீ வாள் தூக்கு; பகையை வெல்வோம்
வாழ்வென்ற சொல்லதனைப் பொதுமை செய்வோம்.

(11.07.1964)

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## நடை

அக்கினிப் பெருமூச்சு அசைக்கிறது
கிராமத்தின் தென்னை மரங்கள்
சூரியனைக் கொய்து
தலையிற் சூடிக் கொள்கின்றன.

எல்லையில்லாத எங்கள் பயணத்தின்
ஒரு பகுதியை
நம்பிக்கையோடு நடந்து செல்கிறோம்
எங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அல்ல
எங்கள் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு
எங்கள் உயிரை மிச்சம் பிடிப்பதற்கு
நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

## எரிதழலால் அக்கினியின் விழாவெடுத்து விடிவு காண்போம்

மாமலையில் முகில் தடவும் அழகைப்பாட
மாத்தளைக்கு நான் வந்து சேரவில்லை
பாமலையில் நானேறி பகட்டுக் காட்ட
பஸ்ஸேறி நானிங்கு வரவுமில்லை
தேமலையில் துளிர் பறிக்கும் பெண்ணே உன்னை
தோகைமயில் என்று சில பிரீதி நாய்கள்
காமநிலை கொண்டியற்றும், கவிதை கூற
காலெடுத்து நானிங்கு வைக்கவில்லை.

புராங் அப்பு கொழுத்திவிட்ட புரட்சித் தீயில்
புதுக் கவிதை நான் கொழுத்த எழுந்து வந்தேன்
திராணியற்றுத் திரிகின்ற திரிபுவாத
தீயோரைத் திட்டுவதற்கு இங்கு வந்தேன்
பிராணிகளாய் எமை எண்ணி லயத்துக்குள்ளே
பிடித்தடைத்த பேய்களுக்கு முகத்தில் காறி
திராணியுடன் துப்புவதற்கு இங்கு வந்தேன்
திரண்டிருக்கும் தோழமையைத் துணையாய்க்கொண்டே

துப்பாக்கி தூக்கிடடா தோழா என்று
துடுக்காக ஒரு வரியைக் கூறிவிட்டு
அப்பாலோ அழகான வாடி வீட்டில்
அறையொன்று வாடகைக்கு எடுத்துக்கொண்டு
செக்கெழுதிக் கொடுக்கின்ற தலைவனுக்கு
ஜென்மபகையாகி எழும் மலையின்மீது
சொக்கி வெறிகொண்டெறியும் மின்னலோடு
சேர்ந்து கவி கூறி உரையாட வந்தேன்.

விக்கி விக்கி வரும்பாடல் வீழ்த்துகின்ற
வீறுநடையோடு கவியேறி வந்தேன்
அக்கினியே நீயெழுந்து வாடியம்மா
அதர்மத்தை அழிக்கின்ற விழா எடுப்போம்
திக்கெட்டும் எரிகின்ற நெருப்புத் தாயே
தீனுனக்கு ஈழத்தில் இருக்குதம்மா

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

கொக்கரக்கோ என்றந்த சேவல் கூவி
கதிரவனைத் திறந்துவிட்ட கதையைப்போல
மொக்கர் சிலர் முப்பத்திரெண்டு ஆண்டாய்
முக்கி, முக்கி கூவுகின்றார் விடியவில்லை
செருக்கோடு நிமிர்ந்த மலைச் சிகரம் தட்டி
செப்பனிட்டுத் தேயிலை நட்டுக் காத்து,
ஒரு புறத்தில் இலவ மரத்தில்
அந்த மிளகுக்கொடி பற்றி அசைந்தேறவிட்டு

மறுபுறத்தில் கோப்பியைத் தழைக்கவிட்டு
மலைச்சரிவில் கொக்கோவை வளர்த்துச் சேர்த்து
பெருஞ்செல்வம் குவித்தோமே இந்த நாட்டில்
பேடிகளே செய்நன்றி ஏன் மறந்தீர்
துரையே நீ மாளிகையில் தூஷணத்தில்
திரை மறைவில் சுகித்து மகிழ்ந்தனுபவிக்க
புரையோடிக் கிடக்கின்ற புண்ணாய் வாழ்வில்
புழுத்தளுகி எம் நெஞ்சைக் குதறிப் பிய்க்க
இரையாக புற்தின்று தவிடு தின்று
ஏங்குகின்ற எம்வாழ்வில் பற்றியிங்கே
உரைத்திட்டால் ஊர் குழப்ப வந்தேனென்று
ஒப்பாரி வைப்பாயே அதுவும் நன்று
எலிசபெத் ராணிக்குத் தீட்டு என்றால்
இங்கிருந்து அனுதாபத் தீர்மானங்கள்
சொல்லியுடன் தந்தி அனுப்பி வைக்கும்
சோதாக்கள் தோட்டத்தைப் பறித்தபோது
நல்லபுது வாழ்வுமக்கு அமையுமென்று
நாம் கண்ட நினவெல்லாம் கனவாய்ப்போகும்
வல்ல பெருங் கரம் படைத்ததெங்கள் வாழ்வை
எம் கரத்தில் நாம் சுமக்க முடிவு செய்தோம்
ஆகையினால்
பாஸிஸமே பாராளுமன்றத்துக்குள்ளே
பதிவிரதை நாடகத்தின் திரை கிழிந்தால்
நீ சிவந்த ரெத்தத்தைக் குடிப்பதற்கு
நீட்டுவாய் ரகுலாலின் வேட்டைப் பல்லை
வா சிவந்த தோழர்களை எமது நாட்டை
வற்றாத உயிர் நதிகள் வரைந்த நாட்டை
பா சிவக்க பண்சிவக்க மண்சிவக்க
பாசிசத்தில் பிடி நின்று மீட்க வேண்டும்
சிங்களத்தை செந்தமிழை மோதவிட்டு
செங்குருதி தெருவினிலே பாயவிட்டு



படிப்பகம்

www.padippakam.com

அங்கந்தச் சேற்றினிலே நமைப் புதைக்க
ஆ! வென்று காடேற கதறிக்கொண்டு
வெங்கொடுமைச் சுடுகாட்டில் பிரேதமுண்ண
வெறிபிடித்து விசர்பிடித்து தாம் தோமென்று
இங்கெழுந்து வருகிறது மக்கள் சக்தி
சேர்ந்தெழுந்து அதை நொறுக்க எழும்ப வேண்டும்
கீனகொலை கருங்காலித் தோட்டம் சீறும்
வீறுமலை மீது சொரிந் திட்ட ரெத்தம்
பேனை எழுத் தெழுதி விடுங் கவிதையல்ல

பெருஞ்சந்தக் குவியல்தன் கிறுக்குமல்ல
மானமுள்ள தொழிலாளர் ஈழத்தாயின்
வெற்றிக்கு இரத்தத்தாற் திலகமிட்டு
தானமழை பொழிந்திட்ட தியாககீதம்
எதிர்கால விடுதலையின் புதிய நாதம்.

வடக்கினிலே சாதிவெறி மூட்டிவிட்டு
தெற்கினிலே இனவெறியை கொழுத்திவிட்டு
படமெடுத்து ஆடுகின்ற நச்சுப்பாம்பாய்
பனிபடரும் மலையினிலே ஆடுகின்ற
முடக்கழுதை நம்மீது சவாரி செய்ய
முதுகுதனைக் குனிந்து நாம் கொடுத்தோம் போதும்
அட! தோழா எழுந்திடடா எரிதழலால்
அக்கினியின் விழாவெடுத்து விடிவு காண்போம்
டட்லிக்கு நீயிட்ட தீயை அள்ளி
பட்டியனியின் உயிர்மீது அள்ளிவைப்போம்.

(குமரன் — 41 இதழ்15.11.1974)
1974 மாத்தளை இலக்கிய விழா கவியரங்கில்பாடப்பட்ட
கவிதையின்ஒரு பகுதி

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## கவிதை வைத்தியர்

மக்களே வைத்தியர்கள்
அவர்கள்
என் ஊமைக் கவிதைகளைப்
பேசச் செய்தனர்
என் குருட்டுக் கவிதைகளைக்
பார்க்கச் செய்தனர்
என் செவிட்டுக் கவிதைகளை
கேட்கச் செய்தனர்
என் மூடக் கவிதைகளை
நடக்கச் செய்தனர்
என் கோழைக் கவிதைகளைப்
போராடச் செய்தனர்
நண்பர்களே!
உங்கள் கவிதைகளையும்
அந்த வைத்தியர்களிடம்
அனுப்பி வையுங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## மக்களே நமது பாடசாலை

ஏழெட்டு மணியளவில் பள்ளி செல்லும்
கிளையோடு கிளையாராய்த் துள்ளியாடி
வாளொத்த கதிர்வீசித் தெருவிற் செல்லும்
வெய்யோனின் தோழர்களே உம்மைத் தானோ
கோழையென எண்ணிற்று ஆட்சிபீடம்
கொப்பியிலே குறிப்பெழுதி வாழுவோர்க்கு
நாளையெனும் நாள்பற்றி என்ன எண்ணம்
நாமறிவோம் அதுபற்றி என்கின்றாரோ

எங்கிருந்தோ வந்தெம்மை அடிமையாக்கி
ஈழத்தின் செல்வத்தைச் சுரண்டிச் சேர்த்து
பொங்கிய நற் செல்வத்தைக் கணக்குப் பார்க்க
போதுமெனும் கல்விதனை வகுத்த அந்தச்
சங்கையிலா வெள்ளையர்கள் ஆக்கிச் சென்ற
சவமான கல்விதனை இன்று இங்கு
தங்கமெனக் கூறுகின்ற அமைப்பே எங்கள்
துன்பத்துக்கதிபதி என்றுணர்ந்து விட்டோம்.

இலவசமாய் நஞ்சிட்டேன் என்று சொல்லி
இவ்வுலகில் எவரேனும் பெருமை கொண்டு
கலகலத்துச் சிரித்து விட்டால் ஆஹா உந்தன்
கருணைக்கு அளவுண்டோ என்னே என்று
உலகுள்ளோர் இருகையும் நீட்டி வாங்கி
உண்ணுவரோ சிந்திப்போம் புற்றில் நின்று
அழகாக ஆடு தென்னுங் காரணத்தால்
ஆரேனும் நாகத்தை அணைத்த துண்டோ?

பக்குவமாய் வாங்கினிலே குந்திக்கொண்டு
பாய்ந்து வரும் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு
சொக்குக்குள் பழமை தரும் குற்றம் தன்னை
சப்பி வெறும் துப்பலென துப்பிக்கொண்டு
வெட்கமிலா வாழ்வதற்கு வாழுகின்றோம்
வேகத்தோடாடுகின்ற புதுமை நெஞ்சை
சுக்காக குடிக்கின்ற உரல்தான் நாங்கள்
கிடக்கின்ற வகுப்பறைகள் என்பேன் தோழா

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

சுரண்டலுக்குத் துதிபாடும் கல்விகற்றுச்
சூதுக்கு நாமுடைமை ஆகலாமோ?
வ்ரண்ட பெரும் பாவத்தை அறிவு என்று
வாய்கூசாது பற்றி வாழ்த்தலாமோ?
திரண்டெழுந்து நிற்கின்ற பாட்டாளிக்குத்
திட்டுகின்ற புத்தகத்தைச் சுமக்கலாமா
சரணடையப் பயிற்றுவிக்கும் கல்வி எங்கள்
சக்திதனை உறிஞ்சுகின்ற சவக்காடம்மா

வேலையில்லாக் கொடுமையினால் வீதிசுற்றும்
வீரர்களின் கையெமது பக்கம். கூவும்
ஆலையிலே பாடுபடுந்தோழன் எங்கள்
அணிநடத்தும் படைக்கேற்ற தலைவனாவான்
சாலையிலே வயலாடிக் கதிர் வளர்க்கும்
சுரம்நீட்டி அழைக்கின்றான் உழவன், புதிய
நாளையினி நாம் போக்கி நடப்போம் அங்கே
தான் நமது வகுப்பறை அமைப்போம்.

சுரண்டலுக்குத் துதிபாடும் கல்வி நாயை
உஞ்சு என்று அழைப்பதற்கு வேண்டும் கல்வி
வரண்ட அந்தக் கல்வியை நாம் கற்கமாட்டோம்
வரலாற்றை மாற்றுகின்ற கல்வி கற்போம்
கரமிணைப்போம் மக்களினைக் காத்து நிற்போம்
திரண்ட பெரும் ஜனசக்தி ஒன்றே எம்மைப்
பயிற்றுவிக்கும் ஆசிரியன் என்றே கொள்வோம்.

(02.04.1971)



படிப்பகம்

www.padippakam.com

## தாயகத்துக்கொரு நன்றிப்பாடல்
## சுபத்திரன் ஒரு உபத்திரன்

நல்லமொழி சொல்லி எமை வாழ்த்திவிட்ட
உங்களுக்கு உள்ளத்தால் நன்றி சொல்வேன்
'பல்லுடையப் பாடுகிற சுபத்திரன்' நான்
என்றெழுதி வாழ்த்தியுளீர் நன்றி .. நன்றி ..
பல்லுடைய பாடுவதே எனது வேலை
பல்லுமக்கு உடைந்திருந்தால் குற்றம் எந்தன்
சொல்லதன் மேற் சத்தியமாய் இல்லை. சொல்லை
உருவேற்றி நான் அனுப்பும்போது கெட்ட
தொல்லைதரும் சுரண்டலரின் பல்லைத்தட்டி
தூளாக்கு என்றேதான் அனுப்புகின்றேன் அந்த
புல்லருக்குத் துணையாக இருக்கும் கெட்ட
பூசாரிபோலும் அந்தத் திரிபுவாத
சில்லறைகள் பற்களையும் உடைத்து வாவென்
றோதித்தான் அனுப்புகிறேன். அதனால் இந்தத்
தொல்லுலகில் சுரண்டலர்க்கும் திரிபுவாதத்
துரைமார்க்கும் சுபத்திரன் நான் உபத்திரன்தான்.

1973க்குப்பின்

(சுபத்திரனுக்கு கட்டுப்பல்லொன்று இருந்தது. ஒரு கவியரங்கில் கவிதை கூறியபோது அது கீழே விழுந்து விட்டது. இக் கவியரங்கின் தலைவர் அதனைக் குறிப்பிட்டு "பல்லுடையப்பாடும் சுபத்திரன் என்று" கூறியதுமன்றி சுபத்திரன் ஓர் உபத்திரன் என்றும் கூறினார். அக்கூற்றுரைக்கான பதிலை இதிற் காணலாம். இக்கவியரங்கின் தலைவராக இருந்தவர். கவிஞர் சுபத்திரனின் மிக உற்ற தோழரான மறைந்த சி. வடிவேல் அவர்கள். இக் கவியரங்கு நடைபெற்றது 1970ல்.)



படிப்பகம்

www.padippakam.com

## மலையினும் பெரியது சிவனுவின் மரணம்

சிவனு
எதனைக் கேட்டான்
அவன் உழைத்த பூமியிலே
அதற்கு முன்னர்
அவன் பூட்டன் சமாதியிலே
தனக்கும் ஒரு துண்டு
தா என்று கேட்டான்.

கெஞ்சித்தான் கேட்டான்.
இல்லையென்று சொல்வதற்கு
என்ன உரிமையுண்டு?
இல்லையென்று சொன்னீர்
அதர்மம் எனச் சொன்னான்
வல்லமையைக் காட்ட
வாலிபன் புறப்பட்டான்
பங்குதான் கேட்டான்
பாவிகளே என் செய்தீர்?
துண்டு நிலம் தான் கேட்டான்
துவக்கால் அடித்தவனை
தேயிலைக்கு உரமாக்கி
திருப்தியடைந்தீரே.

பண்டு நிலத்திற்
பங்கல்லோ அவன் கேட்டான்
புதைகுழியா கேட்டான்?
மலையகத்தைச் செய்த
கலைஞன் பரம்பரையின்
இளையவனைக்
கொன்று, புதைத்தீர்கள்.

நீர் ஏவிவிட்ட பேய் அவனைக்
கொல்லுகையில்
பார்த்திருந்து
நெஞ்சத்தால் பூரித்த
கொடியவரே
தீயேந்தும் காலம்
கர்ப்பத்தில் இருக்கிறது.

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

பன்னீர்க் குடத்துக்குள்
பத்திரமாய் வளர்கிறது
விரைவில் ....
மிக விரைவில் ....
தீயேந்துங் காலம்
நெருப்பு மழை பொழியும்
ஆம்! ஆம்!
நெருப்பு மழையொருநாள்
பெய்யத்தான் போகிறது
உங்கள்
விருப்புக்கு வெறுப்புக்கு
அப்பால்
நெருப்பு மழையொன்று
பெய்யத்தான் போகிறது
உங்கள்
செருப்பு, குடை, தவிசு
கோட்டைகள், கொத்தளங்கள்
படை வரிசை, பட்டாளம்
சொத்து, சுகம் எல்லாம்
எரியத்தான் போகிறது

மலையைக் குடையாய்ப்
பிடித்தாலும்
பிடி சாம்பலாகி
அழியத்தான் போகின்றீர்
அதுவரையும்
இன்னும் எத்தனை சிவனுகளோ?
சிவனு
உழைக்கின்ற வர்க்கம்
உன் மரணச் செய்தியினால்
அழுது புலம்பவில்லை
மாரடித்து, ஒப்பாரி
வைத்துக் கதறி
மண்மேற் புரளவில்லை.

வர்க்க வெறிகொண்டு
மானத்திமிர் கொண்டு
கோபத்தேர் ஊர்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

வையகத்தை ஒருகையால்
நொறுக்கிவிடும்
வைராக்கிய வெறியில்
கொத்தளித்து நிற்கிறது.

மொழியைக் கடந்து
முகங்கள் பல ஒன்றாகி
போரொலியிற் புறப்பட்டுக்
கனலாகி தகிக்கிறது.
சிவனு
உன் மரணம்
மலையிற் பெரிது
மாபெரிது மாபெரிது



படிப்பகம்

www.padippakam.com

## யாழ்ப்பாணக் கவிராயர்

புரட்சிக்குப் பாடியது போதும் - இனிப்
புதையல்பா பாடட்டும் என்று
புரட்சிக்குள் வாழ்ந்த பசுபதியோ நீ
புதைக்குள்ளே மறைந்ததுவும் ஏனோ?

யாழ்ப்பாணக் கவிராயர் என்று - புரட்சி
யாப்புக்குள் கவி செய்த தோழா
வாழ்க்கைக்கு முற்றிட்டுச் சென்றாய் - நீ
வையத்தில் செய்த கவி வாழும்

இயக்கத்தால் ஒன்றாகி நின்றோம் - கவிதை
இயல்பாலும் ஒன்றாகி நின்றோம்
வியர்வைக்கு கவி செய்யும்போது - அதில்
விடிவாக நீ என்றும் நிற்பாய்.

அவசரமாய் நீ சென்ற தேனோ - இறப்பின்
அவசரத்தை உணர்ந்ததனாற் தானோ?
எவர் சரமும் வீழ்த்தாத உன்னை - வந்து
எச் சரபம் வீழ்த்தியதோ தோழா!

உலகத்தை வாழ்விக்க நின்றாய் - இன்று
உனக்கென்ற சொந்த உருவிட்டுப்
பலவாகி நிற்கின்றாய் தோழா - அதைப்
பார்க்கின்ற சக்தி எனக்கில்லை.

செங்கொடிக்குப் பாடியவன் நாவை - தீயே
செம்மை எனக் கண்டாயா நன்னு
இங்குஅவன் உள்ளத்தை உன்னால் - வந்து
எரிக்கின்ற சக்தியது உண்டா?

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## அஞ்சலோட்டம்!

நீண்டதொரு மகத்தான அஞ்சலோட்டம்
வீண்படைகள் படிப்படியாய் வீழ்ச்சிகாண
நெருப்புண்டு காட்டாறு மலைகள் கண்டு
உருப்பெற்ற கொள்கைதனைக் கையிலேந்தி
வெற்றியெனும் நிலையான கம்பம் நோக்கிச்
சுற்றிவரும் பகைவீழ விரைந்து செல்லும்
செம்படையில் உன்பணியைச் சிறப்பாய்ச் செய்து
கம்பதனை மாற்றிய பின் நிற்கும் தோழா!
கவிதந்த பசுபதியே, உனது நோக்கைப்
புவிகாணும், நான் காணும் விழாவையுந்தன்
கவிகாணும் எனவையம் வாழ்த்துதையா!

— சுபத்திரன் —
“வசந்தம்” —1966 யூலை கவிஞர் பசுபதி நினைவு இதழ்



படிப்பகம்

www.padippakam.com

## தோழா பசுபதியே

புதியதோர் உலகம் காணப்
புறப்படு புரட்சிநோக்கி
கெதி கெதி என்று சொன்ன
கவிஞனே, காற்றில் மண்ணில்
நதியினில், வெளியில் தீயில்
கலந்தனை யானால் உந்தன்
நிதியெனும் கவிதை நெஞ்சில்
நிலைத்தது அழியாச் சின்னம்.

நீ விட்ட இடத்தில் நின்று
நினைவுள்ள மட்டும் பேனை
காவியே தொடர்வேன் தோழா
கவி பல பிறப்பான் தோழா
சாவிலே எனது மூச்சு
சங்கம மாகும் போது
காவிய பேனை ஏந்த
காத்தொரு கவிஞன் நிற்பான்.

சரித்திரமின்று உன்னைச்
சரிவரக் கணிக்கவில்லை
சரித்திரமென்றும் சற்றும்
பிந்தித்தான் கணக்குப் பார்க்கும்
நரித்தனம் வீழும்போது
நகைத்தவரோடும் போது
சரித்திர ஏடு உன்னைச்
சரிவரக் கணிக்கும் உண்மை.

தொழிலாளி — 7
பசுபதிநினைவுதினக்கவிதை



சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

# மன்னிப்பு இல்லை

ஏரெடுத்து நாம் வயலில் எழுதும்போது
ஏடெடுத்து நீயுந்தான் எழுதுகின்றாய்
வேரெடுத்து நெல்லெடுத்து எறியும்போது
விடிவிளக்கு நீயெடுத்து பயிலுகின்றாய்
போரெடுத்து நாம் சூடுபோடும் போது
பரீட்சையிலே நீகுனிந்து முழுகுகின்றாய்
காரெடுத்து அப்பால்நீ ஓடும்போது
கையெடுத்து நாம் வணங்க வேண்டுமடா

நாலடுக்கு மாளிகையிலே நீ புகுந்தாய்
நான் தானே அதை உனக்குக் கட்டித் தந்தேன்
ஈழத்தாய் பெற்றெடுத்த கல்லும் மண்ணும்
எடுத்துத்தான் நான் அதனை எழுப்பி தந்தேன்
மூளையினால் நீ உண்ட அனைத்து மெங்கள்
முழு உழைப்பால் உருவான எங்கள் சொத்து
மூளைகளே நாமுனுக்கு சோறுபோட்டு
உடையுடுத்திப் படிப்பித்து விட்ட சிலர்.

சர்வகலாசாலையிலே நீ அரிந்த
சவங்கூட என்னுடைய சவந்தான் இங்கே
கர்வமுடன் நீ சுமக்கும் கோட்டும் சூட்டும்
சட்டமென நீயெழுதி வைத்த தாளும்
பர்வதமாய் நாம் குவித்த உழைப்பு ... ரத்தம்
பட்டத்தை நீயெடுக்க வெட்கப்பட்டு
சர்வ கறுப்பாய்ப் போர்த்திச் செல்லுமந்தச்
சட்டைகளும் என்னுடைய உழைப்பின்பிள்ளை.

பெரும்பதவி பெற்றதனால் பெரிய சொத்தும்
பெட்டையுடன் பொக்ஸ்வகனும் இலட்சம்காசும்
தருமுனது மாமாக்கு இவற்றையள்ளித்
தந்துதவும் அழுக்குற்ற முரட்டுகைகள்
எருமைகளே இத்தனைக்கு மப்பாலின்னும்
திருடுதற்கும் நிர்வாண ஓட்டம் பார்த்து
வருவதற்கு இங்கிலாந்து பறந்துசெல்லும்
வம்பர்களே உங்களுக்கு மன்னிப்பு ... இல்லை

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## ஒரு ஜனநாயகவாதியின் புத்திமதி

மேடை எனும் தொட்டிலிலே
மக்களை இட்டு
தேர்தலெனும் தாலாட்டு
பாடி முடிந்தது
ஆறு ஆண்டு தூங்க வேண்டும்
அரை நடுவில் எழுந்தால்
தாறுமாறுதான் நடக்கும்
எதற்கு விழிப்பு?

உறங்கு என்று எத்தனையோ
உபகதைகள் சொன்னோமோ
உறங்கிவிட்டு இடையினிலே
எழுந்தேன் நீ
அறம் பிறழ்ந்து போனோ மென்று
அஞ்சினையோ; இல்லை
உறங்க வைக்க சொன்னகதை
உனக்குப் பிடிக்கலையோ?

இறங்கி வந்து அம்புலி மண்
இங்கு தவளவில்லையேயென்று
நிறம் சிவந்து கேட்ப தெல்லாம்
நிகழ்தல் கூடா
சிரம் குழப்பக் கேள்வி யெல்லாம்
கேட்கக் கூடா
பரம் பொருளை நம்புதல்போல்
எம்மை நம்பும்.

விலை உயர்ந்ததா? அதைச் சும்மா
குறிவைத்துக் கொள்
வேலை போனால் மறந்திடாமல்
எழுதி வைத்துக் கொள்
இறந்திடாமல் நீ இருந்தால்
அடுத்த தேர்தலில்
மறந்திடாமல் அதனைக் கேள்
பதில்கள் சொல்வோம்.

சுபத்திரன்



படிப்பகம்

# நிதர்சனத்தின் புத்திரர்கள்

எதிர்காலம் மிகவும் இனிமையானது
அது
எங்களுக்காகவே
மல்லிகை மலர்களையும்
நிலவையும்
தென்றலையும்
பத்திரப்படுத்தி வைத்திருக்கிறது.

நாங்கள்
இப்போஅடையும் துன்பத்தின்
முதுகெலும்பை முறித்தெடுத்துத்தான்
நமது எதிர்காலத்தின்
பல்லக்கு செய்யப்படும்

நாங்கள்
கண்ணிமைக்காது
இனிமையான எதிர்காலத்தை
நோக்கி நடக்கின்றோம்
நாங்கள் அச்சமற்றவர்கள்
எங்கள் எதிர்காலத்தில்
எங்களுக்கு
சந்தேகமில்லை.

நாங்கள்
நிதர்சனத்தின்
புத்திரர்கள்
திடசங்கற்பம்
பூண்ட எங்கள் இதயம்
எதையும் வெல்லும்.

சுபத்திரன்

www.padippakam.com

# நிலவின் மண்ணை நீபோய்த் திருடு

ஆள் பேரில்லா அழகு நிலாவை
அடைந்தேனென்று துள்ளுகிறாய்
காற்றே யில்லாக் காதல் தீவைக்
கண்டே னென்று பாடுகிறாய்
நேற்றோர் தெய்வ முடியிலிருந்த
நங்கை என்ற பொய்யதனை
தூற்றிவையம் உமிழப் பெரிய
தொண்டு செய்தேன் என்கின்றாய்.

விண்ணுட் காயும் மண்ணையள்ளி
வீட்டுள் வைத்துப் பார்க்கின்றேன்
மண்ணுள் இந்த வீரம் செய்ய
மாற்றானுக்குத் துணிவுண்டோ?
எண்ணிப் பார்த்தால் போதும் மாற்றான்
ஏங்கிப் போவான் என்றிங்கே
மண்ணைப் பார்த்துக் கிண்டல் செய்து
மார்பு தட்டி நிற்கின்றாய்.

உனது வீரம் பெரிய வீரம்
உன்னைப் பற்றி உலகறியும்
கனவில் வாழும் கறுத்த மனிதர்
கட்டுண்ட மெரிக்காவுள்ளே
முனங்கி முனங்கி உழைத்த செல்வம்
முழுதும் சுரண்டி அதனாலே
தனவானாகி உலகின் வாழ்வை
தட்டிப் பறிக்க நீ செய்யும்
வித்தைக்கிங்கு கையைத்தட்டி
வீரம் செய்தாய் எனச் சொல்ல
சித்தம் என்னும் கலங்கவில்லை
சீ' சீ'' போடா நீ பெரிய
மெத்தப் பெரிய வித்தை செய்தாய்
என்ற செய்தி வந்தாலும்
நத்திப் பிழைப்போம் என்று மட்டும்
நம்பியெம்மை நோக்காதே.

 சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

பாழும் வாழ்வுள் உலகைப் போட்டுப்
பெற்ற பெரிய செல்வத்தை
ஆளும் வர்க்கம் அண்டக் கடலுள்
அள்ளிப்போட்டுக் கொடுமைக்குள்
வாழும் வறிய மக்கட் குலத்துள்
வாரியள்ளும் போதிங்கு
கோளை வென்றாய் என்று வாழ்த்த
குறைந்து போச்சோ எம்முறுதி.

நன்றி, உன்னை நோக்கி நாங்கள்
நாட்டும் சொல்லைக் கேட்பாயோ?
வென்று அந்த வியட் நாம் மண்ணை
வெட்டி அள்ளி வருகின்றேன்
என்று சென்று அல்லற்பட்டு
ஐயோ! என்று கதிகெட்டு
இன்று தப்பிஓடும் நீதான்
அந்த நிலவை வென்றவனோ?

நிலவின் மண்ணை நீ போய்த் திருடு
நீ போய் அங்கே தீ மூட்டு
நிலத்தில் அந்த வித்தை காட்டி
நிற்க உன்னால் முடியாது
கலத்திற் சென்று கடக்குமந்த
கண்ணே இல்லா வெளியல்ல
நிலத்தில் உள்ள மக்கள் அவர்கள்
வீர சுதந்திர தீபமடா?

தொழிலாளி (12.08.1969)



படிப்பகம்

www.padippakam.com



சற்று முன்னர்தான்
நான்விழித் தெழுந்தேன்
இல்லை ... இல்லை ...
இல்லவே இல்லை
நான் உயிர்த் தெழுந்தேன்.

இந்த உலகில் எத்தனை மாற்றம்
இந்த உலகில் எத்தனை ஏற்றம்
எந்தன் மீது எனக்கொரு சீற்றம்!

கம்போடியாவின்
விடுதலைமீது
கண்ணாயிருந்த
எனது கவிதைகள்
வியட்நாம் போரில்
பண்ணிசைத் திருந்த
எனது பாடல்கள்
அவர்கள் விடுதலை
பெற்றந்த வேளை
வாழ்த்திட வாயே
திறவா திருந்தது.

என்றால் ... என்றால்
உறங்கியா கிடந்தேன்?
இறந்தே கிடந்தேன்!
இறந்தே கிடந்தேன்!

ஆமாம்! ஆமாம்!
சற்று முன்னர்தான்
நான் விழித்தெழுந்தேன்
இல்லை ... இல்லை ...
இல்லவே இல்லை
நான் உயிர்த் தெழுந்தேன்.



படிப்பகம்

www.padippakam.com

எனது பாட்டுடைத்
தலைவன் இறந்தனன்
இந்த துயரின்
கர்ச்சனைப் பிளிறல்
முழக்கம் கூட
என்னை உசுப்பி
உயிர்ப்பிக்க முடியாது
இறந்து கிடந்தேன்!
இறந்து கிடந்தேன்!
அழுகிச் சிதைந்து
துர் மணம் வீசி
எந்த மனிதனும்
என்னருகணுக
அஞ்சு மளவில்
புழுத்துக் கிடந்தேன்
சீரழிந் திருந்தேன்.

ஐயா! ஐயா!
மா ஓ என்ற
மா பெரும் மனிதா
உனது மரணம்
உயிர்ப்பிக்கும் துயரில்
பிரசன்ன மாகும்
உணர்வை எப்படி
அப்படியே நான்
அச்சடித்தாற் போல்
வெளியே உரைப்பேன்.

உனது மரணம்
என்னுணர்வுள்ளே
சமைக்கு மந்த
துய ராலயத்தை
அப்படியே நான்
வடிக்க
என்னிடம்
சொல்வளமில்லை!
சொற்களே! சொற்களே!
என்னிடம் வருக!
உங்களைப் புனைந்து



படிப்பகம்

மா ஓ என்ற
மாபெரும் மனிதனின்
நினைவாலயத்தை
நான் சமைப்பதற்கு
சொற்களே! சொற்களே!
என்னிடம் வருக!
உங்களை இறைஞ்சிக்
கெஞ்சினேன் வருக!
உங்கள் கால்களில்
விழுந்து வணங்கி
மலர் குவிக்கின்றேன்
எழுக! வருக!

இந்த உலகின்
அவன் துயில் கொண்ட
துயரைப் பாடிய
கவிஞரின் கவிதையில்
நெகிழ்ந்து விழுந்த
கண்ணீர் வரிகளே!
நயத்துடன் விம்மிய
பெருமூச்சின் வார்த்தையே!
படித்தும் மனதில்
உருகி ஓடிய
வெம்மை மிக்க
ஏக்கத்தின் பதங்களே!
துயராற் தொண்டையுள்
தடைப்பட்டு வெளியே
வந்து அழாத
எண்ணத்தின் ஊமைச்
சொற்களின் சொற்களே!

கருத்தினைச் சுமக்கும்
உயிர் வாகனங்களே!
எழுக! வருக!
உங்களை குவித்து
எனது தலைவனை
வாழ்த்தும் புதிய கவிதையாற் புவியில்
நினைவாலயம் நான்
சமைத்திட வேண்டும்
வருக! வருக!
எழுக! வருக!

சற்று முன்னர் தான்
நான் விழித்தெழுந்தேன்
இல்லை ... இல்லை ...
இல்லவே இல்லை
நான் உயிர்த் தெழுந்தேன்.

ஈழமே! ஈழமே!
என்னரும் பூமியே
உயிர்த்து நான் எழுந்ததும்
நீ பெரும் பிரளி
பண்ணியதாக
முறைப் பா டொன்று
எனக்குக் கிடைத்ததே!

உயிர்த்து எழுந்து
கண்ணை விழித்து
முதல் மூச்சு வாங்கிப்
பெருமூச்சாய் விட்டேன்

தலைவனின் மரணச்
செய்தியில் வதங்கித்
திரும்பிய எனக்கு
ஈழமே! ஈழமே!
அவர்கள் தலைமையிற்.

போர் புரிந்ததாய்
நாமறிய செய்திகள்
நாசத்தின் செய்திகள்
உயிர்த்து நான் எழுந்ததும்
எனக்கு கிடைத்ததே!
எத்தனை நூறு
ஆண்டுகள் பிந்திய
நாடாய் மனிதனாய்
போயினை யென்று
உணர்ந்தனையடா?
நினைந்தனையடா?

அந்தக் கொடிய
மன்னரின் பிணங்களைப்
பாதுகாத்திடும்

www.padippakam.com

உனது மண்டைகள்
நவீன காலச்
சவக் காம்பறையோ
பழைய காலப்
பிரமிட்டுகளோ

வர்க்கச் சமரில் உனது கரங்களால்
வதைபட வேண்டிய
வஞ்சகர் உனது
மடமையிற் பவனி
வருகிறார் என்பதை
உணர்ந்தனையாடா?
நினைந்தனையாடா?

செத்துக் கிடந்த நான்
உயிர்த்ததும் கிடைத்த
உன்னைத் தழுவிய
செய்திகள் நெஞ்சைப்
பற்றிப் பிசைய
நீ பெரும் பிரளி
பண்ணியதாக
முறைப் பாடொன்று
எனக்குக் கிடைத்ததே!

சிங்களம் தமிழின்
உயிரையும் கற்பையும்
நிலத்திற் சிந்தி
வெறி கொண்டாடிய
பேயின் செய்திகள்
உயிர்த்து நான் எழுந்ததும்
எனக்குக் கிடைத்ததே!

காடைத் தனத்திற்
கள்கறந் தருந்தி
மனித மாமிசம்
தின்றதாய்த் தகவல்கள்
உயிர்த்து நான் எழுந்ததும்
எனக்குக் கிடைத்ததே!



படிப்பகம்

www.padippakam.com

எல்லாளனையும்
கைமுனுவையும்
புதைகுழி நின்று
தோண்டியெடுத்து
பிய்த்துக் குதறி
எறியுதே, எனது
பேனையரின் மைவிழி
அழுகுதே! கதறுதே!

சீ...! சீ ...! நீயுமோர்
மனிதனா என்று
புழுத்த பாட்டில்
ஏசி அறைந்து
உதைக்க வேண்டும்
போலவேயுள்ளது.

சரி ... சரி ... போ ... போ ...
இனிமேலாவது
சேட்டை பண்ணாதே!
சேட்டை பண்ணாதே!

மரணிக்காத
மரண மெய்திய
மாஓ தலைமையில்
அணிவகுக்கின்ற
அணியிலே நில்லு.

எல்லாம் வல்ல
மனிதனேயுன்னை
வெல்லுதற் கெந்தப்
பிரபஞ்சத் துள்ளும்
எதுவுமேயில்லை
எழு! எழு! இன்றே
மாஓ தலைமையில்
அணிவகுக்கின்ற
அணியிலே நில்லு.

1977 ஆகஸ்ட் கலவரத்தின் பின் எழுதப்பட்டது.
(1977 ஆகஸ்ட்டில் இலங்கையில் இனக்கலவரம் நடந்தது. தமிழரின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. கொழும்பில் பல தமிழரின் கடைகள் எரிக்கப்பட்டன.)

சுபத்திரன் 

படிப்பகம்

www.padippakam.com

## மனிதன்

ஊன் வடியும் உடம்போடும் உடைந்த கலத்தோடும்
பேன் சிதம்பிப் புழுத்த தலையோடும் - தான் விழுந்து
சேடம் இழுத்துச் செத்தவனின் சொந்த இடம்
பாடம் எழுதுகிறேன் மீட்டு.

சற்று மதுவும் சல்லாபமாய்ப் புகையும்
தொற்று வியாதியெனத் தொட்டதனால் - முற்றும்
சீரழிந்த பிச்சைக் காரன் நிலை கண்டு
யாரென்று கேட்டேன் அறிய.

ஊரில்லைப் பேரில்லை உறவு பகையில்லை
யாரென்று சொல்லப் பதிலில்லைக் - கூரிரவில்
இருமிச் சிதளமும் வடியக் கிடக்கின்றான்
பெருமிதம் அவனுமோர் மனிதன்

நல்லையின் கந்தனுக்கு நாற் சாமப் பூசை மணி
நல்லை முருகன் பூமியிலே - செல்லாது
நாள் முழுதும் வெறும் வாயினாய் நராங்கிக் கிடந்தானின்
ஏழ்மைக் கெட்டாது பூசை.

என்னும் வினாக்கள் என்னிடமே ஊற்றெடுக்க
அன்று நடந்தேன் தள்ளாடி - இன்று பகல்
சேடம் இழுத்துச் செத்தவனின் சொந்த இடம்
வாடகைக்குப் பெற்றேன் பரிந்து.



படிப்பகம்

www.padippakam.com

## ஒரு சித்தார்த்தன் நிர்வாணம் அடைகின்றான்

"ஆசை ஒழிந்திடில் துன்பம் நீங்கும்
ஐயனே நீ உன் அரச மரத்தின்
அடியில் கண்ட முடிவால் பரிநிர்
வாணம் அடைந்தனை; புத்தன் ஆகினாய்

ஏழு ஆயிரம் ரூபா தேடி
எழுத்தறிவித்த இறைவன்; தொழிலை
வாங்கும் ஆசை ஊட்டத் தரகன்
பின்னாற் சுற்றி பெரிய மனிதன்
முன்னால் கைகள் கட்டி நின்று
மண்ணாகத் தொகையும் தொழிலுமற்று
ஆசை ஒழிந்து தாகம் ஒழிந்து
பரிநிர்வாண நிலை நான் அடைந்து
பக்குவ முற்றேன் புத்தன் வாழ்க!
தர்மம் வாழ்க! சங்கம் வாழ்க! !



படிப்பகம்

www.padippakam.com

## திறனாய அவளில்லை

வானொழுகும் நிலாமீது
வந்து மூடும்
முகிலாகக் கோபமவள்
முகத்தை மூட
ஏனோ என் மல்லிகையே
இதயம் காய

நானென் பிழைவிட்டேன்
நவிலு என்றேன்.

நான் திறப்பு விழாச் செய்யாக்
கவிதை யொன்று
ஏன் இன்று பத்திரிகை
மீது உண்டு
இது என்ன புது வழக்கம்
விளக்கம் வேண்டும்
நான் படித்துத் திறனாய்வு
செய்த பின்தான்
கவிதைகளை அனுப்புகின்ற
முறையில் ஏனோ?

புதுமாற்றம் உரையென்றாள் .....
பூத்த கோபம்
இது தானோ என எண்ணி
இழுத் தெடுத்து
மெதுவாக நான் அணைத்தேன்
சிரித்தாள் சீ ...! சீ ...!
இது என்ன விடுமென்னை
என்றாள் இன்று
விட்டேகி விட்டாளே
விம்முகின்றேன்!

குளமான கண்ணீரைக்
கவிதையாக
இளமாதின் நினைவாகத்

www.padippakam.com

துயரமாக
எழுதுகிற இக்கவிதை
எடுத்துப் பாடி
திறனாய் அவளில்லை
அவள்தான் அங்கு
தியாகி விட்டாளே!

சாம்பல் மேட்டில்
நிகழ்கின்ற கிருத்தியத்தின்
நிசப்தக் காட்டில்
அனல்மடிந்த படுக்கையிலே
அள்ளிப் போட்ட
பூவாகி உறங்குகிறாள்
அவளை நீங்கள்
மணியடித்துக் குழப்பாதீர்,

மந்திரத்தை
முணு முணுத்து எழுப்பாதீர்
சந்தணத்தைக்
குங்குமத்தைப் பன்னீரை
தெளித்து அங்கு
கூடிநின்று கதைக்காதீர்
உறங்கு மெந்தன்
இதயத்தின் இதயத்தை
எழுப்பாதீர்! குழப்பாதீர்!
மதம் பிடித்த பேய்காள் நீர்
நெருப்பு மூட்டி
வதம் செய்தீர் இனி என்ன?
சுடலைக்குள்ளே
நீர் எரித்த ரகசியத்தின்
சிதை அழகுபார்த்து
ரசித்ததினிப் போதும்
அகலுங்கள் அகலுங்கள்

பிணந்தின்னும் கழுகுகளின்
மலைக்குகை தும் முன்னம்
சுடலை காக்கும்
நரிகாள் நீர்சொல்லும்
அருகில் வந்து
அவளோடு நானெனது



படிப்பகம்

www.padippakam.com

கவிதையாலே
சில்சொற்கள் சிலசொற்கள்
கதைக்க வேண்டும்.

"சாதிக்குள் தன் சாதி
உயர்ந்த தென்று
சாதிக்கும் ஒரு சாதி
மிருகக் கூட்டம்
சாதித்து விட்டார்கள்
மல்லிகையே!
நீ உறங்கு
நான் உறங்கப் போவதில்லை
சத்தியமாய்,
நாளை
மிக விரைவில்
பூக்கும் புது மண்ணில்
பூக்கும் புது மலரை
நீ சூடு நான் கொணர்வேன்
தூங்கு.



படிப்பகம்

www.padippakam.com

## காதற் தோல்வியின் வெள்ளிவிழா கொண்டாடும் கிழவன் எழுதும் கவிதையிது

என்பற்கள் எல்லாம் அப்படியே இருக்கிறது
இப்போதுதான் கொடுப்புப் பல்லொன்று அசைகிறது
உன் பற்கள் எல்லாம் எப்படித்தான் சீக்கிரமாய்
வீழ்ந்தனவோ?
கைக்குத் தரிசியென சிரித்திருந்த பற்களெல்லாம்
எப்படித்தான் பூமியிலே புதையுண்டு போனதுவோ?

புல்லரிக்கும் உனது நடை பூபூக்கும் பூமியெல்லாம்
வில்லெடுக்குமே உனது விழியிரண்டும்
அதற்கிடையில்
ஏன் வளைந்தாய்? என்றாலும் இன்னும்
உனது மலர்க்காலம்
ஆத்மாவின் பெட்ட கத்துட் பத்திரமாய் இருக்கிறது.

உன் பேத்தியோடு நீ கோயில் செல்லுகையில்
என் பேரன் அவள் கையைப் பிடித்திழுத்தான்
ஏய் கிழவி
உன் பொக்கை வாய்க்குள் பூரித்த புன்னகையின்
ரகசியந்தான் என்ன?
ஊருக்குள்
இன்னும் நமது காதல் கதை அழிந்து போகவில்லை

உன்னை மணந்தவனும் என்னை மணந்தவளும்
எங்களது காதல் கதை தெரிந்து வந்தவர்கள்
எட்டாப் பழமே நாம் பழுத்துப் போய்விட்டோம்
ஆனாலும்
இன்னும் எனக்கும் நம்காதல் பழுக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

## இரும்பும் துரும்பும்

வான்முட்டும் மாளிகைகள்
நிமிர்ந்து நிற்க
வானத்துள் மனிதன் போய்ச்
சுழன்று வந்து
கடலுக்குள் வந்து
கடலுக்குள் விளையாடி

வரவு முன்னைப்
பாவிக்கக் கண்டேனே
இரும்பேயுந்தன்
பலம் கண்டேன்
பணிகின்றேன்
சக்தி கண்டேன்
நான் துரும்பு
உன்னைப் போய்
வாழ்த்தக் கூடத்
தரமற்றோன்.

, , , , , , , , , , , , நான்
அழுக்கைத் தேய்த்துத்
தேய்கின்ற
தும்புக் கட்டு
- இல்லையெனில்
கால் தேய்த்துத்
தேய்கின்ற
வாசற் சாக்கு
அதுவுமின்றேல்
ஒரு துண்டுக்
கயிறாவேன்
இது என் வாழ்வோ!

இரும்பாக இருப்பதிலே
பெருமையென்று
இதுவரையில் நான் நினைத்த
தில்லைத் தோழா!

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

இரும்பென்றும்
துரும்பென்றும்
பிரித்த நீயே
உரைப்பது தான்
வியப்பாக இருக்குதப்பா!
மெலிந்தவன் நீ
மெள்ளத் தென்றல்
தொட்டாலும்
துவழ்கின்ற
உனது மேனி
உழைத்துழைத்து
உருக்குலைந்த
தோழன் மேனி
இது உண்மை!
மற்றோருண்மை

நானந்தத்
தோழர்களின்
உள்ளம் போன்று
உள்ளதனாற் பெருமை
யுற்றேன் தோழா!
ஆமாம்!
உனக்குள்ளே
நானானேன்
துரும்புக்குள்ளே
இரும்பானேன்
இது ஒன்றே
எனக்கு மேன்மை.

வசந்தம் (1966 மே மலர்)



படிப்பகம்

www.padippakam.com

## காக்கை விடு தூது

காக்காய் காக்காய் கருங்கால் காக்காய்
காஞ்சுரங் கொட்டை தட்டியுடைத்து
அலகு பிழந்து கருங்குரல் மீட்டு
அகலச் சிறகு அகட்டிப் பறந்து
நீயும் நின் பெட்டையும்
மாமாங்கமாடி மாத்தளைக்குச் செல்வீரேல்
மகாவலி கங்கையின் மருங்கிற் குளித்து
மலையிடை வளர்ந்த இலவமரத்தின்
கெவரிடை நின்று உடம்பு சிலிர்த்து
கொட்டும் நீர்த்துளிகள் மிளகுக்கொடியில்
பட்டுத் தெறிக்கும் புதினம் பார்த்து
கதிரேசன் கோயிற் புக்கை தின்று
கவடு பெலல செல்வாய் அங்கே
புல்லும் புதரும் பூத்துக் கிடக்க
அல்லும் பகலும் ஊழிப் பசியால்
கிள்ளப்பட்டு கொல்லப்பட்டு
இடிந்து மெலிந்து லயத்துக்குள்ளே
பூசிய சாணப் பொருக்கு வெடித்து
பண்ணாய்க் கிடக்கும் நிலத்தின் மீது

கனவாய்; கட்டுப்பட்ட புயலாய்
பெருங்குடல் எழுந்து சிறுகுடல் பிடித்து
அருந்தக் குமுறும் வயிற்றுடன் கிடந்து
தாய்முலைக் காம்பு நன்னி நன்னி
இரத்த முறிஞ்சிக் குடிக்கும் குழந்தையின்
கதறலில் நெஞ்சைக் கருங்கல்லாக்கி
கவிதையில் எந்த வடிவம் சுமக்க
அஞ்சிடும் கோபமும் ஆத்திரக் குமுறலும்
நெஞ்சிடை சுமந்து நெருப்புப் பணியாய்
அக்கினி மழையாய் புதிய உலகின்
பாட்டுடைத் தலைவன் மலையில் எழுவான்!
விதியே! விதியே! என்று கதறும்
மாமலை செய்த மனிதனைக் கண்டு
காக்கா காலிற் செய்தி அனுப்பும்
கவிஞன் நெஞ்சை அங்கு கொல்லுதி ...

சுபத்திரன்



படிப்பகம்

வெயில் வெறி கொண்டு குத்தியதாலே
பித்தம் பிடித்து மிலாந்திக் கிடந்த
வயல் வெளிக்குள்ளே நிஷ்டையிலிருந்து
நெல்லையெழுப்பி வானைப் பிளந்து
சாறு எடுத்து உண்ணக் கொடுத்து
பரணின் கீழே பாம்பு படுக்க
பஞ்சணை மெத்தையிற் போடியுறங்க
வயலைத் தூக்கி கண்ணுள்ளே வைத்து
கண்ணீர் செந்நீர் மெய்நீரூற்றி
பன்னீர்க் குடிலுக்குள் தாய்மையுற்ற
பெண்மை பிள்ளையை வளர்த்தனளாக
வளர்த்து நெல்லை அறுத்துப் போடியை
வளர்த்து வளர்த்து வீங்க வைத்த
உனது வர்க்கத் தோழன் இங்கே
உனது லயத்தின் அச்சிலிட்டு
வெட்டியெடுத்த குடிசையிலுள்ளான்
உன்னை வாட்டி வதைக்கும்
துரைமகனாரைச் செதுக்கி யெடுக்க
சிற்பமாகவே இங்கே போடிகள்
சினந்து சுரண்டி உழைப்பை திருடி
உழவு மகனின் உதிரம் குடிப்பர்
சாட்டை எடுத்து நெஞ்சிலடிப்பர்
பெண்டிலைப் பதைக்க நெல்லுக்கேட்பர் (!)
உனது மலையாய் குவித்த நெல்லை
மூஞ்சூறு எலிகள் அறுப்பதைப் பார்த்து
சகிப்பினும் சகிப்பார் வயலுடன் கூடி

பெற்ற தனது சொந்தப் பிள்ளையாம்
நெல்லை உழவன் தொட்டாற் போதும்
கொதித்துக் கறுத்து குதித்து மறுப்பர்
கொடிய அந்த நாய்களின் பார்வை
தொட்டாற் சுணைக்கும் காஞ்சோண்டி
பட்ட இடமெல்லாம் தடித்து எழும்பும்
சொறிந்தால் உடனே புண்ணாய்ப் போகும்!
என்று சொல்லடா காலை விடிவை
நின்று உரைக்கும் கறுத்த மலரே!

கடலலைமீது சித்திரம் வரைந்து
கரவலை மீனவர் நெஞ்சில் வீசும்
அனலலை குடித்து அக்கினியாகி
எழுங்கதிர் காண முன்னெழு மொழுக்கம்
பிளப்பிலே உன்னுடல் பறந்ததாகையால்
மலை முகட்டோரம் ஆதவன் வந்து
மோதும் காட்சி உனக்குப் புதிய
அனுபவமாகும்; ஆகையாலதனை
ரசித்து மட்டக்களப்பு திரும்பமுன்
மறந்திடாதிதையும் அங்கு உரைத்திடு
மலையும் வயலும் ஒரு அணியாகி
மானமே எங்கள் வர்க்க குரலாய்
அலைகடலெனும் மனிதனைக் கூட்டி
ஆலையிற் சீறும் தோழனை வீரப்
புதல்வனை முற்றிய மனித
சக்தியை முன்னணி மனிதனாய் கொண்டு
எரிதழல் கொண்டு நெருப்பு விழாவின்
அனலோடு தணலோடு கனலோடு ஆடி
அக்கினி அக்கினி அக்கினியாகி
குளிர்ந்த மலையெல்லாம் எரிமலையாகி
குமுதம் தாமரை பூத்த முகங்கள்
கொதிக்கும் அழலில் மறு பிறப்பாக
பந்தலிற் பூத்த மல்லிகை முல்லை
மொட்டுக்கள் வெடித்த இடி முழக்கத்தில்
பட்டெழும் மின்னல் கொடிகளாய் ஆடிப்
புதுவிழா கண்டு விடிவு கண்டிட
எழு எனக் கூறி அவர்கள் கூறிடும்
மறுமொழியோடு வருவாய் காக்காய் !!

குமரன் இதழ் 42 (15.12.1974)

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சாதிபேத எதிர்ப்புப் போராட்டக் கவிதைகள்

சாதித் திமிருடன் வாழும் தமிழனோர்
பாதித் தமிழனடா.

நாறும் பிணத்திலும் சாதியோ? - இந்த
நானிலத்தில் இது நீதியோ?
நாறும் பிணமுனக் கேனடா? - பிண
நாற்றம் உன் கொள்கையில் மேலடா!

சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

## செந்தீ

சாதித் திமிருடன் வாழும் தமிழனோர்
பாதித் தமிழனடா - அவர்
நீதி தனக்கொரு நீதி பிறர்க்கொரு
நீதியென் றாடுதடா - தமிழ்
நீதி மறந்தவர் எந்த மதத்தினிற்
சாதி படித்தனரோ - அதை
மோதி யுடைப்பது தானொரு பாதையென்
றோதி எழுந்திடுவாய்

அந்த மனிதனும் இந்த உலகினின்
சொந்த மனிதனடா - அவன்
இந்த உலகினில் வந்து கிடப்பது
நொந்து கிடந்திடவோ - அட
இந்து மதத்தினுக் கிந்த நிலைதனைத்
தந்தது எந்த மறை - அது
வெந்து மடிந்திட உந்தி யெழுந்திடும்
செந்தீ எழுந்திடுவாய்.

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## காலம் நெருங்குதடா

கோடித் தலையுடன் சீறி வருங் கடல்
கோபம் உன் கோபமடா - தோழா
வாடி உழைத்திடும் போது எரிமலை
வாயுன துள்ளமடா - குடில்
தேடிக் கிடந்திடும் துன்பமறிந்திடத்
தோழா எழுந்திடுவாய் - பல
கோடிப் புலி ஒரு யானையென உரு
கொண்டது என்று நட.

வையமெலாம் ஒரு கையினுள் வைத்திடும்
வேகம் படைத்தவனே - உல
குய்ய எழுந்திடும் கோலம் படைத்திடக்
காலம் நெருங்குதடா - ஒரு
பொய்ம்மையிலா உயர் பூமியொன்றாகிடப்
பொங்கிடுவாய் மலைகள் - சரம்
எய்ய எழுந்து நடந்தனவோ - என
எட்டி நடந்திடடா.



படிப்பகம்

www.padippakam.com

## எரியும் பண நீதி

ஏற்றிய விளக்கை அணைத்தது மென்ன
ஆண்டவன் கண்கள் அழிந்தனவோ?
ஏற்றிய கொடியை இறக்கிய தென்ன
ஏனடா தம்பம் முறிந்ததுவோ?
பூட்டிய தேரை நிறுத்திய தென்ன
பட்டென அச்சு முறிந்தனவோ?
பூட்டிய கதவுள் ஆண்டவன் இல்லை
பொய்ம்மையின் சிலையைப் போற்றுகிறார்.

நாதம் கூட்டிய மணியின் ஓசை
நாக்கு விழுந்து நின்றதுவோ?
வேதம் கூட்டும் வேதியன் நாக்கு
வெந்தழல் பட்டுத் தீய்ந்ததுவோ
பேதம் கூட்டும் பேதமை நெஞ்சம்
பெற்றுத் தருமோ அறநீதி
மோதக் கூட்டும் அணியின் நாதம்
மூண்டால் எரியும் பணநீதி.



படிப்பகம்

## நெஞ்சை நிமிர்த்திடுவாய்

பாளையைச் சீவிடும் கையைப் புதுப்பணி
பார்த்துக் கிடக்குதடா - புது
நாளைப் படைத்திடும் நாளில் வரும் பகை
நாய்களைச் சீவிடவே - அரி
வாளைச் சுமந்திடும் தோழர் உமதணி
வந்து நெருங்குகிறார் - அவர்
தோளைப் பல தொழிலாற்றிடும் தோழர்கள்
தொட்டு நெருங்குகிறார்.

கோயிற் கதவுகள் மூடிக் கிடப்பது
கண்டு எழுந்திடுவாய் - மத
வாயிற் கதவினைக் காலப் பெருங்கடல்
வந்து அடிக்குதடா - எழு
பாயிற் கிடந்தது போதும் உனதணிப்
பாசறை வென்று வரும் - மத
நோயிற் பிடித்தது போரில் முறிந்தது
நெஞ்சை நிமிர்த்திடுவாய்.

## எழுந்தனர் வடக்கில்

தமிழ்ப் பெரும் குலத்தில் வந்து
தாழ்ந்தவன் என்றூர் கூறும்
தமிழ் மகன் நளவன் பள்ளன்
துரும்பன் என்றுரைக்கும் சாதித்
தமிழ்ப்பெரும் பிரிவில் ஒன்றாய்த்
தமிழனும் பிறந்தான் ஆஹா
தமிழ்க் குலப் பெருமை என்னே!
தமிழனோ தமிழனேதான்.

ஆலயக் கதவுக்கப்பால்
ஐயனும் அவனைக் காக்கும்
மேலவக் குலமும் செய்த
மடமையின் பிடியிற் சிக்கி
நாளெலாம் உழைக்கும் தோழன்
நாயினிற் சிறந்தோ னென்றால்
மேலவர் சுகத்திற்காக
மாடென உழைப்பதொன்றே

குடிமையை அடிமை யென்ற
கொள்கையைப் பல நூற்றாண்டாய்
அடிமையாய் ஏற்ற தோழர்
எழந்தனர் வடக்கிலின்று
பொடிபட எழுந்தோம். ஆம்! ஆம்!
பொங்கினோம்; பலியாடாகிக்
குடிசையிற் கிடந்த காலம்
கழுவினில ஏறிற்றம்மா.

செங்கொடி அணியிற் தாழ்ந்த
சனத்தவர் என்றோர் வந்தார்
வெங்கொடுங் கலட்டி யெல்லாம்
வீரமோ வீர மென்று
சங்கொலி கூறச்
சக்தியால் வர்க்க நாதம்
பொங்குது வா! வா என்று
பாளையிற் சிறுமை வைத்தார்.



சுபத்திரன்

www.padippakam.com

## வெல்லாது வீட்டுக்குத் திரும்பானையா!

மரமேறி மரமேறி
மரத்த நெஞ்சம்
மடைமையெனும் மரமேறி
மரத்த நெஞ்சை
வரமேதான் என்றெண்ணி
வாழ்த்தும் கேட்டை
வைத்துள்ளார் நெஞ்சேறி
வதைக்க வேண்டும்
உரமேறி உரமேறி
உருக்குப் பெற்ற
உன் கரமே வட்டேறிப்
பாளை சீவி
மரமூறும் மதமெல்லாம்
கறப்ப தொப்ப
மதத்தூறும் மதமெல்லாம்
கறக்க வேண்டும்
பிறப்பாலே பெருஞ்சாதி
என்று கூறிப்
பேதமையால் சிறுசாதி
ஆகிப் போனோர்
திறப்பிட்டுப் பூட்டுகிறார்
கோயி லெல்லாம்
திறவென்றால் திமிரென்று
கூறுகின்றார்
நிறத்தாலே கறுப்பென்று
அமெரிக்காவில்
நிறபேதம் காட்டுகிற
கொடியோர் போல
பிறப்பாலே இந்து என
இருந்தும் கூட
பெய்கின்றார் பெருந்துன்பம்
ஐயோ! ஐயோ! !



படிப்பகம்

www.padippakam.com

பாடையிலே சாதிதனை
ஏற்று என்றால்
பலாத்காரம் பலாத்காரம்
ஆகா தென்று
கூடையிலே வைத்ததனைச்
சுமந்து சென்று

ஊரெல்லாம் இலவசமாய்
வழங்குகின்றாய்
கேடையா நீ செய்யும்
செயல்கள் என்றால்
கெடுக்காதே ஆகமத்தைச்
சைவம் போச்சு
படைத்தவனே படைத்திட்ட
சட்ட திட்டம்
பாழாகப் போவதுவோ
என்றாரையா

ஆரையா இனியுன்னைத்
திருத்தல் கூடும்
ஏனையா ஆண்டவனைச்
சிறையில் இட்டாய்
போரையா புறப்பட்டு
விட்டாரையா
பொல்லாமைக் கேள்விலையை
வைத்தாரையா
ஊரையா ரெண்டாச்சுப்
புதுமை பொய்யா
ஊற்றெடுக்கும் உள்ளமெலாம்
ஒன்றிற்ரையா
வீரையா புறப்பட்டு
விட்டானையா
வெல்லாது வீட்டுக்குத்
திரும்பானையா.





படிப்பகம்

## தத்துவம்

வையமெல்லாம் துயரோடி
வரண்டு கிடக்கையிலே
பொய் மொழியாற் தம்மைப்
புதைக்கப் புறப்பட்ட
வல்லவர்கள் இங்கு
வாழ்ந்து சிறப்பாக
வேண்டுங்கால் வந்து
சுரண்டிச் சுரண்டிச்
சுகங்கண்டு கொழுத்ததனால்
வரண்டு சிதைந்த சமுதாயம்
பெற்றெடுத்த சாதிக் குழந்தை
பிறப்பு முதல்
உயிர் குடித்து!
உடலரித்து!
உண்டு!
குழந்தைகளின் பிஞ்சு இரத்தத்தைப்பிழிந்து!
குடித்து!
பெற்றதனால்
பெற்றெடுத்த வர்க்கத்தின்
தடித்த தலைக்குள்ளே
தரம் வைத்துச் சென்றதடா
இன்று
சாதி பலவாகிச்
சாத்திரத்தின் துணையாகிப்
பள்ளன்
பறையன்
நளவன் எனச்சொல்லிப்
பாத்திரங்கள் செய்து
அரங்கத்தில் ஏற்றி
ஆடவிட்டுத்
திரையிட்டார்!
அத்திரைக்கு
மதமென்னும் வர்ணம்
மளமளத்துப் பூசி விட்டார்
இதனாலே
மெள்ளச் சுரண்ட

www.padippakam.com

சுரண்டலுக்கு உட்பட்டுக்
காய்ந்து
கருகிக்
கனலுண்டு!
காலத்தால்
தேய்ந்து உருகும், தோழர் தொழில்
கூறும் புதுமை
அவர் தொழிலால்
அவனிக் கெடுத்தியம்பும் தத்துவத்தை
ஏன் மறந்தோம்!
கேட்பீர்!

ஊத்தை சுமந்திடும் தோழன் - தினம்
ஊரைக் கழுவிச் சுமந்திடும் தோழன்
சாற்றுகிறானொரு பாடம் - அவன்
சாதி குறைந்தவன் தாழ்ந்தவனென்ற
ஏற்ற மிறக்க மிழந்தான் - அவன்
ஏந்திடும் வாளியில் எத்தனை நீதி
நாற்றமென்பார் சிலரங்கே - ஆம்
நாலு வருணமும் நாறுது அங்கே

தென்னை மரத்தினிலேறி - மது
தேடித் திரிந்திடும் மேலவர் வாயில்
இன்பம் சொரிந்திடும் தோழன் - அவன்
இன்றிக் கடவுள்ர் பூசைகளில்லை
என்று இருந்திடும் போது - அவன்
எப்படி கீழவனாவது சும்மா
நின்று குடித்தது போதும் - இனி
நிந்தனை விட்டு நீ சிந்தனை செய்வாய்.

அழுக்குக் கழுவிடும் தோழன் - இவன்
அவித்து அடித்து அலம்பிடும் தோழன்
முழுமை இவன் தொழில் பேசும் - உலகம்
முழுதும் அவித்து அடித்து அலம்பி
பழுத்த வெயிலிடை யிட்டு - அதைப்
பக்குவமாய் வரஇஸ்திரி இட்டு
வெழுத்த உலகினைச் செய்ய - இவன்
வேலை சிறந்ததோர் தத்துவமம்மா.



சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

வேண்டுமளவுடன் வைத்துச் சில
வேண்டாப் பொருள்களை வெட்டி அழித்து
மீண்டும் வளர்த்திடும் போது - அதை
மீண்டுமரிந்து உலகினை உய்க்கும்
நீண்ட பணிதனைச் செய்ய - முழு
நீதி படைத்தவர் முன் வரும்போது
நாண்டு வளர் மயிர் வெட்டித் - தினம்
நல்ல பணி தரும் கலைஞனும் பாடம்

பொங்கு துயருடன் செய்தி - தரும்
பறைகளடித்து முழங்கிடும் தோழன்
எங்கும் சமத்துவமுண்டு - மரண
மத்தனையு முலகத்தினி லொன்று
தங்கியிருந்திடும் போது - ஏன்
தரங்கள் பிரிக்கிறீர் என்று உரைத்து
இங்கறிவுப் பணி செய்யும் - தொழில்
எத்தனை எத்தனை தத்துவமம்மா.

* குறிப்பு :-

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் 1967ம், ஆண்டு நடைபெற்ற தமிழ் விழா கவியரங்கில் பாடப்பட்ட கவிதையில் ஒரு பகுதி.



படிப்பகம்

## பாழ்பட்ட சாதி வெறி

“செந்தமிழ ரொற்றுமையிற்
சிறப்புக் காண்போம்
சீறிவரும் சிங்களத்தைச்
சினந்து நிற்போம்
வந்திடுவீர்!” என வையம்
அறியக் கூவி
வந்தவரே! இன்றும்மை
வினவுகின்றோம்!

என்ன மொழி சொன்னீரோ
அதைத்தா னின்று
சொல்லுகிறோ மதற்கென்ன
பதிலைச் சொல்வீர்
என்றறியக் கேட்கவில்லை
எனக்கு வேண்டும்
எம்மனையிற் சுதந்திரமாய்
வாழும் வாழ்வு!

வெறியூறும் பனைவாழும்
நிலத்தில் வாழும்
வெறியாலே மானிடரை
வகுத்துப் பார்த்துக்
குறிவைத்து வாழுகிறீர்!
கொள்ளு மின்பம்
கொடுக்கின்றோ மென்பதற்கோ
கீழோ ரென்றீர்?

வெள்ளையரின் கால்தொட்டு
வணங்கி நின்று
விரைவாக அவர் மொழியைப்
படித்துக் கொண்டு
கள்ளர்க்குக் கைகொடுத்த
காலந் தன்னிற்
கவின்தமிழைக் காத்தவரோ
குறைந்த சாதி?

சுபத்திரன்

www.padippakam.com

பிரமாவின் பாதத்தாற்
பிறந்தோ ரெல்லாம்
பிறப்பாலே கீழ்சாதி
என்று கூறிப்
பிரசங்கம் செய்கின்றீர்
பிறப்புத் தந்த
பிரமாவின் பாதங்கள்
எந்தச் சாதி?

கீழ்சாதி மானிடரை
யீன்ற பாதம்
கேவலத்திற் கேவலமாய்க்
கிடக்கும் பாதம்
மேல்சாதிக் கோயிலுக்குள்
மேன்மை பெற்று
மென்மலரைத் தொட்டளைந்து
கிடக்கலாமோ?

ஆலயத்துள் ஆண்டவனை
அடைக்கும் சக்தி
உண்டென்று எண்ணினையோ
அங்கே சும்மா
சாலந்தான் காட்டுகிறீர்
சாமி யென்றீர்!
சாதியெனும் பேயைத்தான்
வணங்குகின்றீர்!

சாதிபல பகுத்திட்டாய்
சாட்டுக் கன்று
சாமிக்கு நாம்துடக்கு
என்றும் சொன்னாய்
சாதியது பண பேதம்
செய்து போன
சாக்காடு என்பதனை
மறைத்துக் கொண்டாய்

கீழ்சாதி அதற்குள்ளே
கிளைகள் நூறு
கிளைக்குள்ளும் பேதத்தைப்
பணத்தாற் செய்து



படிப்பகம்

ஆள்கின்றாய் வடக்கினிலே
ஆணவத்தை
அடக்குவதற்குச் சப்பாணிப்
போரோ எல்லை?

சட்டத்தாற் சவப்பெட்டி
செய்து வைத்துச்
சாதியென்று சாகுமெனக்
காத்துக் கொண்டு
கொட்டாவி விட்டிருக்கக்
காலஞ் சும்மா
காலுடைந்து கிடக்கின்ற
கழுதையாமோ?

நஞ்சூறும் மரத்தினிலும்
கொடியோ ரானீர்
நாகத்தின் மதியினிலும்
நஞ்சா யானீர்
அஞ்சாது மனச்சாட்சி
கொன்றீ ரையோ!
கிணற்றுக்குள் நஞ்சிட்டுக்
கொடுமை செய்தீர்!

பனையோலைக் குடிசையிலும்
வாழ வேண்டாம்
பாழ்பட்டுப் போஎன்று
பகர்ந்து கொண்டு
வினைவாழும் நெஞ்சத்தீர்
நெருப்பு இட்டீர்
விடிவதற்குள் கருகியது
குஞ்சும் தாயும்!

பசுமரத்து ஆணியெனப்
பாலர் நெஞ்சுள்
பள்பறையன் எனப்பள்ளிப்
பாடத் தோடு
குசுகுசுக்கு மாசிரியர்
கொடுமை யென்று
கொலைக்களத்திற், தலைசாய்ந்து
கிடப்பதம்மா!

www.padippakam.com

நகைச்சுவையாய் நாடகத்தை
நடித்துக் காட்ட
நொண்டியொரு நாவிதனார்
வருவா ரங்கு
பகைச்சுமையை இறக்குதற்குப்
படைத்த சின்னப்
பத்திரத்துள் பெரும்பகையைக்
கொட்டிக் கொள்வார்.

உம்மோடு எமக்கென்ன
உறவு என்று
ஒதுங்கிப்போய் வாழ்ந்தாலும்
ஏனோ சும்மா
எம்மோடு தனகுகிறீர்?
உமக்கு என்ன
உயிரள்ளும் எமன்சொந்த
உறவு ஆமோ?

நீயிட்ட நெருப்பினிலே
தீய்ந்து போன
உயிருக்கு விலையுந்தன்
உயிர்தா னென்று
தீயேந்திப் புறப்படுவார்
தீரர் நாளை
திரள்கின்ற படைக்கன்று
தீனியாவாய்

பணத்தோடு படையோடு
பொலிசா ரோடு
பாராளுமன் றத்தின்
பலத்தினோடு
பிணத்தோடு சட்டத்தின்
காவலோடு
கனவான்கள் காத்துவரும்
கெட்ட சாதி

வீழ்கின்ற நாள்நோக்கி
விரையும் தோழா!
வாழ்கின்ற செங்கொடியின்
வர்க்கத் தோழா!
பாழ்பட்ட சாதிவெறி
பதுங்கும் நெஞ்சம்
பகையென்று அறிந்திட்டோம்
படைதான் வெல்லும்.!



படிப்பகம்

## பயணம் தொடங்குதடா!

கூட்டத்திலே சும்மா பேசிவிட்டாற் சாதிக்
கூத்து முடிந்திடுமோ? - தமிழிப்
பாட்டினிலே யதைச் சாடிவிட் டாலுடன்
பட்டு அழிந்திடுமோ? - இந்த
நாட்டினி லேயொரு சட்ட மமைப்பதால்
நன்மை பிறந்திடுமோ? - ஒரு
சாட்டை யெடுத்துப் புறப்படடா இளம்
சக்தி படைத்தவனே!

கோயிலெ னும்பெருங் கோட்டைக் கதவினைக்
காத்துக் கிடப்பவரே! - பெரும்
தீயிற் குளித்து வரும்பணி யேந்திடத்
தீயில் இறங்குகிறோம் - இனி
வாயிற் கதவுகள் மூடிடும் வேலையை
வாழ்வில் மறந்து விடும் - ஒரு
தாயின் வயிற்றில் பிறந்தவர் நாமெனும்
தன்மை வளர்ந்து வரும்

www.padippakam.com

கீழவ ரென்று உரைத்திடும் மேலவர்
கீழவர் வாக்குதனைப் - பெறக்
கீழவர் வீடுகள் ஏறுதல் மட்டுமோ?
கேவலம் கெஞ்சிடுவார் - இது
நாள்வரை யாடிய நாடகம் வேறொரு
நாடக மாகியதோ? - எமை
யாளவந் தாரிடும் தாளம னைத்திலும்
ஆடி நாம் தீர்ப்பதுவோ?

பாரதி பாடிய பாட்டின் வரிகளைப்
பாடித் திரிவதிலோ - மதச்
சாரதி நானெனச் சாற்றும் பெரியவர்
சாத்திரம் கேட்பதிலோ - இடும்
நேரம் களத்தினை நோக்கி விரைந்திடும்
நேரமாய் மாறுதடா - கொடும்
பாரஞ் சுமத்திடு முள்ளஞ் சிவந்திடப்
பயணத் தொடங்குதடா!

நீண்டு கிடந்திடும் முட்புதர்ப் பாதையில்
நெஞ்சம் நடக்குதடா! எமை
யாண்டு கிடந்தவர் மாண்டு கிடந்தவ
ராவது திண்ணமடா! - என
மாண்டு கிடந்தவர் மீண்டு மெழுந்தனர்
மானம் நடக்குதடா! - இனிக்
கூண்டு கிடப்பது கேவல மென்றொரு
கொள்கை பிறந்ததடா!



படிப்பகம்

www.padippakam.com

## சிறுமை கொல்ல!

வெறுங்கையாய்க் கிடந்தநாளில்
வேண்டிய மட்டுமெம்மை
நொறுக்கினாய்! நோகவைத்தாய்!
நாவினால் சுட்டுவைத்தாய்
பொறுமையே பெருமையின்று
பொறுத்த அப் பெருமையின்று
நெருப்பெனப் பொங்கிப் பாய்ந்து
நெருங்குது சிறுமைகொல்ல!

உடம்பினிற் சட்டைபோட்டால்
உன்மணம் எரிவதேனோ?
திடத்துடன் எழுந்து நின்று
திரண்டது எமதுசேனை!
குடத்தினுள் நுரைத்தகள்ளிற்
குதித்திடும் வெறியைச்சாதிக்
குடத்தினுள் அடைத்துவைத்துக்
குடித்திடும் பேய்காள்! ரெத்தக்

கணக்கினில் வரவுஉண்டு
காலத்தால் வட்டியுண்டு!
பிணமாக சமைத்துப் பெற்ற
பிணத்திலும் வரவுஉண்டு!
கணத்தினில் கணக்குப் பார்த்துக்
கணக்கினை முடிக்க வேண்டும்
கணக்கிட நேரமில்லை
சுதந்திரத் தீயே பொங்கு!



படிப்பகம்

www.padippakam.com

## இரத்தக் கடன்

இரத்தக் கடன்மிக உண்டடா - அதை
இல்லையென் பான்இங்கு யாரடா?
இரத்தக் கடன்தனை மீட்பது - என
எண்ணிவிட் டோம்இனிப் பாரடா!

தோழிற் கிடந்திடும் துண்டினை - இனித்
தூக்கித் தலைபணிந் தேகவோ?
காலிற் செருப்பிடல் குற்றமோ? அந்தக்
காலம் மறைந்தது குற்றமோ?

கோயிற் கதவினை மூடினாய் - விளக்
கேற்றா திருளினைக் கூட்டினாய்
நாயெனக் காவல் செலுத்தினாய் - அதன்
நன்றியை மட்டும் விலக்கினாய்.

நாறும் பிணத்திலும் சாதியோ? - இந்த
நானிலத்தில் இது நீதியோ?
நாறும் பிணமுனக் கேனடா? - பிண
நாற்றமுன் கொள்கையில் மேலடா!

எம்பியின் வாலிலே நாலுபேர் - அவர்
எச்சில் இலையிலே மூணுபேர்
நம்பிக் கிடப்பது தூசுகள் - அவை
நக்கிப் பிழைத்திடும் 'கேசுகள்'

இரத்தக் கணக்கினைக் காட்டுவோம் - அது
எப்படி என்றுநீ பாரடா
வரவில் கடித்திடும் வேளையில் - உன்
வாலைப் பிடித்தவன் ஓடுவான்!



படிப்பகம்

www.padippakam.com

## சங்கானை மண்ணே உனக்கு வணக்கம்

சங்கானைக் கென் வணக்கம்!
சரித்திரத்தில் உன் நாமம்
மங்காது! யாழகத்து
மண்ணிற் பலகாலம்,
செங்குருதிக் கடல் குடித்துச்
செழித்த மதத்துக்குள்
வெங்கொடுமைச் சாக்காடாய்
வீற்றிருந்த சாதியினைச்
“சங்காரம்” செய்யத்
தளைத் தெழுந்து நிற்கின்ற
சங்கானைக் கென் வணக்கம்

கோயிலென்னும் கோட்டைக்குள்
கொதிக்கும் கொடுமைகளை
நாயினிலும் மிக்க
நன்றிப் பெருக்கோடு
வாயிலே நின்று -
வாழ்த்தும் பெருஞ்சாதி
நாய்கள் - வாலை
நறுக்கி ... எழுந்தாய்!
சங்கையிலே நீ யானை!
சங்கானை! - அந்தச்
சங்கானைக் கென் வணக்கம்.

எச்சாமம் வந்து
எதிரி நுழைந்தாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப்பெறிந்து நீறாக்கும்!
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகின்றேன்! - சங்கானை
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே! - உன்
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகின்றேன்! - சங்கானை



சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே!

எண்ணத்தில் கோடி
ஏற்றம் தருகின்றாய்
புண்ணுற்ற நெஞ்சுள்
புதுமை நுழைகின்றாய்
கண்ணில் எதிர்காலம்
காட்டி நிலைக்கின்றாய்! !
மண்ணின் வெறியை
மோதி எரிக்கின்ற
திண்மை எழுந்த
தீயாக நிற்கின்றாய்!
உன்னை எனக்கு
உறவாக்கி விட்டவனை
என்னென்பேன்
என்னென்பேன்!

ஐந்து பெரும் கண்டத்தும்
எழுந்து வரும் பூகம்பம்
தந்தவனாம் மா ஓவின்
சிந்தனையால் உன் நாமம்
செகமெலாம் ஒலிக்கட்டும்
செங்கொடியின் வீடே!
சிறுமை உடைத்தெறியும்
சிங்கத்தின் நெஞ்சே!
செய்தேன் உனக்கு வணக்கம்!
சங்கானை மண்ணே,
உனக்கு வணக்கம்!

(தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டுச் சிறப்புமலர்)

தொழிலாளி (17.07.1968)



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# குறுங் கவிதைகள்

**இலங்கை**

அடிமைகள் அடிமைகளை
அடிமைப் படுத்தும்
அடிமைச் சமூகம்

சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

## பெரும் கவிஞனும் உரிமைப் போராளியும்

ஒருகோடிக் கவிதைகளால்
உலகம் போற்றும்
பெரும் கவிஞன் என நாமம்
பெற்றபோதும் அஃது
ஒரு சொட்டு இரத்தத்தை
உரிமைப் போரில்
தருபவனின் புகழ்முன்னே
தூசு! தூசு

## பாட வந்தேன்

பாடையிலே போவதற்கு
முன்பு இங்கு
புகழ் குவித்து வைப்பதற்கும்
பாடவில்லை
பாடையிலே ஏறுகிற
வரையும் அந்தப்
பாட்டாளிப் புரட்சிக்கே
பாட வந்தேன்.

## சித்திரம்

'சித்திரத்தைத் தொடாதே
அழுக்காய்ப் போகும்'
சீறிவிழும் ஆசிரியை - அந்தச்
சின்னஞ்சிறு கரங்கள்
அழுக்கான விதம் பற்றிச்
சிந்திக்கும் நாள் என்றோ?



படிப்பகம்

www.padippakam.com

## தமிழ்த்தலைவர்

ஏமம் சாமமெனப் பாராது
கூவி எழுப்பிவிட்டுத்
தமிழ்த்தலைவரெனத்
தூங்குமாம் சேவல்.

## மாணவ சக்தி

இடாப்பைத் திறந்தேன்
ஈட்டியும் கேடயமும்
பாசறையிற்
சார்த்திக் கிடந்தன.

## ஒருமை

யாதும் ஊரே
யாவரும் கேளிர்
நன்றே நன்றே
இன்றல்ல
இது பாடிய
அன்றல்ல.
இனிவரும்
புதிய பாட்டாளி
உலகுக்கு அன்றது
பொருந்தும் பிள்ளாய்.

## தாஜ்மகால்

தாஜ்மகால் மாளிகை
இடிந்து சிதறுமானால்
நான் எனது காதலியின்
கரங்களைக் கோர்த்துக்
கொண்டு
அந்த இடிபாடுகளின் மீது
காதற்கீதம்
பாடுவேன்.



படிப்பகம்

### சீர்திருத்தம்

அழுக்கான தென்று
தேசியக் கொடியை
கழுவி உலரக்
கம்பியிற் போட்டேன்.
அது
நழுவி விழுந்து
மீண்டும் அழுக்கை
பூசிக்கொண்டு
நிலத்திலே கிடந்தது.

### அடிமை விலங்கும் ஆயுதமும்

அடிமை விலங்கறுப்போம் - அதில்
ஆயுதங்கள் செய்திடுவோம்
கொடுமை மிக மலிந்த - இக்
குவலயம் மாற்றிடுவோம்.

### சம்பிரதாயம்

நாள் பார்த்துக் கட்டிய
தாலியைக் கழற்றி வைத்துவிட்டுக்
கொடியை அடகுவைத்தேன்
அடுத்தமாதம்
தாலியை அடகுவைத்தேன்.

### நத்தார்

இந்திராவின் புத்திரர்கள்
இருபத்தைந்து அறுபத்தெட்டில்
கீழ் வெண்மணியில்
நாற்பத்தி இரண்டுயிரை
கொழுத்திக் களிப்போடு
நத்தாரையும் கொண்டாடி
மகிழ்ந்தார்கள்

www.padippakam.com

## கௌரவம்

கைநீட்டிக் கொடுப்பது ஐயாவுக்கும்
கைநீட்டி வாங்குவது எங்களுக்கும்
கௌரவமில்லை என்று உணர்ந்ததால்
அவர்
குப்பைத் தொட்டிக்குள் போடுகிறார்
நாங்கள்
அதை எடுத்துக் கொள்கிறோம்.

## ரொம்பக் கஷ்டம்

!?!
பிரசவம்
வாட்டர்கேட்
ஏகாதிபத்தியம்
புரட்சிகரம்
புதுக்கவிதை

## பிச்சை

சூரியனிடம்
பிச்சை வாங்கும் நிலவிடம்
பூமி
பிச்சை வாங்குகிறது

## நிலவு தந்த துண்டு

சூரியனிடம் வாங்கிய
இரவல் புடவையில்
சிறுதுண்டைக் கிழித்து
உலகுக்குக் கொடுத்தது
நிலவு



படிப்பகம்

www.padippakam.com

## தேசியகீதமும் பசித்த குழந்தையும்

நித்திரையிற் பசிமறந்து
கிடந்த பிள்ளை
மாடியில் வாழும்
தேசபக்தரின்
றேடியோ பாடிய
தேசியகீதம் கேட்டு எழுந்து
பசியால் கதறிட
வற்றிய மார்பைச்
சப்பக் கொடுத்தேன்.

## மரியாதை

தேசியகீதம் பாடத் தொடங்கிட
சினிமாவுக்கு வந்தவர் எழுந்து நின்றனர்
சில விடாடிகள்
மூட்டைகள் இரத்தம் குடிப்பதை நிறுத்தி
தேசிய கீதத்தைக் கௌரவித்தன.

## அற்புத விளக்கு

ஹலோ மிஸ்டர்
*என் - எம்*
நீங்கள்
அலாவுதீனின் அற்புத விளக்கைத்
தேசிய மயமாக்கினாலும்
சோசலிஸத்தை
கொண்டு வர முடியாது
அது
பாட்டாளிகளின் வேலை.

குமரன்15.12.1974

## இலங்கை

அடிமைகள் அடிமைகளை
அடிமைப்படுத்தும்
அடிமைச் சமூகம்

(இடதுசாரி இயக்கங்களுள் ஒன்றான லங்கா சமசமாஜிஸ்ட் கட்சித்தலைவர் கலாநிதி N.M. பெரேரா. இவர் நிதிமந்திரியாயிருந்த போது தேசியமயக் கொள்கைகள் ஏற்படுத்தப்பட்டன).



படிப்பகம்

www.padippakam.com

# அநுபவத் தெளிப்பு

எழுதும் கவிதை ஆயிரம் என்றால்
எழுத மறந்தது கோடி எனலாம்..

சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

## கவிஞனும் கவிதையும்

வீர சுதந்திரம் வேண்டிய பாரதி
வெள்ளையன் சிறைக்குப் பயந்திருந்தால்
புரட்சி எனும் சொல்லுக் குருக்கொடுத்து
புது உலகினை வாழ்த்திப் பாடுவனோ?

அச்சமும் தயக்கமும் அற்றது கவிதை
மற்றவர் சொல்ல மயங்கி நிற்பதை
வெட்டை வெளிச்சயமாய்த் துணிவுடன் சொல்லும்.
மருண்டு நிற்பது கவிதையும் அல்ல
வெருண்டு நிற்பவன் கவிஞனும் அல்ல
கவிஞன் என்பவன் கண்ணியமானவன்.

எதிரியை ஒளித்து நின்று தாக்குதல்
யுத்த தந்திரமாக இருக்கலாம்
எதிரியை எதிர்க்கும் கவிதையின் சொல்லும்
கருத்தும் ஒளித்தல் கோழைமையாகும்.

எதிரியின் பாசறை சென்று நடித்து
எதிரியை வீரன் பூண்டோடழிக்கலாம்
கவிஞனும் கவிதையும் நன்மையின் பொருட்டும்
தந்திரம் சாகசம் அற்றது படைப்புக்கள்

கவிஞன் என்பவன் வினோதமானவன்
அச்சம் அற்றவன் தயக்க மற்றவன்
கற்களை முகர்ந்து பூவென வருடுவான்
பூக்களைக் கல்லென வீசி எறிவான்.
கவிஞனின் ஆணை கவிதை ஆகினால்
எரிமலைகூட வாய் பொத்தியிருக்கும்
கூழாங்கற்கள் மேகம் தொட்டு
அளையும் மலையால் நிமிர்ந்து நிற்கும்.

அனிச்சம் பூக்கள் அக்கினி நடுவில்
அகங்காரத்துடன் எழுந்து உலாவும்.
சிட்டுக் குருவிகள் வானகம் ஏறி
விமான அணிகளை வழிமறித்தடிக்கும்.
தவழுங் குழந்தை தரைப்படை மறித்து



படிப்பகம்

www.padippakam.com

தொட்டிற் காலிற் பிடித்துக் கட்டும்.
நெத்தலி மீன்கள் நீர்ப்படை எதிர்த்து
நொருக்கி எதிரியைச் சுறாக்கிரையாக்கும்.

கவிஞனின் சொல்லுக் கத்தனை சக்தி
கவிஞனின் ஆணைக் கத்தனை ஆற்றல்.

கவிஞன் கற்பனைத் தேரில் உலாவுவான்
யதார்த்தம் என்னும் மண்ணிலும் நடப்பான்
கவிஞன் புன்னகை அழவும் வைக்கும்
கவிஞனின் அழுகை மகிழவும் வைக்கும்
கவித்துவத்தாலே செருக்கும் கொள்வான்
கவித்துவத்தாலே குழந்தையுமாவான்
உலகம் முழுதும் தன் சொத்தென்பான்
அண்டம் முழுதும் வாங்குவேன் என்பான்
பீடியைக் கடையிற் கடனாய்க் கேட்பான்.

ஆனிமுத்தைத் தெருவில் வீசுவான்
பன்றியை மூலஸ்தானத்து வைப்பான்
குயிலைத் துரத்தி, ஆந்தையின் குரலை
ரசித்து ரசித்துப் பாட்டு எழுதுவான்.

கவிஞனை அளக்க உலகம் இதுவரை
அளவுகோல் ஒன்று செய்யவேயில்லை
கவிஞனை மதித்தால் தலைக்கனம் கொள்வான்
மதிக்கவில்லையோ தெருவிற் கிடப்பான்
எழுதுங் கவிதை ஆயிரம் என்றால்
எழுத மறந்தது கோடி எனலாம்.

விட்டுக் கொடுக்க மறுத்து நின்று
அழிவின் விழிம்பில் நின்று சிரிப்பான்
அழிந்தால் அதற்கும் கவிதை செய்வான்
தப்பிப் பிழைத்தால் அதையும் பாடுவான்.

எரிமலை வாசலில் உலாவியவாறு
கவிதை மழையாய் அள்ளிப் பொழிவான்
பூஞ்சோலைக்குள் இருந்து கொண்டு
கவிதையை நோக்கித் தவமும் இருப்பான்.

மக்கள் தானவன் சொத்தும் சுகமும்
மக்கள் தானவன் உளத்தின் மலர்கள்.

1973க்குப்பின்

சுபத்திரன்



படிப்பகம்

## கவிஞன்

கவிஞன் என்பவன் கண்ணரிய மானவன்
கள்ளுக் குடிக்கலாம் கஞ்சா குடிக்கலாம்
குவிந்த முலைகளை காமத்தின் சொற்களால்
கூதல் காய்ந்திடும் அடுப்பெனச் சொல்லலாம்
கவிதையால் அதைத் தாய்மையின் சாமியார்
மலைகள் என்றும் கும்பிட்டுப் பாடலாம்
புவியிலே அவன் போக்கைப் புரிந்திடப்
புறப்பட்டுப் போவோரெல்லாம் பைத்தியக்காரரே.

www.padippakam.com

# என் வீட்டுத் தென்னைமரம்

பட்டங்கள் கட்டும்/பருவத்தில் நான் எட்டி
மட்டை சவட்டி/ஈர்க்கு முறித்த மரம்
பட்டு விழுந்து/பயனற்றுப் போயிருந்தால்
சற்றுமனமாறித்/தேறியிருந்திருப்பேன்

பழைய மரம் என்றாலும்/பயனள்ளித் தருவதிலோ
இளைய மரமெல்லாம்/தோற்றோடிப் போகுமென
புகழ்ந்து பெருமிதமாய்த்/தொட்டு வளர்த்த மரம்
சொத்தை சொத்தியில்லாது/சுதந்திரமாய் நீண்ட மரம்
முற்றத்துப் பிள்ளையென்ற/செல்லப் பெயரெடுத்து
முன்னுக்கு நின்ற மரம்/மூச்சான தென்னை மரம்
வயதுக்கு மீறி/வளர்ந்து நின்ற தென்னை மரம்
வாசலுக்குள் தென்னை மரம்/என்ற பயத்தாலே
தறியுங்கள், பிள்ளைகுட்டி/விளையாடும் இடத்தினிலே
ஏன் இதனை வைத்தீர்கள்/என்றுரைத்த எம்மவர்க்கு
இற்றைவரை சிறுகுரும்பை/ஒன்றேனும் அந்த மரம்
எவருக்கும் எறிந்ததிலை/எனத்துணிந்து சொல்லுவேன்

அந்த மரம் வீழ்ந்து/முறிந்து கிடக்கிறதே
என்றாலும் புறமுதுகு/காட்டாது வீழ்ந்து
களத்திலே தழும்போடு/சாய்ந்து கிடக்கிற
வீரனெனத் தானெனது/தென்னை கிடக்கிறது.

பேயாடிப் பந்தல் பிரித்தெறிந்து மட்டுநகர்
தாயாடி வீழ நெருப்பெறிந்த புயலோடு
வாதாடிப் போராடித் தலை விரித்துச் சுழன்றாடி
வாளாக ஓலை வீசிக் கொடுங்காற்றை

வதம் பண்ணத் தீரமுடன்/சமர் செய்த தென்னைமரம்
வளைந்தாடி நிமிர்ந்தாடி/வட்டுச் சுழன்றாடி
இளங்காயைத் தேங்காயை/குரும்பைகளைப் பாளைகளை
எறிகுண்டாய்த் தூக்கி/இரவில் நுழைந்தெம் மண்
பறித்துக் கசக்கி/மதிக்கப் பலகோடி
சிங்கமெனக் கர்ச்சித்த/சூறாவளி முகத்தில்
எறிந்து களத்தினிலே/சளிந்து கிடக்கிறது
என்வீட்டுத் தென்னைமரம்/வீரமுள்ள தென்னைமரம்

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

விழும்போது கூட/கவனமாய் வீட்டின்மேல்
வீழாது; பார்த்து/வாசற்படியதற்கு
முன்னால் நெடுஞ்சாணாய்/வீழ்ந்து வணங்கித்தன்
உயிர்நீக்கும் போதும்/நன்றி செய்த தென்னைமரம்
என்வீட்டுத் தென்னைமரம்/இதயமுள்ள தென்னைமரம்
முன்வீட்டுத் தென்னைமரம்/நெஞ்சற்ற தென்னைமரம்

புயல் வந்து நின்று/பதுங்கி வளம் பார்த்து
அடிக்கக் கையோங்க/பயந்து நடுநடுங்கி
ஓடி ஒளிக்க/வளர்த்தவனின் கூரைதனைப்
பிளந்து நுழைந்து/சுவர் நொறுக்கித்தான் நொறுங்கி
சரிந்திடிந்த மனையோடு/சரிந்தொடிந்து கிடக்கின்ற
முன்வீட்டுத் தென்னைமரம்/நன்றிகெட்ட தென்னைமரம்.

என்வீட்டுத் தென்னைமரம்/நன்றியுள்ள தென்னைமரம்.

௨௨.11.1978ன்பின்

(1978இன் போது மட்டக்களப்பில் பெரும் சூறாவளி வீசியது. பல மரங்கள் வெரோடு சாய்க்கப்பட்டன).



படிப்பகம்

www.padippakam.com

## தமிட்புயல்

செந்தமிழன் துயர்துடைக்கச் சிறைகிடக்கும் வாலிபரை
சென்று சிறைமீட்டு வருகின்றேன் என்று புயல்
உந்தி எழும்பி மட்டுநகர்ச் சிறையுடைத்து .
உட்சென்ற தங்கே; வேறுசிறைக் கவ்வீரர்
சென்றகதை அறியாது கொன்றனரோ கொடுங்கோலர்
என்று நினைந்து கோபித்து இலங்கை நகர்
எரித்த அனுமானாய் கிழக்கை நொறுக்கியது காற்று.



சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

## குறை நிரப்பு

கூப்பனெல்லாம் போகப்
போகுதென்று கவலையிலே
சாப்பிடவும் மனமின்றிச்
சாய்ந்திருந்தாள் சங்குபதி

சீற்றமுடன் வந்தான்
சிவநாதன் முட்டாளே!
பூட்டாதே 'பிரீதி'யினை
என்றேன்நான் கேட்டாயா?
கேட்டிருந்தால் ஒரு கூப்பன்
என்றாலும் கிடைத்திருக்கும்
கூப்பனெல்லாம் போச்சே
என்றிரைந்து சினக்கிறான்
"கூப்பன் கடைக்குப் போடா" என்றம்மா
திட்டாள் என மகிழ்ந்தான் கோபால்.

முப்பின் இரும்பு முளைத்திருக்கும் மீளத்
தோப்பிலும் தெரிகிறது கோபம்
ஆத்திரமாய் அலறுகிறான்
மூர்க்கம் முறுக்கிறது
சீற்றமுடன் வந்தான் சிவநாதன்
முப்பின் அரும்பு முளைத்த மீசையிலே.



படிப்பகம்

www.padippakam.com

## பக்தி

வேல்முருகன் ஆலயத்தில்
வெளிவாசலில் ஒரு உருவம்
வில்லாகிய
விழி தாண்ட எலும்புக்கூடு
கொட்டை கட்டி
பட்டை தீட்டி
பழத்தட்டேந்திப் போகும்
பக்தர் குழாமை
இரந்து கேட்கிறது
பெரிய மனதுடையீர்
பிச்சை ஐயா பிச்சை
உள்ளே -
வெள்ளி வேலுக்கு
பாலும்
பழமும்
பன்னீரும்
பிசைந்து அப்பி
பாலாபிசேகம்
பரபரப்பாய் நடக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

## உறவு

தும்பையும் பஞ்சையும் தேடிப் பொறுக்கி
தூக்கணாங் குருவி கூடொன்று செய்தது.
முட்டைகள் இட்டு அடை காத்திருந்தது

தென்றலும் கொண்டலும் ஊஞ்சல் ஆட்டிய
கூட்டினுள் முட்டைகள் சூட்டில் பழுத்தன.

குருவிக் குஞ்சுகள் தங்கள் மொழியினில்
மழலை பேசின தாய் மகிழ்ந்தது

சருகில் வாடிய மலர்கள் வீழ்ந்திடும்
சத்தம் கேட்பினும் எச்சரிக்கையுடன்
குஞ்சைச் சிறகினுட் கொத்திப் பேணிடும்
பாசம் பயந்து பதறி நடுங்கிடும்

குழைந்து விசிய காற்றுக் குமிறிட
கிளை முறிந்து கூடு விழுந்தது
கூட்டினுள் தொட்டில் ஆடிய குஞ்சுகள்
தரையில் வீழ்ந்து தத்தளித்தன
சிறகு முளைத்திடாப் பருவம் சிறு சிறு
துண்டு மாமிசம் போல ஊர்ந்தன.

தாய்க் குருவியோ தவித்துப் போனது
கூக்குரல் இட்டது காடே அழுதது
கிளை கிளையாகத் தாவித் தவித்தது
தாய்மையின் வேதனை நெஞ்சை எரித்திட
வானம் துயரிலே வாடி அழுதது.

உறவுகள் சிறகுகள் முளைத்திட மட்டுமே
என்று எண்ணிய பறவையின் நினைவுகள்
சிறகுகள் முளைத்திட முன்னமே உறவுகள்
செத்தன கண்டு உறவு அழுதது.

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## வதந்தி

பட்ட மரம்
வேர்களில் கறையான் தொட்ட மரம்
காய்ந்த சருகும் .. அற்ற மரம்
துளிர்த்தது என்று, ஊரே சேர்ந்தது
நானும் வேகமாய்ச் சனத்துடன் கலந்தேன்.

அற்புதம் என்று ஒருவன் சொன்னான்
அதிசயம் என்று மற்றவன் சொன்னான்
முன்னும் பின்னும் இது நிகழாது
என்று ஒருவன் வரையறை செய்தான்
இதுபோற் புதினம் நிகழ்ந்ததே இல்லை
என்று ஒருவன் உறுதி கூறினான்.

சனந் திரண்டது. கசமுச ... கசமுச ...
நிருபர்கள் கூடினர்; படங்கள் எடுத்தனர்
செய்தி பறந்தது வெளியூர்க் காரரும்
வந்து சேர்ந்தனர்.

காகம் கிட்ட எச்சிலில் இருந்து
ஆலங்கொட்டை முளைத்து உள்ளது
விசர்த்தனமான ஒருவன் உண்மையை
ஒப்புவித்ததால்
சனம் கலைந்தது.



படிப்பகம்

## நாய்க்கும் தெரியும்

அதோ அந்த இரண்டு இளைஞர்கள்
வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு
வேகத்துள்ளே நிதானம் பூட்டி
கண்களால் நடந்து செல்வதிலுள்ள
உறுதியால் உதைபடு மந்தக் கிராமம்
மண்ணொடு தந்தை தனது குழந்தையின்
பிஞ்சுக் காலைக் கொஞ்சி மகிழ்ந்து
பூரிப்படையும் நிலையிலானது.

தன்னுடன் உறங்கிய இருவரும் எழுந்து
செல்வதை உணர முடியாத அளவு
சூரியன் குறட்டை விட்டுக் கொண்டிருந்தது.

அந்தக் கிராம நாய்கள் விழித்து
எழுந்தன எனினும் ஒன்று கூடக்
குரைக்கவேயில்லை அத்தனை நாய்க்கும்
அந்த இளைஞரை நன்கு தெரியும்.

சுபத்திரன்

www.padippakam.com

போடி வீட்டின் நாய்கள் மட்டும்
வாள்வாள் என்று உயிரை விட்டன.

ஆக்காண்டிகள் அலறிக்கொண்டு
வானிற் கறுத்த நட்சத்திரமாய்
வட்டமிட்டு அமைதியைத் தின்றன.

கிராமம் நித்திரைவிட்டு எழுந்தது
வேலிக்கம்பியின் ஊடாய் குடிசையின்
குப்பி விளக்குகள் கோடு வரைந்தன.

தங்கள் நாய்கள் குரைக்கவில்லை
போடி வீட்டு நாய் குரைக்கின்றது
வாலிபர்கள்தான் போகின்றார்கள்
விழித்த கிராமம் சிந்திக்கின்றது.

வயலிலே எம்முடன் களைகள் பிடுங்கினர்
அருவி வெட்டிற் கலந்து கொண்டனர்
செல்வன் மீனைக் கரப்புக் குத்தி
பிடிப்பதை எம்மிடம் கற்றுக் கொண்டனர்
நாமும் அவரிடம் எமது வாழ்வை
விதைக்கக் கற்றோம் களைகள் பிடுங்கி
எறிந்திடக் கற்றோம். விளையும் நாளில்
புதிய வாழ்வை அறுத்து எடுத்து
எமது சொத்தாய் மாற்றமும் கற்றோம்
விழித்த கிராமம் தித்திக்கின்றது
சேவல்கள் கைகளைத் தட்டுகின்றன.



சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

# இந்தத் தொப்பி யாருக்குப் பொருத்தம்?

மாக்ஸிய வகுப்பு நடத்துதற்காக
மாக்ஸியத் தலைவர் புறப்படுகின்றார்
தூக்கிய குறிப்புப் புத்தகத்தோடு
துரித நடையில் வாசல் செல்கிறார்.

றைவர் காரின் கதவைத் திறக்க
ஏறியவாறு "பெற்றோல் அடித்ததா?"
றைவர் என்று கேட்டுக் கனைத்து
பின் சீற்றிலே சாய்ந்து கொள்கிறார்.

கட்சிக் கந்தோர் வாசலிற் காரை
நிறுத்த இறங்கிய தலைவர் உள்ளே
சட்புட் என்று சப்பாத்துதைத்து
சென்று மறைகிறார் வாசலில் றைவர்.

பீடி குடித்து முன்கடை சென்று
பிளேன்ரி அருந்தித் திரும்பி வருகிறார்
வாடிக்கையாக வாங்கும் மித்திரன்
வாங்கிப் படித்துக் கண்ணை மூடுகிறார்.

இரண்டரை மூன்று மணித்தியாலங்கள்
உலகப் பிரச்சினை, தத்துவப் பிரச்சினை
புரட்சி, கிளர்ச்சி பற்றிப் பேசிய
புரட்சித் தலைவர் திரும்பி வருகிறார்.

கணபதி என்ன தூக்கமா பகலில்
காரில் தலைவர் ஏறிக் கொள்கிறார்
கணபதி காரை ஸ்ராட் பண்ணினான்
களைப்புடன் தலைவர் சாய்ந்து கொள்கிறார்.

மாக்ஸிய வகுப்பு நடத்தி முடித்த
மாக்ஸியத் தலைவர் வீடு செல்கிறார்
மாக்ஸியம் பற்றிக் கணபதி அறிதல்
தலைவர் தலைக்குச் சங்கடம் அல்லவா?

1971க்குப்பின்



படிப்பகம்

www.padippakam.com

## வைரவர் வாழ்க

விதானையார் வீட்டு வைரவப் பந்தலில்
இன்று பெரிய சக்கரைப் பொங்கல்
உறவினர் சகலரும் கலந்து கொள்கிறார்
நண்பர்கள் சிலரும் வந்து உள்ளனர்
அவரவர் மனத்துள் பகிரங்க ரகசியம்
ஒன்று நித்திரை போல நடித்தது.

விதானையார் வீட்டு வைரவ பந்தலில்
இன்று பெரிய சக்கரைப் பொங்கல்

புயலுக்கு முன்னர் வேப்ப மரத்தடி
நிழலில் வாழ்ந்து வந்த வைரவர்
இன்று நிழலது இன்றி காய்ந்து
உறைவிடமின்றி காலம் தள்ளுறார்.

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

கொஞ்சக் காலமாய் விதானையார் நெஞ்சில்
வீடொன்று கட்டும் வேட்கை இருந்தது
சின்னச் சம்பளம்; கிம்பளம் குறைவு.
தேவையில்லாத பழக்க மொன்றையும்
தேடிக் கொண்டதால் தினம் தினம் குடிக்க
ஆளைத் தேடிப் பிடிக்க முடியுமா?
வருமானம் மட்டுமட்டாய் இருந்தது;
வீடொன்று கட்டும் வேட்கையும் இருந்தது.

வைரவரிடத்தில் விதானையாருக்கு
அசைக்கவே முடியாத நம்பிக்கை உண்டு.
வீடொன்று கட்ட வழியொன்று காட்ட
வேண்டும் வைரவக் கடவுளே என்று
விதானையார் நேர்த்திக்கடன் வைத்திருந்தார்.

சுவிப்பு எடுத்திடும்போது விதானையார்
''வி'' எனும் ஆங்கில எழுத்தையே எடுப்பார்
வைரவர் பெயரால் எடுப்பது எண்ணம்.

மட்டக்களப்பில் புயலடித் தோய்ந்து
வருட மொன்றினுள் வைரவர் பெயரால்
விதானையாருக்கு வீடொன்று கட்டும்
வரம் கிடைத்தது வைரவர் வாழ்க.

விதானையார் இன்று நிலையம் எடுக்கிறார்.
ஊரை அழித்த புயலுடன் வந்த
நிவாரணம் பொருட்களிற் சுளையாடிய
பண்டமும் பணமும் வீடாய் எழுந்து
நின்றிடப் போகுது கொடுத்து வைத்தவர்
விதானையாருக்கு வீடொன்று கட்டும்
வீரம் கிடைத்தது வைரவர் வாழ்க!
நிவாரணம் வாழ்க!! புயலே வாழ்க!!!



படிப்பகம்

www.padippakam.com

## தன்னம்பிக்கையின் புத்திரன்

ஏமாற்றத்தை உண்டு செமித்துக் கொண்டிருக்கின்றேன்
விஷத்தில் விளைந்த விஷமே
உன்னுடைய மண்ணிலும்
தேவதாருவை நட்டாலும்
அது
நச்சு மரமாகத்தான் வளரும்
நிச்சயமாக
எனது பிள்ளைகளை
எனது மண்ணில்
நடமாட்டேன்.

ஏமாற்றத்தை உண்டு செமித்துக் கொண்டிருக்கின்றேன்
உனது காற்றுப்பட்ட
நானே
கருகிக் கொண்டிருக்கின்றேன் என்றால்
எனது
பச்சைத்தளிர்கள்
உன் மண்ணின்
விஷம் குடித்த
காற்று பட்டால்
பட்டு விழாதா?

ஏமாற்றத்தை உண்டு செமித்துக் கொண்டிருக்கின்றேன்
உனது கிளைகளில்
பூத்த மலர்களின்
இதழ்களில் நடந்தபோது
இடறி விழுந்ததால்
எனது தன்மையின்

கைகளையும் கால்களையும்
முறித்துக்கொண்டேன்
எனினும்
தன்னம்பிக்கையின் புத்திரனான நான்
முண்டமாக வாழ்ந்து காட்டுவேன்
தன்னம்பிக்கையின் புத்திரனான நான்
முண்டத்திற்குக்

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

கைகளும் கால்களும்
முளைக்க வைப்பேன்
நடக்க வைப்பேன்
இயங்க வைப்பேன்.

ஏமாற்றத்தை உண்டு செமிக்காது
சத்தி எடுத்துக் கொண்டிருக்கவில்லை
நான்
வாழப் பயின்று கொண்டிருக்கிறேன்
அசுரத் தனத்தின் உருக்கே
உன்னை
மனிதத்தனத்தின துரும்பால்
முறித்து காட்டுகிறேன்.

எனது மரணத்தின்
ஊனை உண்ண
அலகுகளைத் தீட்டும்
கிழட்டுக் கழுகு
பட்டினியாற் சாகும்
எனக்கு மரணம்
இல்லை என்ற
வரம்
நான் எப்போதோ
பெற்றுவிட்டேன்
நான்
தன்னம்பிக்கையின் புத்திரன்.



படிப்பகம்

# நெடுங் கவிதைகள்

மாகோச் சந்தியில் இனத்தின பெயரால்
மாவைக் கோயிலில் சாதியின் பெயரால்
மலையிற் கொழும்பில் வர்க்கத்தின் பெயரால்
இரத்த தானம் செய்த எனக்கு
வாழும் உரிமை எங்கேயுண்டு?

சுபத்திரன்

www.padippakam.com

## பிறக்காத குழந்தையின் பிரகடனம்

இன்னும் பிறக்காத குழந்தை நான்
என்றாலும் உங்கள் போக்கை கவனிக்க
எனக்கு பெரிய பகிடியாய் இருக்கிறது

எனது அப்பாவும் அம்மாவும் இங்கே
எந்த வயல் வெளியில் கிடந்து உழன்று
சேறழைந்து வாழ்வை சரியாக்குகின்றாரோ?
எனக்கு தெரியாது.

எந்த பள்ளி மூலைகளை குப்பைகளால்
சோடித்து சிந்தனையை அசிங்கப்படுத்துவதில்
மூழ்கிக் கிடக்கிறார் என்பதை
நான் அறியேன்.

எந்தப் பெரிய மனிதரது வீட்டினிலே
குற்றவேல் செய்து கசங்கி மனமுடைந்து
குமுறுகின்றாரோ? அதுவும் தெரியாது
என்றாலும் ....
எனது அப்பாவும் அம்மாவும் இங்கே
பிறந்து வளர்ந்து ஏதேதோ செய்கிறார்
என்பதை நானறிவேன்.

உங்களைத்தான் நம்பி அவர்கள் பிறந்தார்கள்
உங்களை நம்பியோ நான் பிறக்க முடியாது



படிப்பகம்

எனது பெற்றோரில் எத்தனை பேர் எத்தனைபேர்
குருடாக முடமாக சத்தின்றி
பிணமாக போனார்கள் இதுதானா மனுநீதி?
உங்களைத் தான் நம்பி அவர்கள் பிறந்தார்கள்
உங்களை நம்பியோ நான் பிறக்க முடியாது.

எனது எதிர்காலம் பெற்றோரின் தேவைகளை
எந்தளவு நீங்கள் சமைத்துள்ளீர்கள்?

பூனைகட்டும் கயிறாலே யானைகட்ட புறப்பட்ட
உங்களை நம்பியோ நான் பிறப்பேன்.

எனது அம்மாவும் அப்பாவும் படிக்கின்ற
பள்ளிக்குள் எட்டிப் பார்த்தேன் மலைத்துவிட்டேன்
என நெஞ்சம் பாசத்தால் விம்மி பொசுங்கியது
என்ன நெருசல் திட்டமில்லா தேன்கூடு
வாழ்வுக்கும் கல்விக்கும் ஏணி வைக்கத் தெரியாத
உற்பத்தி அங்கே பெரிதாய் நடக்கிறது.

நீங்கள் திரித்த கயிறு பெரியதுதான்
ஆனால் தவறுதலாய் காற்றை அன்றோ
கயிறாகத் திரித்து விட்டீர்.

விற்பனைக்கு போகாத பண்டமென இங்கே
வீழ்ந்து கிடக்கும் வேலையில்லா மலையோடு
எனது அப்பாவும் அம்மாவும் சேர்ந்து
எட்டாத வானத்தை எட்டிப் பிடிப்பார்கள்.

இன்னும் பிறக்காத குழந்தை நான் பிறந்து
வானை உடைத்து அதற்கப்பால் சென்றிடவோ
இல்லையெனில் ....

சேனைக்குள் மரவள்ளிக்கிழங்கு உரித்தெடுத்து
சுட்டு அவித்து புரதமறியா
சோகை பிடித்து பந்தலில்லா புடலங்
கொடியாய் கிடந்து சீரழிந்து போயிடவோ?
இல்லை எனில் ....

அந்த பெரிய மனிதரது பிள்ளைகளின்
பிள்ளை அடித்து உதைத்து விளையாடும்
பிள்ளைகளாய் செத்து கிழவர்களாய் மாண்டிடவோ

www.padippakam.com

உங்களை நம்பி நான் பிறக்க முடியாது
உங்களை நம்பி நான் பிறக்க முடியாது

உங்களை நம்பி நான் பிறந்து வாழ்வதிலும்
கருவில் அழிந்து சாவது மேலல்லவா

என்னைத் தான் நம்பி நான் பிறக்க போகின்றேன்
உங்கள் வரண்ட பேனாக்கள் வரலாற்றால்
ஊத்தை பிடித்த உங்கள் கொடியகரம்
எனது வாழ்வுக்கும் துரும்பெடுத்துப் போடாது.

உங்கள் வரைபுகளின் ஏற்ற இறக்கங்கள்
நீங்கள் ரசிக்கும் பிக்காசோவின் சித்திரங்கள்
எங்கள் எதிர்கால உலகத்தின் பாசறைகள்
ஆகையினால்
உங்களை நம்பி நான் பிறக்க முடியாது.

எனது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நீங்கள்
எடுக்கும் சிறுவராண்டு விழாக்கண்டு
இன்னும் பிறக்காத எனக்கு வரும் சிரிப்பு
எதிர்கால மழலைச் சிரிப்பல்ல; புதிய
உலகை காண எழும் எனது சீற்றம்.

உங்களது சிநதனையும் எங்களது சிந்தனையும்
இரு துருவமல்ல இருவேறு உலகங்கள்
ஆகையினால்
உங்களை நம்பி நான் பிறக்க முடியாது.

1979



படிப்பகம்

## பாரதத்தாய் விழித்தெழுவாள்

வரலாற்றுப் பெட்டகத்துட்
பொய் எழுதி புதைத்து வைத்த
வஞ்சகரே!
நாமும் ஒரு நீண்ட வரலாற்றை
நிரலாக நிரையாக
நெஞ்சிற் புதைத்துள்ளோம்

நீர் உமது வரலாற்றை
உமக்கும் தெரியாதும்
கரத்தாலே சமாதி
கட்டிப் புதைத்துவிட்டீர்.

காலமதைக் கிண்டி
திறந்து படிக்காது

விரதமிருக்கும் பாரதத்தாய்
விழித்தெழுந் தெம்
வீர வரலாற்றைப்
படிக்கத்தான் போகின்றாள்.

கீழ் வெண்மணிக் கண்ணீர் சாம்பல் மலை
அதிலே ஒரு காண்டம்

கீழ் வெண்மணியில்
கொழுத்திவிட்ட அக்கினியில்
வரைந்துவிட்ட சித்திரங்கள்
நெஞ்சில் - மை
காயாது வாழ்கிறது.

மழலைச் சொல் நுழையாத
பாலகரின்வாயில் - வழிந்த
பாலை நீ மூட்டிவிட்ட

பால் நெருப்பு நாக்குகளை
நீக்கி நீக்கி நக்கியதைப்
பார்த்து வரைந்த

வரலாற்றின் சித்திரங்கள்
வாழ்கிறது
செந் நெஞ்சில் வாழ்கிறது
வேதனைக்குள்
வீரக் கோபம்
வளர்கிறது.

விரதமிருக்கும் இந்தியத்தாய்
விழித்தெழத்தான் போகின்றாள்
எங்கள்
துயர வரலாற்றைப்
படிக்கத்தான் போகின்றாள்.

ஊன்று தடியில்
ஊர்ந்த கிழவர்களை
இளமைப் பசியின்
இனிய கனவுகளில்
ஆண்டு கிடந்த
கல்லியரின் நெஞ்சுகளை
அன்னையரைத்
தந்தையரை
இளைஞர்களை
எதிர்கால குன்று என நிமிர
விளைந்த சிறுவர்களை
கோதி எறிந்துவிட்ட
கொடு நெருப்பை
மூட்டியவன் - ஆம்
எரிகின்ற
காந்தியக் குப்பையிலே
நெருப்பெடுத்து மூட்டியவன்.

இன்று சிரித்து
இந்திராவுக்கு பூச்சூடி
இனித்து மகிழ்ந்து
வாழ முடிவதென்ன?
இதனைக் கண்டு
வேதனையில் வீரக்
கோபம் விளைகின்றது.

www.padippakam.com

விரதமிருக்கும் இந்தியத்தாய்
விழித்தெழத்தான் போகின்றாள்
எங்கள்
துன்ப வரலாற்றைப்
படிக்கத்தான் போகின்றாள்.

கீழ் வெண்மணிக்கு
நெருப்பெடுத்து மூட்டடியவர்
கீதை படிக்கும் பண்ணையார்
மட்டுமல்ல
வாள் சுமந்து வந்த
காடையர் மட்டுமல்ல
எண்ணெய் சொரிந்த
பொலிஸார் மட்டுமல்ல
தோள்களிலே காந்தீயம்
தூக்கி திரிகின்ற
நீதிபதி மட்டுமல்ல
மதுரைக்கு நெருப்பிட்ட
கண்ணகிக்கு
கள்ள களவில்
பிறந்த அண்ணாத்துரையும்
இலங்கைக்கு தீவைத்த
அனுமானைப் புணர்ந்ததனால்
சீதாப்பிராட்டி
பெற்றெடுத்த இந்திராவும்
சேர்ந்தே நெருப்பிட்டார்

குடிசையிலே மூண்ட
பெருநெருப்பு உள்ள மெல்லாம்
பற்றி எரிந்து - அக்கினியைப்
புவனமெல்லாம் மூட்டி
வானில் யாழ் மீண்டும்
மின்னல் நரம்புகளைத்
தடவிக் குமுறிக் கர்ச்சித்து
ஊழித்தீ காண
வெடித்திட்ட வேளையிலே
நம் பூத்திரிப்பாட்டும்
ராம மூர்த்தியாரும்
டாங் கேயின் கும்பல்களும்
சாம்பல் முகட்டில்
கழுதைகளாய் மேய்ந்தனரே!



படிப்பகம்

உலகத் தமிழ் ஆராய்ச்சி
என்றீழம் கூடியவர்
மீது பொலிஸார் சுட்டவுடன்
அந்தோ! கொடுமை
தமிழ் அழிந்து போனதெனக்
கூவிக் குரல் வைத்த
சீ. ஐ. ஏ. ஜனார்த்தனமே
உனக்கு அந்த
தஞ்சை அரிசனங்கள்
தமிழர்களாய் தெரியலையா,
கருணாநிதியாரே!
தமிழரசுக் காரர்களே!
வெந்த அரிசனங்கள்
திராவிடராய் தெரியலையா?

சினிமாவில் வாள் சுழற்றி
ஏழைகளின் பணம் பறிக்கும்
கறுப்புப் பணக் கள்ளன்
எம், ஜீ. ஆரே உனக்கந்த
கீழ் வெண்மணி நெருப்பு
ஸ்ருடியோ திரைகளிலே
வளர்ந்துவிட்ட
சித்திரமாய் தெரிந்ததுவா?

கல்லுடைத்துப் பொல்லோடு
திரிந்த "பெரியாரின்"
சொத்துக்கு இளமைதனை
விலை கூறி விற்றிட்ட
மணியம்மே ....!
உனக்கு அந்த அரிசனங்கள்
உயிர் உள்ளோராய் தெரியலையா?

குன்றக் குடியாரே!
நொந்த அரிசனங்கள்
பண்ணையார் சூளையிலே
நைந்து மடியுங்கால் - நீர்
நாவுக்கரசு நாயனாரின்
"மாசில் வீணை" பாடி மகிழ்ந்தீரோ?

www.padippakam.com

ஆமாம்!
இருக்கட்டும் ... இருக்கட்டும்

தஞ்சையிலே மூண்ட
நெருப்பெழுந்து காற்றினிலே
தாவிப் பிடித்து
இமைய முகட்டையும்
இடித்து நொறுக்கி
பொங்கும்
கங்கா ஜமுனா
இந்துநதி தீர மெல்லாம்
சிலிர்த்து ஓடி
நொந்து வாழும்
பாரதத்தாய் பெற்றெடுத்த
பஞ்சை கட்காய்
பழிதீர்க்கும் அந்தநாள்
பாரதத்தாய் விழித்தெழுவாள்.



படிப்பகம்

www.padippakam.com

# அடக்கப்பட்ட இனத்தின் கவிதை

* <u>சிங்களத்திற் சொல் இந்தக் கவிதையை</u>
* <u>தமிழன் அடிமைப்படுத்தப்படுகிறான்</u>
* <u>வர்க்கச் சமரோ வதைபடுகின்றது</u>
* <u>நம்மைச் சுரண்டுவோர் சுகமாய் வாழ்கிறார்</u>

எந்தன் இலங்கைத் தீவில் இன்னும்
மனிதன் ஒருவன் பிறக்கவில்லையா?
இந்த அழகிய தீவில் தமிழர்
என்னும் இனத்தின் உரிமை பறிக்கும்
அந்தக் கட்டிடத் துள்ளே இன்னும்
மனிதன் காலடி வைக்கும் உரிமை
எந்தன் இலங்கையில் இல்லை என்றால்
ஏனந்த மாளிகை கட்டிப் பிடிக்கிறீர்?

மஞ்சள் அங்கியை மதிப்பவன் போலவும்
புத்தனின் பொன்மொழி துதிப்பவன் போலவும்
வஞ்சகத்தாலே நாடகம் போடுவோர்
வசனம் பேசும் குதர்க்க மாளிகை
வாசியின் நெஞ்சில் இருப்பது இனத்தை
ஒடுக்கி வர்க்கச் சமரின் பலத்தை
வஞ்சகத்தாலே ஒடுக்குதல் ஒன்றே
என்ற உண்மை புரியவில்லையா?

பாலஸ்தீனத்தின் விடுதலைக்காக
பாணந்துறையிற் கூட்டம் போடுவீர்
காலம் காலமாய் உம்முடன் வாழும்
தமிழன் உரிமை பறிக்கப்பட்டு
ஓலம் இடுவது மட்டும் உங்கள்
காதுகளுக்குள் ஏற வில்லையா?
தோழமையாலே அழைக்கின்றேன் சிங்களத்
தோழனே தமிழின் உரிமை போருக்கு

வேலை நிறுத்தம் செய்தாற் படையைக்
குண்டரை அனுப்பித் தாக்கச் சொல்பவர்
வேளை வந்தால் படையைக் குண்டரை
தமிழனைத் துரத்தவும் உபயோகிக்கின்றார்

சுபத்திரன் 

படிப்பகம்

www.padippakam.com

மூலையில் அடக்கப்பட்டுக் கிடக்கும்
இனமும் சாதியும் வர்க்கமும் இணைந்து
தோழமையாலே ஓர் உருவானால்
தம்மரசு அழியும் என்பதை உணர்வர்.

பின்னேன் ஆளப் பிறந்தவர் போலும்
வானத்தில் இருந்து குதித்தவர் போலும்
இந்தத் தமிழன் உங்கள் நலத்தைப்
பிடுங்க வந்த பேயது போலும்
எண்ணி வெருண்டு வெருட்டி இம்சை
செய்து வர்க்க ஒற்றுமை குன்றி
உன்னை அடக்கும் சுரண்டலர் முன்பு
பலத்தை இழந்து பல்லை இளிக்கிறாய்?

உன் சிறைச் சாலையில் பஞ்சணை மெத்தையா?
உன்னை அடிக்கும் பொலிசின் தடிகள்
மென்மையான பூக்களாற் செய்ததா?
மலரின் மொட்டைத் துவக்கினுட் போட்டா
இன்னுயிர் உரிமை நீ கேட்குங்கால்
உன்னைச் சுட்டு உயிர் பொசுக்குவர்?
உன்னையும் என்னையும் பொருத விடுதல்
அவர்கள் வாழ்வின் நலத்துக்கல்லவா?

தாயும் பிள்ளையும் ஒன்றென்றாலும்
வாயும் வயிறும் வேறு இல்லையா?
நீயும் நானும் ஒரு நாடெனினும்
எம்பிரதேசம் பறித்தல் நீதியா?
தேயும் எங்கள் உரிமை மீட்க
நீயும் எம்முடன் ஒரு படையாகிப்
பாயும் நம்மைப் பிரித்து வைக்கும்
பகைவன் பதறி வீழ்ந்திடத் தோழனே.



சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

## இன்னும் எத்தனை இப்படி நிகழுமோ?

காலைச் சூரியன் மோட்டின் மேல்
எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறான்
நித்திரை விட்டு எழுந்து இருக்கிறேன்
பிள்ளைகள் என்னைக் காலை உணவு
என்ன?
என்ற கேள்வியாற் பார்த்தனர்

'இரவும் பட்டினி'
என்று
ஞாபகம் ஊட்டியது
என் மனைவியின் தளர்ச்சி

பசிக்களை என்னைப் பாயுடன் சேர்த்து
நீண்ட நேரம்
கட்டித்தான் போட்டது
இந்த நிலையில் என்னை அறியா
மனிதர் பார்த்தால் சோம்பேறியென்பர்

பசிக்களை என்னைப் பாயுடன் சேர்த்து
நீண்ட நேரம்
கட்டித்தான் போட்டது

விறுக் கென எழுந்து
வேகமாய் நடக்கிறேன்
குனிந்து சாரன் தொங்கலால் முகத்தைத்
துடைத்து விட்டு
வேகமாய் நடக்கிறேன்

நேற்று அந்தியிற் கண்ட நண்பன்
காலையில் வா நான்
ஐந்து ரூபாய்
கடன் தருகின்றேன்
என்று ஞாபகம்
வந்ததால்
வேகமாக நடந்து செல்கிறேன்



படிப்பகம்

அதிர்ச்சியில் இருந்த நண்பனைக்
கண்டேன்
அவனது முகத்தில் பூசியிருந்த
உணர்ச்சிகள் எனக்குப்
பயத்தைத் தந்தது

'செய்தி கேட்டாயா?'
யாரோ எனக்குத்
தெரிந்த ஒருவர்
இறந்த செய்தியை
நண்பன் சொல்லப்
போகின்றானோ
என்ற உணர்வுடன்
"என்னது" என்றேன்

அதிர்ச்சியில் இருந்த
நண்பனின் முகத்தில்
அப்படித் தானொரு
ஏக்கம் தவித்தது

"மாவின் விலையை
ஒன்று எண்பதாகக்
கூட்டி விட்டார்கள்"
கைகால் குளிர்ந்து
மண்டை விறைத்தது
என்ன?
சீ ... சீ ...
இருக்கா தென்றேன்

அப்படி இருந்திடக்
கூடாதென்றேன்
உள்ளம் சொன்னது
தர்மர் ஆட்சியில்
கொடுமைகள் நிகழுமோ?
தேர்தல் வாக்குகள்
காற்றில் பறக்குமோ?
நம்பவே மாட்டேன் ... நம்பவே மாட்டேன்
நெஞ்சம் மேசையில் இடித்துரைத்தது

மாவின் விலையை
ஒன்று எண்பதாய்க்
கூட்டி விட்டார்கள்!
ரேடியோவில்
செய்தியிற் கேட்டேன்
நீ கேட்டாயா?
நானே கேட்டேன்!

எப்படிக் கூட்டுவர்?
என்ன கொடுமை
காலைச் செய்தியில்
நீ கேட்டாயா?

சற்று முன்னர்தான்
செய்தியிற் கேட்டேன்
என்ன செய்வோம்
என்ற அதிர்ச்சியில்
ஏங்கி முடங்கி
போய் நான்
கிடக்கிறேன்.

“நம்ப முடியா அளவு அல்லவா
மாவின் விலையை ஏற்றி உள்ளனர்
தேர்தலில் சொன்ன சத்திய வாக்குகள்
தேரை பாய்ந்து விட்டனவா?

“நம்ப முடியா அளவு இன்னும்
எத்தனை விஷயம் நடக்கப் போகுதோ?
அமைதியை தின்றன சில நிமிடங்கள்
எனதுவீடு எலும்புக் கூடாய்
எனது கண்ணகளிற் காட்சி தந்தது.

(1977 யூ. என். பி அரசு ஆட்சி ஏற்றபின் பாடப்பட்டது.)

www.padippakam.com

## வாசற் கதவிலே வந்து நிற்பவர்

வாசற் கதவினைத் தட்டிக் கேட்குது
வந்து நிற்பவர் யாரோ எவரோ

பக்கூஸ் பலகைக் கதவினைப் பொத்துப்
பொத்தெனத் தட்டிய சத்தம்
குடிசையுள் அயர்ந்து தூங்கிய குழந்தையின்
நியாய பூர்வமான உண்மையைத்
தட்டிப் பறித்தது; நித்திரை குலைந்து
பிள்ளை எழுந்து, ஓ என்றழுதது.

குழந்தையின் அருகே அயர்ந்து உறங்கிய
அன்னம்மாளின் நித்திரை கலைந்தது.

பழைய பாயிற் புழுவென நெளிந்து
பசியின் வாயில் இரையெனக் கிடந்து
போர்த்திக் கிடந்த கந்தலை உதைத்து
ஓ! என அலறிய பிள்ளையைப் போல
அன்னம்மாளின் கவலையும் நித்திரை
முறிந்து எழுந்து விம்மி அழுதது.

அன்னம் மெள்ள இயங்கத் தொடங்கினாள்
வாதம் முடக்கிய காலை நீட்டி
பிய்ந்த பாயிற் கையை ஊன்றி
நோவுடன் நெட்டிகள் நெரிந்து முறிய
எழுந்து இருந்து, பிள்ளையைத் தடவினாள்

பிள்ளையின் வயிற்றைப் பசியின் கோரக்
கரங்கள் ஓங்கி ஓங்கித் தட்டின.

அன்னம்மாளின் கரங்கள் பிள்ளையின்
முதுகை ஏக்கத்தோடு தட்டின.

பசியின் பாடலை அழுகை ராகத்தில்
குழந்தை பாடிட, அன்னத்தின் சிந்தையில்
துயரம் வந்து தாளம் தட்டின.



படிப்பகம்

வாசற் கதவை வந்து, வெளியே
நின்றவர் பொத்துப் பொத்தெனத் தட்டினார்
அன்னத்தின் சிந்தனை கருவழிந்தது.

வாசற் கதவினைத் தட்டிக் கேட்குது
வந்து நிற்பவர் யாரோ எவரோ'!

அன்னம்மாவின் சிந்தனைப் புண்ணில்
கொசுக்கள் வந்து மொய்க்கலாயின.

நெசவு நிலையம் போன மகளோ
வாசற்கதவை வந்து தட்டுறாள்?

முதலாளியிடம் முற்பணம் கேட்டு
அரிசி வாங்கி வருகிறேன் இன்று
சமைப்பதற்கென்று போனவள் வந்து
வாசற் கதவைத் தட்டுகின்றாளோ?

விதியே விதியே கணவன் உழைக்க
சமைத்து வீட்டைக் குழந்தையைப் பார்த்துக்
கொண்டு இருக்க வேண்டிய என்மகள்
வேலை வெட்டி என்று திரிய
வேண்டுமென்று எழுதிய விதியே
அழிந்து நீபோக! அழிந்து நீ போக!

இரண்டு குறுகிய ஆண்டினுக்குள்ளே
மகளின் தாலியை அறுத்த விதியே
அழிந்து நீ போக அழிந்து நீ போக
என்று சலித்து கண்கள் கலங்கி
எழுந்து கதவடி செல்ல முயன்றாள்.

குழந்தை கதறி அலறலாயினான்
அன்னம்மாளின் சிந்தனைப் புண்ணை
கொசுக்கள் வந்து கோதலாயின
வாதக் கால்கள் வேதனை கொடுத்தன.

மகளெனில் அம்மா என்றல்லோ அழைப்பாள்
வாசற் கதவைப் பொத்துப் பொத்தெனத்
தடடித் தடடி ஊமை நாடகம்
நடித்திடுவாளா? அப்படியாயின்

வாசற் கதவினைத் தட்டிக் கேட்குது
வந்து நிற்பது யாரோ எவரோ?

இன்று தருவேன் என்று சொல்லி
சின்னத்தங்கத்திடம் மகள் வாங்கிய
அரிசியைக் கேட்டு வாங்கிச் செல்ல
வந்து சின்னத்தங்கம் வாசற்
கதவைத் தட்டி அழைக்கின்றாளோ?

என்ன செய்வேன் சிறங்கையளவு
அரிசிகூட வீட்டில் இல்லையே
சின்னத்தங்கமும் என்னதான் செய்வாள்
எங்களைப் போன்ற ஏழை எளியவள்
இன்று சமைக்க வைத்த அரிசியை
தூக்கித் தந்து உதவிய அவளின்
பிள்ளை குட்டியைப் பட்டினிபோட
நாங்கள் அல்லவோ காரணமானோம்.

அவளது முகத்தில் முழித்து எப்படி
அரிசி இல்லை என்று சொல்லுவேன்.

குழந்தை அலறிக் கதறலானான்
அன்னம்மாளின் சிந்தனைச் சேற்றில்
புழுக்கள் வந்து நெளியலாயின.

இல்லை ... இல்லை ... அவளாய் இருந்தால்
"அன்னம்மாக்கா அன்னம்மாக்கா"
என்று அல்லவோ அழைத்து இருப்பாள்
வாசற் கதவைப் பொத்துப் பொத்தென
தட்டிப் பேசா மடந்தையாக
நின்றிடுவாளா? அப்படியாயின்.

வாசற் கதவினைத் தட்டிக்கேட்டு
வந்து நிற்பவர் யாரோ எவரோ?
அவனாய் இருக்குமோ அவனாய் இருக்குமோ?

வீட்டு வாடகை வாங்குதற்காக
வீறாப்போடு வந்து கதவை
போட்டுப் பொத்துப் பொத்தெனத் தட்டி
வீரங்காட்டி நிற்கின்றானோ?

 சுபத்திரன்

இரண்டுமாத வாடகை கொடுக்க
வேண்டியுள்ளதே! பிரண்டுபோவான்
வாயைத் திறந்தால் புழுக்களாய்த்தானே
வார்த்தைகள் திறந்தால் வந்து காதில் நெளியும்.

புருஷனை இழந்த மகளைவிட்டு
வாடையைத் தாடி கிழடி என்று
போன மாதம் கொடிய பாதகன்
கேட்ட கேள்வி கொஞ்ச நஞ்சமா?

அவனாய் இருக்குமோ அவனாய் இருக்குமோ
அன்னம் நினைந்து பயந்து ஏங்கிட
கதவை நோக்கிய கால்கள் நடுங்கின.

குழந்தை அலறிக் கதறலாயினான்
அன்னம்மாளின் சிந்தனைப் புண்ணில்
கொசுக்கள் வந்து சுரண்டலாயின.

அவனெனில் உழுத்துப்போன கதவு
உடைந்து கழன்று விழுமென அஞ்சி
வாசற் கதவினைப் பொத்துப் பொத்தென
தட்டிக்கொண்டு நிற்க மாட்டானே
அவனாய் இருந்தால் அன்னம் அன்னம்
என்று நாலு வீடே கேட்டிட
உரத்துக் காடைத் தனத்தின் குரலில்
அழைத் திருப் பானே அப்படியாயின்
வாசற் கதவினைத் தட்டிக் கேட்குதே
வந்து நிற்பது யாரோ? எவரோ?

எனது மகனோ? எனது மகனோ?
படித்தாற் போதும் உத்தியோகங்கள்
பார்சலில் வந்து வீட்டிலே சேரும்
படி படியென்று அவனின் தந்தை
காடெல்லாம் சென்று விறகுவெட்டி
வயலெல்லாம் சென்று வரம்புகள் கட்டி
உழுது விதைத்து அறுத்துக் கொடுத்து
உழைத்து எடுத்த உழைப்பை உணாது
மகனே படியெனப் படிப்பிற்கொட்டி

போதென்று இருந்த சின்னத்
துண்டு வளவையும் ஈட்டிலே வைத்து
இழந்தும் உறுதியாய் நிமிர்ந்தே நின்றார்.

படித்தாற்போதும் உத்தியோகங்கள்
பார்சலில் வந்து வீட்டிலே சேரும்
முடுமை நீங்கும் என்றே நம்பினார்.

படித்துச் சித்தி பெற்று ஏழு
ஆண்டுகள் காய்ந்து உதிர்ந்து விழுந்தன
பார்சல் வந்து சேரவேயில்லை.

ஏங்கித் தொய்ந்து துவண்டு உறுதி
இழந்து அவரும் செத்து நாலு
ஆண்டுகள் ஆனது உத்தியோகமோ
பார்சலில் வந்து சேரவேயில்லை.

வீட்டினிற் பாரமாய் நானிருந்தென்ன
பயன்தானுண்டு போகிறேன் அம்மா
மன்னித்துக் கொள்க வேலை கிடைத்தால்
வந்து காண்கிறேன் இல்லையேல் எனது
வாழ்வை முடிக்கிறேன் என்று எழுதி
போன மகனோ வந்தனன் வந்தனன்
என்னை நினைந்து ஓடி வந்தனன்
என்று நினைந்து மகிழ்விக் கெழுந்த
பலத்தில் வாதக் காலை நிலத்தில்
ஊன்றி இரண்டடி தூக்கி வைத்தனள்.

குழந்தை அலறிக் கதறலாயினான்
அன்னம்மாளின் சிந்தனைத் தீயில்
வாடிய மலர்கள் விழுந்து கருகின
வாதக் கால்கள் வேதனை தந்தன.

இல்லை ... இல்லை .. மகனாய் இருந்தால்
அம்மா என்று வாஞ்சையோடன்றோ
எனது காதில் தேனூற்றியிருப்பான்
வாசற் கதவினைச் சும்மா நின்று
பொத்துப் பொத்தெனத் தட்டித்தட்டி
அன்னியனைப்போல் நின்றிடுவானா?
அப்படியாயின் அப்படியாயின்

வாசற் கதவினைத் தட்டிக் கேட்குதே
வந்து நிற்பவர் யாரோ? எவரோ?
கதவின் அருகே அன்னம் நின்றாள்
வந்து நிற்பது யாரோ எவரோ
என்று எண்ணத்தோடு வாசற்
கதவின் கொழுக்கியைத் தூக்கிவிட்டு
பக்கூஸ் பலகைக் கதவைத் திறந்தாள்

வாசலில் நின்றவர் முகத்தில் பிள்ளையின்
கதறல் வந்து காலால் உதைத்தது
பழுத்துபோன உருவம் வளைத்து
காய்ந்துபோன பார்வையால் வாசல்
வந்து நின்ற முகங்களைத் தடவினாள்
முதுமைக்குள்ளும் விளைந்தது பெண்மை
மார்புச் சீலையைக் கை சரி செய்தது

அறிந்த முகங்களும் அறியா முகங்களும்
விரித்துக் காட்டிய பற்களில் செயற்கை
செய்த புன்னகை ஓடித் திரிந்தது.

'எலக்சனுக்காக வந்திருக்கிறோம்
சென்ற தடவை ஐயா வென்றதால்
ஊருக்குப் பல நன்மைகள் வந்தன
இந்த முறையும் ஐயாவென்றால்
ஏழைகள் வாழ்வு மலரும் சிறக்கும்
என்பதால் உங்கள், வாக்கினைக் கேட்க
வந்தோம் அம்மா' என்றனன் ஒருவன்.

அடக்கம் பணிவு இரக்கம் தூய்மை
போன்ற பண்புகள் அனைத்தும் சேர்ந்து
செய்து எடுத்த மாதிரி ஒருவர்
கூப்பிய கரத்தைக் கீழிறக்காது
தேர்தல் இடாப்பில் பெயர் இருந்ததால்
மிக மிகத் தெரிந்த மனிதனைப் போல
உரிமை தொனிக்கும் குரலிலே பேசினார்.

'அன்னம்மா உன் வாக்கை எனக்குப்
போட்டிட வேண்டும்' என்றவர் ஏதோ
தொடர்ந்து சொல்ல முனைந்திடும்போது
அன்னம் சீறி இடையிற் பாய்ந்தாள்.

www.padippakam.com

'நாங்கள் கடந்த தேர்தலில் உமக்கு
வாக்குப் பண்ணினோம் என்ற உரிமையால்
எனது மைந்தன் எத்தனை தட்வை
உன்னைக் காண உன்படி நின்று
அலுத்துக் களைத்துத் திரும்பினான் தெரியுமா?

உன்னை எனக்குத் தெரியாதென்று
விரட்டியடித்தது ஞாபகம் இருக்குதா?
இன்று எனது பிச்சைக் குடிலில்
வாசலை தட்டி அழைக்க வெட்கமில்லையா?

பச்சை பெட்டி மஞ்சள் பெட்டி
காலம் இருந்து வோட்டுப் போட்ட
இந்தப் பழைய கட்டையிடமா
எலக்சனாலே ஏழையின் வாழ்வு
மலரும் சிறக்கும் என்று சொல்கிறாய்?

நினைத்ததால் எழுந்த உறுதியில் அன்னம்
பக்கூஸ் பலகைக் கதவினைப் படாரென
அறைந்து மூடினாள் அவளது முகத்தில்
அனல் நிறைந்தது, அனல் நிறைந்தது.

(1970 — 1977 காலத்தில் எழுதப்பட்ட கவியரங்க கவிதை)



சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

விளக்கு

*நகங்களைக் கடித்துக் கிழித்து எறிகிறேன்
நகப் பொட்டுக்குள்
இரத்தம் கசிந்தது
பொருட்படுத்தாது -
நகங்களைக் கடித்துக் கிழித்து எறிகிறேன்
வேகமாக நடந்து செல்கிறேன்.

சோம்பேறிப் பையனைப் போல
சூரியன்
நேரத்தோடு பாயை விரிக்கிறான்.

புதுப்படம் பார்க்கும்
தாகத்தாலோ
சில இளைஞர்கள்
வேகமாய் நடக்கிறார்
ரிக்கற் கிடைக்குமோ
இதுவே அவர்கள்
சிக்கல் பிரச்சினை
விவாதித்தவாறு
வேகமாய் நடக்கிறார்.

வீதிகளுக்கு விளக்கு ஏற்றும்
முயற்சிகள் நடந்துகொண்டிருக்கும்

சுவிச்சைச் சுண்டு விரலால் ஒருத்தி
தட்டிவிட்டுத் திரும்பிப் போகலாம்
லாம்பெண்ணையை இன்னுமொருத்தி
விளக்கில் ஊற்றிக் கொண்டு இருக்கலாம்.

கடைக்கு ஓடி எண்ணெயை வாங்கி
வா என ஒருத்தி
தனது மகனைக்
கரைச்சற் படுத்தலாம்.

மாணவி ஒருத்தி
தனது பள்ளிக் காதலன் எழுதிய
கடிதம் ஒன்றைக்
கொப்பியின் கீழே
ஒழித்து வைத்து
காதல் படித்தும்
பரவசமாகலாம்



படிப்பகம்

www.padippakam.com

வேகமாய் நடந்து
இலக்கை அடைகிறேன்.

வாசலில் என்னைக் கண்டதும்
"ஐயா
பூசை அறையுள் இருக்கிறார்" என்று
கூறி மறைகிறாள் அந்த
வீட்டின் தேவதை.

அரை மணிநேரம்
தேவாரத்தை
அரைத்துவிட்டு ஐயா வந்தார்.

ஐயாவின் ராகம் கேட்டு
என்ன பாடுபட்டிருப்பாரோ
பாவம் கடவுள்.

"என்னடா கணபதி
விளக்கு வைத்தபின்
வந்திருக்கின்றாய்?
நாளை மிச்ச வேலையும் முடித்து
ஒன்றாய்க் காசை எடு" எனச் சொன்னவர்
முதுகைப் பார்க்கிறேன்

விலாக்களில் முளைத்த
கோரப் பற்களால்
திரு நீறெனக்குக்
காட்சி தந்தது.

எனது வீட்டில்
இன்று இரவு
விளக்கும் இல்லை
சோறும் இல்லை.

1971க்குப் பின் பாடப்பட்டது
* நகத்தை எப்போதும் கடித்துக் கொண்டிருப்பது சுவிஞரின் இயல்பு.



படிப்பகம்

www.padippakam.com

## சிக்கல்

மேடையில் வந்து றெயின் தரிக்கிறது
விலாக்களில் இருந்த வாய்களால் மனிதலை
உண்டு வயிற்றை நிரப்பிக் கொண்டது.

"கடைத்தம்" பூட்டிய மோதகம் அளவு
மார்புடன் ஒருத்தி என்னருகமர்ந்தாள்

ஆடை அவள் சிங்களப்பெண்ணென்றுரைத்தது
றெயின் ஒரு லயத்தில் ஆடிக் கொண்டோட
புஜங்கள் அடிக்கடி தொட்டுக் கொண்டன
இதந்தரும் உஷ்ணம் உடலிற் பாய்ந்தது
அவள் லயப்பட்ட நெஞ்சைப் பிடித்து
வேறொரு கனுவிற் கட்ட முயன்றேன்.
கண்களை ஓடும் மரங்களோடோடி
விளையாடப் போவென கட்டளை இட்டேன்
அவளைப் பார்க்கத் தயக்கமாய் இருந்தது.

கையில் இருந்த கடுதாசி யொன்றை
விரித்துப் பார்க்கிறாள்; நான் அதைச் சற்றும்
சட்டை செய்யாது தொலைவில் உள்ள
மரத்தின் உச்சியில் நாட்டியம் பயிலும்
தளிர்களை ரசித்தேன்.
இலைகளின் ஊடாய்
நீலவானின் துண்டுகள் தெரிந்தன.
ஓரயின் இரைச்சலைக் கிழித்துக் கொண்டு
படபடக்கின்ற தாளின் ஓசை
மட்டும் காதில் ஏணி வைத்தேறின.

அவள் லயப்பட்ட நெஞ்சைப் பிடித்து
வேறொரு கனுவிற் கட்ட முயன்றேன்
புஜங்கள் அடிக்கடி தொட்டுக் கொண்டன
இதந்தரும் உஷ்ணம் உடலிற் பாய்ந்தது

சீக்கிறெற் ஒன்றை இதழுள் புதைத்து
தீக்குச் சொன்றை கொழுத்த முயன்று
காற்றுடன் தோற்று அலுத்துக் கொண்டேன்

சுபத்திரன்



படிப்பகம்

மீண்டும் தோல்வி!
மீண்டும் தோல்வி!

றெபட் புறூஸ் ஞாபகம் வந்து போகிறார்
ஐந்தாறு குச்சை இழந்து வெற்றி
பெற்று புகையை இழுத்து சுவாசப்
பையை நிரப்பி வெளியிற் கொட்டினேன்.

கற்களை தேய்த்து நெருப்புண்டாக்க
அந்த நாட்களில் மனிதன் எத்தனை
கஷ்டப்பட்டு இருப்பான் என்று
சும்மா எண்ணி பார்த்துக் கொண்டேன்.

நீண்ட நேரம் இருந்ததால் எழுந்த
எரிவால் இடுப்பை சரிசெய்த வேளை
இருவர் தொடைகளும் நெரிந்துகொண்டன
"பெப்பர்மெண்ட்" இனிப்பு மென்ற உணர்வு
உடலெல்லாம் ஊர்ந்து சுறுசுறுப்புற்றது.

கையில் இருந்த கடுதாசியை மீண்டும்
விரித்துப் பார்க்கிறாள்
அகஸ் மாத்தாக
வெளியில் எனது ஆணைக்கு பயந்து
அலைந்த கண்கள் தாளில்பட்டன.

தந்திபோல் எனக்குப் பட்டதால் உற்றுத்
தாளைப் பார்த்தேன் அது ஒரு தந்தி

என்ன தந்தியோ என நினைந்து
வாசித்திட நான் முயன்றபோது
அதனைப் படித்தவள் முகத்தை நோக்கினேன்.

மணிக் கூட்டுக்குள் ஓடும் சக்கரச்
சிக்கல்போல உணர்ச்சிகள் சுழன்றன.

அங்கும் இங்கும்
அலைந்தன உள்ளம்
என்ன தந்தியோ?
என்ன துயரமோ?

www.padippakam.com

புஜங்கள் அடிக்கடி
தொட்டுக் கொண்டிருந்தது.
உஷ்ணங்கள் அற்று
வெறுமையாய் இருந்தது
என்ன தந்தியோ?
என்ன துயரமோ?
ரெயிலின் ஒரு லயத்தில்
ஆடிக்கொண்டிருந்தது
என்ன தந்தியோ?
என்ன துயரமோ?



படிப்பகம்

www.padippakam.com

## சிறிய பொறியும் பெரிய நெருப்பும்

ஆரிய குளத்து சந்தியில் விபத்து
பலாலி வீதி வழியாய் வந்த
பஸ்சுடன் பருத்தித்துறை வீதிவந்த
பொலிஸ்ஜீப் மோதிக் கொண்டு வீட்டதாம்.

பொலிசுலேதான் முழுப்பிழையுமாம்
பொலிஸார் ஜீப்பை நிறுத்தி யிருந்தால்
விபத்தை தடுத்து இருக்க முடியுமாம்
சாரதியைப் பொலிஸ் தெருவில் போட்டு
மிருகத்தனமாய் தாக்கிவிட்டனராம்
வதந்திகள் பற்றி உண்மை தெரிந்தது
பஸ் தொழிலாளர்களின் குரல்கள் எழுந்தது.

"அடித்த பொலிசை தற்காலிகமாய்
வேலைநீக்கம் உடனே செய்க"
"காக்கிச்சட்டையை உடனே கழற்று
விசாரணைகளை உடனே நடத்து"

கோஷங்கள் வானைப் பிளந்து கொண்டிருந்தன
பொலிஸார் ரோந்து புரியத் தொடங்கினர்
மாணவர் கிண்டல் அடிக்கத் தொடங்கினர்
மேலும் தகவல் வந்து குவிந்தன.

"தாக்கப்பட்ட சாரதி வைத்தியர்
சாலையில் அபாய நிலையில் உள்ளான்"
விலா எலும்புகள் முறிந்துவிட்டதாம்.
அவசர அவசரமாக இலிகிதர்கள்
சுவர்க்கடிகார முகப்பினை பார்த்து
வரைந்திடும் நேரம் அலுவலங்கள்
கலைந்திடும் வேளை என்பதை உணர்த்தின.

பிணையிற் செல்லும் கைதிகள் போல
மாணவர் வீடு நோக்கி செல்கிறார்.

தொழிலகங்களிலே உழைத்துக் களைத்த
தொழிலாளர்களின் நினைவு, மாலைக்

 சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

கள் நுரைக்கும் முட்டியுள் வீழ்ந்து
தற்காலிகமாய் துயர் மறக்கின்றனர்
வாகனங்களின் வரிசை ஓட்டம்
புதுவித "றெயினோ" தெருவில் ஓடுது
என்றும் கொள்ளத் தோன்றும் தோற்றம்
அழகிய ராஜபவனியை ஒத்தது.

படமாளிகையை நோக்கி செல்வோர்
நடையில் சினிமா ரீலின் வேகம்
பஸ்கள் போவதும் வருவதுமாக
சேவையில் துரித கதியில் இயங்கின
அந்த வேளையில் ...
ஒருசிறு தீப்பொறி பஸ்நிலையத்தில்
வந்து வீழ்ந்து காட்டுத்தீயானது.

பஸ்கள் ஓடமறுத்து நின்றன
மக்கள் விறைத்து மலைத்து நின்றனர்.
போன பஸ்கள் திரும்பி வந்ததும்
போகத் திரும்பி மறுத்து நின்றன.

கியூக்கள் எல்லாம் வெறித்து கிடந்தன
மக்கள் பதறி ஆலாய்ப்பறந்தனர்
செய்திகள் வந்து குவியத் தொடங்கின
வதந்திகள் அதற்குள் கரையத் தொடங்கின.

நியாயம் கேட்கப் போன மக்களை
பொலிஸார் மோசமாய் அடித்து வைதனராம்
மக்கள் ததிமிதிபட்டு நின்றனர்
பஸ் தொழிலாளர் போர்க்கோலமாயினர்

"எடுத்ததற் கெல்லாம் பொலிஸார் தாக்கினால்
அடுத்தவர் கைகள் புல்லா பிடுங்கும்?"
பிரயாணி ஒருவர் சினத்தோடுரைத்தார்

கதறும் குழந்தையின் வாயில் முலையை
உண்ணக் கொடுத்த பெண்ணொன்று சொன்னாள்
"பெரிய பாவம் றைவரின் பெண்டு
பிள்ளைகள் என்ன பாடு படுமோ?"



படிப்பகம்

"அடித்த பொலிஸை தற்காலிகமாய்
வேலை நீக்கம் உடனே செய்க
பொலிஸார் காடைத்தனம் ஒழிக! ஒழிக!
மீண்டும் மீண்டும் கோஷங்கள் எழுந்தது
வானில் காட்டுத்தீயை மூட்டின
பஸ்கள் நகர மாட்டோமென்று
நிலத்திற் காலை ஊன்றி நின்றன.

கடைகள் இந்தப் புதினம் பார்க்க
நித்திரைவிட்டு எழுந்ததைப்போல
லைட்டை ஏற்றி கண்விழித்தன.

கொழும்பில் இருந்துவந்த புஞ்சி
பண்டா பஸ்ஸை தொடவே மறுத்தான்
மட்டக்களப்பில் இருந்துவந்த
முகமது அவருடன் இணைந்து நின்றார்.

கோஷம் வலுத்துக்கொண்டு இருந்தது
நேரம் கறுத்துக்கொண்டு சென்றது.
குழந்தைகள் அலறித் தொண்டை காய்ந்தனர்
முதியவர் துவண்டு குந்தி கொண்டனர்.

மாணவர் அங்கும் இங்கும் அலைந்தனர்
அலுவலகத்தில் அலுத்துப் போனவர்
இதிலே வந்து மாட்டிக் கொண்டதை
நினைத்து தமக்குள் அலட்டல் வளர்த்தனர்.

ஆயினும் ஆயினும் அந்த மக்கள்
தமக்குள் நீதியை மதித்தே பேசினர்.
"எனினும் இந்தக் காடைப் பொலிஸார்
எப்படி றைவரை தாக்கிட முடியும்?
இந்த பொலிஸார் விட்ட பிழையால்
வந்த வினைதான் இந்தக் கஷ்டம்"
என்று தம் வாயால் திட்டினர்; பேசினர்.

சிகரெட்டின் விலையோ திடீர் என்று
ஐந்து சதத்தால் அதிகரித்துக் கொண்டது.

"வெந்த வீட்டில் லாபம் பிடுங்கும்
நாய்களை அடித்து நொறுக்க வேண்டும்"

சிகரெட் விலையால் சினந்த வாலிபன்
குமுறிய வார்த்தைகளில் கோபம் எரிந்தது.

"கடையின் சொந்தக்காரன் சொன்னால்
நாங்கள் செய்ய என்ன உண்டு?"
விற்பனை பையன் விளக்கம் அளித்தான்.

அரசு அதிபர் கார் நின்றிறங்கினார்
பொலிஸ் அதிகாரிகள் வந்து குவிந்தனர்.

காலை நிலத்தில் ஓங்கி உதைத்து
கையால் கன்னம் தொட்டு விசிறி
இப்படித்தான் நாம் மக்களை உதைப்போம்
இப்படித்தான் நாம் மக்களை அறைவோம்
என்று நடித்துக் காட்டித் தமது
மரியாதை முறைமையைச் செய்தனர் பொலிஸார்.

"அடித்த பொலிஸை தற்காலிகமாய்
வேலைநீக்கம் உடனே செய்க
விசாரணை ஒன்றை உடனே செய்க
இல்லையேல் வேலை நிறுத்தம் தொடரும்"

குமுறும் நெஞ்சக் கோபத்தீயை
கோஷம் ஆக்கி தொழிலாளர் கொட்டினர்.

யாழ் பஸ்நிலைய ஒலிபெருக்கியில்
உயர் அதிகாரி ஒருவர் பேசினார்.

"மக்களுக்காக வேலை நிறுத்தம்
வாபஸ் பெற்று வேலைக்குச் செல்வர்
உங்கள் இதயம் இரக்கம் அற்றதா?
மக்கள் அடையும் துன்பம் கண்டும்
உங்கள் உள்ளம் உருகவில்லையா?
பெண்கள் பிள்ளைகள் வயோதிபர் எல்லாம்
தவிப்பது உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா?
பஸ்ஸை நீங்கள் ஓட்ட வேண்டும்
இல்லையேல் மக்கள் உங்கள் மீது
சீற்றம் கொள்வர் சிந்தித்து செய்யும்"

"அன்னவர் வீடுசெல்லும் வண்ணம்
ஆவன செய்வது எங்கள் கடமை
வேலைக்கு வாரும் விசாரணை ஒன்றை
விளக்கமாய் பின்னர் செய்வோம்" என்றார்.

குமுறி நின்ற மக்கள் எழுந்து
அதிகார குரலுக்கும் பதிலைக் கொடுத்தனர்

"நாங்கள் நடந்து வீடு செல்வோம்
எத்தனை மைல்கள் ஆயினும்
நாங்கள் நடந்து வீடு செல்வோம்
பஸ் சாரதியை அடித்த பொலிசை
உடனே வேலை நீக்கம் செய்க"

நீதியின் பக்கம் மக்கள் நின்று
உரிமைக் குரலை எரிமலையாக்கினர்.

மக்கள் குரலை கேட்டு அந்த
அதிகார குரல்கள் அடைத்து போயின
ஏதோ விளங்கிக் கொண்டவன் போல
ஏழுவயதான பையன் சொன்னான்.

"பொல்லால் அடித்தால் திருப்பி இவர்களும்
அடித்தால் என்ன அம்மா என்றான்"

விளக்கமேதும் இன்றித் தாயார்
மகனின் கேள்வியில் ஒருசுகம் கண்டு
"அடிக்கத்தாண்டா" வேண்டும் என்றாள்.

அலைந்து திரிந்து இனிப்பு விற்றுக்
கொண்டு இருந்த வியாபாரி ஒருவன்
அழுது கொண்டு இருந்த குழந்தை
ஒன்றின் கையில் இனிப்பை நுழைத்தான்
ஒருவிதமான மனிதத் தன்மை
அந்த சூழலை ஆக்கிரமித்து நின்றது.

"துவக்கு வைத்து இருக்கிறார்களே
சுட்டால் என்ன செய்வது அம்மா"

www.padippakam.com

பாரிய அந்தக் கேள்வியின் தவத்தை
அறியாத் தாய் பதிலை உரைத்தாள்
“அவர்கள் துவக்கை பறித்து சுடலாம்”
“எப்படி அம்மா பறித்து எடுப்பது ...?
“அனைவரும் இணைந்தால் அதனைச் செய்யலாம்.”

அம்மாவின் அறிவில் ஏறிய சூடு
அவளின வார்த்தையில் நெருப்பாய் உதிர்ந்தது.

ஆர்வமும் ஆவேசமும் பேசிக் கொண்டதை
காதில் வாங்கிக் கொண்ட ஒருவர்
தனக்குள் நினைத்ததை மறந்து உரைத்தார்.

எதற்கும் எல்லை உண்டு அன்றோ
அடிக்கப்படுவது அடிமையின் வாழ்வு
ஆத்திரம் வந்தால் ஐந்தும் ஐம்பதும்
ஆக்ரோசத்தால் ஒரே வயதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## வாழும் உரிமை எங்கேயுண்டு

மாகோச் சந்தியில் வைத்து இரண்டு
கைகளும் கால்களும் முளைத்த ஒருவித
மிருகக் கூட்டம் வந்து என்னைத்
தாக்கி விட்டு ஓடி மறைந்தது.

நினைத்துப் பார்த்தேன் முன்னர் என்னை
மாவைக் கந்தசுவாமி கோயிலில்
முன்றலில் வைத்துத் தாக்கிய அந்த
மிருகத்தின் சாயலை ஒத்தே இருந்தது.

இன்னொரு இடத்தில் வைத்து என்னைத்
தாக்கிய கொடிய மிருகம் போலும்
உள்ளதே என்று நினைவில் வந்தது
கொழும்பில் வேலை நிறுத்தம் செய்த
நேரம் என்று நெஞ்சம் சொன்னது.



சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

அடடா அந்த மலையில் வைத்து
நாங்கள் எழுந்து உரிமை கேட்டுப்
பனியில் உறைந்து வெயிலில் உலர்ந்த
போதும் இந்த மிருகமே வந்து
தாக்கிய கோரமும் ஞாபகம் வந்தது.

அன்றும் பார்த்தேன் இன்றும் பார்த்தேன்
மிருகம் வந்து தாக்கியபோது
அருகில் இருந்த அரசின் காவலர்
சும்மா ரசித்துக் கொண்டு நின்றனர்
அவற்றுடன் இணைந்து தாக்கவும் செய்தனர்.

மாகோச் சந்தியில் இனத்தின் பெயரால்
மாவைக் கோயிலிற் சாதியின் பெயரால்
மலையில், கொழும்பில் வர்க்கத்தின் பெயரால்
இரத்த தானம் செய்த எனக்கு
வாழும் உரிமை எங்கேயுண்டு?

அடக்கப்பட்ட சாதியும் இனமும்
வர்க்கத் தீயில் குளிக்கும் போது
ஈழம் முழுதுமே எரிந்து பொங்கும்
விடுதலைப் போரில் மட்டுமேயுண்டு.

சுபத்திரன்



படிப்பகம்

www.padippakam.com

# இசைப் பாடல்கள்

விடிந்தது விடிந்தது உலகம்
வீசிடும் ஆதவன் இசையினில் மலர்ந்தது.

சுபத்திரன்

படிப்பகம்

www.padippakam.com

# உழவு மகன் எழுந்தான்

உழவு மகன் எழுந்தான்
உழைப்பின் இறைவன் இவனென
உலகும் வணங்கிட ........... (உழவு ...)

ஏரினைத் தூக்கி பாரினைக் காக்கும்
உழவன் எங்கள் உழவன்
காலைக் கதிரவன் கைகளை நீட்டி
வாழ்த்த எழுந்தான் உழவன் ... (உழவு ...)

காற்றினைத் தின்று சேற்றினைத் தின்று
இரத்த வியர்வை விதைத்தான்
ஆற்றினைக் கட்டி ஆவியைக் கட்டி
உலகம் வாழ உழைத்தான் .... (உழவு ...)

வாட்டும் வறுமைகள் நீட்டும் கொடுமையைக்
காலா லுதைத்தவன் எழுந்தான்
பூட்டுத் தகர்த்திடப் பொங்கும் புதுமையில்
கூட்டும் நெருப்பென எழுந்தான் .... (உழவு ...)

பாட்டின் தலைவனாய் எழுந்தான்
நாட்டின் தலைவனாய் எழுந்தான்
பாரினை மீட்டி எழுந்தான் ..... (உழவு ...)

மறுமலர்ச்சி 1981 மே — ஜூன் இதழ்



படிப்பகம்

www.padippakam.com

## ஓர் இசைப்பாடல்

போலிப் பாடகர்களே
ஈழத்தின் சார்பில் உங்கள் முகத்திற்
காறி துப்புகிறேன்
சீ ... தூ ...

ஆதவன் எழுந்தான்
அலைகடல் திறந்து மீனவன் எழுந்தான்
ஆலையில் மைந்தன் விடிந்ததென்றெழுந்தான்
உழவு மகன் எழுந்தான்.
இளைஞன் ஓ... என எழுந்தான்

விடிந்தது விடிந்தது உலகம்
வீசிடும் ஆதவன் இசையினில் மலரந்து
துடிப்புடன் எழுந்தது உலகம்
துணிவுடன் எழுந்தது உலகம்



படிப்பகம்

www.padippakam.com

இளமையில் எழுந்தது வீரம்
இளமாதவன் நடையினில் பிறந்தது தீரம்
உலகினை மாற்றிடும் கீதம் - அது
இருப்பவன் கொடுப்பவன் இலையெனும் உலகம்
விடிந்தது விடிந்தது உலகம் ...
நதிகளை மறிக்கும் கைகள்
நெஞ்சை நிமிர்த்திடும் மலைகளை முறித்து
அலைகளைக் குடித்திடும் சக்தி - இளம்
வீரனே உனது உடன் பிறப்பையா

உனக்கே சொந்தம் உலகம் - உன்
ஆற்றல் மிகுந்த கரங்களால் உலகை
விடுதலை செய்வாய் தோழா - அதன்
விலங்கினை முறிப்பாய் தோழா
உலகம் சமைப்பாய் தோழா - புது
உலகம் சமைப்பாய் தோழா

விடிந்தது விடிந்தது உலகம் ...

இளைஞனே இளைஞனே வாழி - இங்கு
உலகினை மாற்றும் கரங்களே வாழி
உண்மையின் நெஞ்சமே வாழி - உன்
உயிரும் மானமும் கவிதைகள் தீட்டிடப்
பாட எழுந்தது வாழி - இந்தப்
பாரினை மாற்றிடும் சக்தியே வாழி.

விடிந்தது விடிந்தது உலகம்
வீசிடும் ஆதவன் இசையினில் மலர்ந்து
துடிப்புடன் எழுந்தது உலகம்
துணிவுடன் எழுந்தது உலகம்
நெருப்புடன் எழுந்தது உலகம்.



படிப்பகம்

www.padippakam.com



புரட்சிக்காரனான சுபத்திரன் மிகுந்த மனித நேயமும், இரக்க சுபாவமும் இளகிய மனமும் கொண்டவன். தன்னலம் என்பது கடுகளவு தானும் சுபத்திரனிடம் இருக்கவில்லை.

சுபத்திரனின் கருத்துக்களின் வாகனம் பேச்சும் கவிதையும் ஆகும். கவிதையை அவன் ஓர் அரசியல் ஆயுதமாகவே பிரயோகித்தான்.

கட்சியினதும், கட்சிக் கொள்கைகளினதும் கட்டுப்பாட்டிற்கு விசுவாசமான ஒரு கவிஞனாகவே அவன் இருந்தான்.

அடக்கப்பட்டவர்களினது குரலாக அவன கவிதைகள் ஒலித்தன. சாதியின் பெயரால், இனத்தின் பெயரால், நிறத்தின் பெயரால், வர்க்கத்தின் பெயரால், எந்த உருவிலும் அடக்கப்படும் மக்கள் பக்கம் அவன் குரல் ஓங்கி ஒலித்தது.

சுபத்திரன் பற்றி, சுபத்திரனின் கவிதைகள் பற்றி இன்னுமும் சரியான மதிப்பீடு இடம் பெறவில்லை. குறிப்பாக ஈழத்துக் கவிதை உலகிலும் சிறப்பாக முற்போக்கு இலக்கிய உலகிலும் அவன் ஸ்தானம் நிர்ணயம் செய்யப்படவில்லை.

அரங்கு இன்றி வட்டாட முடியுமா? சுபத்திரனின் கவிதைகளை ஒன்றாகக் காணாமல் விமர்சனம் செய்ய முடியுமா? அரங்கு இப்போ கண்முன் தோன்றுகிறது. சுபத்திரனின் கவிதைகள் தொகுதியாக வெளிவருகின்றன. சுபத்திரனை மக்களும், விமர்சகர்களும் அறிந்து கொள்ளப் பெரிய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

மக்களே மகாசக்தி என மதித்த சுபத்திரனின் கவிதைகள் பற்றிய மதிப்பீட்டையும் மக்களே வழங்குவார்கள்.

**சி. மௌனகுரு**

ISBN No : 955-8637-12-2

படிப்பகம்